362

# மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை

ந. வேலுசாமி



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

# மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோ தனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்கு கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை ஓர் எழுத்தர் எழுதுகிறார். எழுதும கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம். (நாகார்ஜுன மலைச் சிற்பம். கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. பட உதவி: நேஷனல் மியூசியம். புதுதில்லி.)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை

ந. வேலுசாமி

சாகித்திய அக்காதெமி

*Manonmaneeyam Sundaram pillai :* Monograph in Tamil by
Na. Velusamy, Sahitya Akademi, New Delhi,(2001) Rs. 25/-

© சாகித்திய அக்காதெமி
முதல் வெளியீடு 2001
**ISBN 81-260-1129-7**

**சாகித்திய அக்காதெமி**
தலைமை அலுவலகம்:
இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110001

*விற்பனை*
'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001.

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக் கட்டிடம்,
டாக்டர் அம்பேத்கார் வீதி, பெங்களூர் 560 001.

சி ஐ டி. வளாகம், டி டி.டி.ஐ அஞ்சல், தரமணி,
சென்னை 600 113

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பய் 400 014.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கொல்கத்தா 700 053

விலை ரூ 25

ஒளிக் கோப்பு : பிரசிஸ்தா கிராஃபிக்ஸ், சென்னை
அச்சகம்: சென்னை ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-6.

# இதயம் பேசுகிறது...

அன்னைத்தமிழிலும், ஆங்கிலத்திலும் நூல்கள் எழுதியிருக்கிறேன். அவற்றில் மைய, மாநில அரசுகளின் பரிசு பெற்றவை உண்டு இலக்கிய நிறுவனம், சமூகப் பண்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் பரிசு பெற்றவையும் உண்டு

நான்கு நூல்கள் பல்கலைக் கழகம் மற்றும் கல்லூரிகளில் பட்ட வகுப்பு மாணவர்களுக்குப் பாட நூல்களாக விளங்கியிருக்கின்றன; விளங்கி வருகின்றன. பல நாள், வார திங்கள் இதழ்கள் (தமிழிலும் ஆங்கிலத்திலும்) அவ்வப்போது என் எழுத்துக்களை வெளியிட்டிருக் கின்றன இவையெல்லாம் எனக்குக் கிடைத்த இலக்கியக் கௌரவங்கள், இலக்கிய அங்கீகாரங்கள், எனினும்- சாகித்திய அக்காதெமி, மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை அவர்களைப் பற்றித் தனி நூல் எழுதும் வாய்ப்பை அளித்ததும் உள்ளபடியே புளகாங்கிதம் அடைந்தேன் அந்நிறுவனத்திற்கு என் முதல் மரியாதை உரியது.

இப்பணியை நான் மேற்கொள்வதை அறிந்ததும் என்னை ஊக்கப்படுத்தி ஆக்கத்தில் ஈடுபடத் தூண்டியவர் என் இனிய பெங்களூர்வாசி கல்லூரித் தோழர் 'காவ்யா' டாக்டர் சு.சண்முகசுந்தரம் அவர்கள்தாம்

இதற்காக பயபக்தியோடு நான்கு மாதங்கள், என் ஜீவனம் ஆகிய கல்லூரிப் பணிகளுக்கிடையே இரவுபகல் பாராது உழைத்தேன். கடுமையாக உழைத்தேன் பிஎச்.டி., பட்டம் பெறக் கூட இவ்வளவு உழைத்தேனா என்பதை மறந்துவிட்டேன்!

சில தகவல்களுக்காக, நூல்களுக்காக நூலகங்கள், கல்வி நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள், பதிப்பகங்கள், தனிப்பட்டவர் களின் இல்லங்கள், என்று ஓயாமல் அவர்களின் வாயில்முகப்புகளில் தவமிருந்தேன்.

2001 ஜூன் திங்களில், சுந்தரனார் வாழ்ந்த திருவனந்தபுரம் சென்று, கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் காரியவட்டம் டாக்டர் கி நாச்சிமுத்து அவர்களையும், டாக்டர் சி. சுப்பிரமணியம் பிள்ளை அவர்களையும் சந்தித்தேன். அவர்கள் அளித்த ஆதரவு, தகவல்கள், நூல்கள் அளித்து நெறிப்படுத்திய பான்மையை எப்படி எடுத்துரைப்பேன்!

அன்றே, பேராசிரியர் முனைவர் ச.மீனாட்சிநாதன் அவர்களையும், அடுத்தநாள் காலை- மனோன்மணீயம் சுந்தரனாரின் ஒரே மகன் பி எஸ்.நடராஜபிள்ளை அவர்களின் உற்ற நண்பராகத் திகழும் கவிமாமணி பி.குமரேசன் அவர்களையும் சந்தித்தபோது, அவர் தந்த நூல்கள் தகவல்கள் மெய்ம்மறக்கச் செய்தன ச மீனாட்சிநாதன் அவர்கள் அந்த அடைமழை இரவில் எனக்காக சைவப்பிரகாச சபைக்கு வந்து, எல்லா உதவிகளையும் செய்ததோடு சபையைச் சுற்றிச் காட்டிக் கூறிய அமுதமொழிகளை மறக்க முடியுமா! சபையின் மற்ற நிர்வாகிகளும் அவ்வண்ணமே ஆர்வம் காட்டினர்.

சென்னையில், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக உரிமையாளர் இரா.முத்துக்குமாரசாமி அவர்களும், அவர் நிறுவன அலுவலர்களும், மறைமலை அடிகள் நூலகரும் கேட்டபோது கேட்ட குறிப்புகக்களை முகம்சுளிக்காமல் வழங்கியதை என்னென்பேன்!

டாக்டர் உ வே.சா. நூலகத்தில் நிர்வாகிகளும், நூலகரும், பணியாளர்களும் உதவியதை என் நெஞ்சம் மறக்காது. என்னுடன் வந்து, தேனீயாய்ச் சுழன்று எனக்குத் தகவல் தேடித்தந்து வாழ்த்திய 'குறளாய்வுச் செம்மல்' என் பேராசிரியர் கருவை. பழனிசாமி அவர்களின் நன்னெஞ்சை எப்படிப் போற்றுவேன்; சென்னைப் பல்கலைக்கழகத்தின் வயது வந்தோர் மற்றும் தொடர் கல்வித் துறையில் பணியாற்றும் இனிய நண்பர் டாக்டர் எஸ் ஆராவமுதன் அவர்களை மறப்பேனா;

என்னுடைய இந்த தவப்பணியைத் தன் பணியாகவே எடுத்துக் கொண்டு தொடக்கம் முதல் இறுதிவரை என்னுடன் இருந்து உதவிய என் கெழுதகை நண்பர், தலைமை ஆசிரியர் 'சிலப்பதிகார ஆய்வாளர்', 'கருமயோகி', முனைவர் வீ. மாரிமுத்து அவர்களுக்கு நன்றி கூறுவது, எனக்கு நானே கூறிக் கொள்வது போலாகும். தட்டச்சுப்படியைக் கண்ணுற்று ஆலோசனை வழங்கி வாழ்த்திய என் பேராசிரியப் பெருந்தகை கல்லூரிக் கல்வி முன்னாள் இயக்குநர் டாக்டர் கா. மீனாட்சிசுந்தரனாரின் சான்றாண்மையை வணங்குதல் அன்றி வேறு கைம்மாறு செய்ய இயலாதவன் நான். வழக்கம் போல் என்னை இயக்கும் 'இலக்கிய சக்தி' என் மனைவி சரோஜாவேலுசாமிக்கு என் போற்றுதல்!

மேலும், 1970, ஜுன் திங்கள் 17ஆம் நாள் அன்று தமிழக அரசின் பொதுத்துறை, பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை அவர்கள் தன்னுடைய மனோன்மணீயம் நூலில் தமிழ்த்தெய்வ வணக்கமாக இயற்றிய 'நீராரும் கடலுடுத்த...' என்னும் பாடலை அரசு நிகழ்ச்சிகள் தொடங்கும்போது கடவுள் வாழ்த்தாகப் பாட வேண்டும் என வெளியிட்ட அரசு ஆணை

கிடைக்க வழிகாட்டிய தமிழ்நாடு ஆவணக் காப்பக ஆணையர் அவர்களுக்கும், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் அவர்களுக்கும், மற்றும் ஆணையின் நகலை உதவிய தமிழக அரசின் பொதுத்துறைக்கும் என் மனம்கனிந்த நன்றி உரியது

மேற்குறிப்பிடப்பெற்றவர்களுக்கும், இந்நூலாக்கத்தில் தொடர்பு கொண்ட இதரர்களுக்கும் நன்றி! நன்றி! நன்றி! .

**நா.வேலுசாமி**

**ஈரோடு,**
22.08.2001.

# உட்பொருள்


| | | |
|---|---|---|
| இதயம் பேசுகிறது | | 5 |
| 1 | பிறப்பு - இளமை - கல்வி | 11 |
| 2 | தத்துவம் - வரலாறு - தமிழ் | 25 |
| 3 | நாடக மாண்பு | 39 |
| 4 | திருஞான சம்பந்தர் - கால ஆராய்ச்சி | 54 |
| 5 | நூற்றொகை விளக்கம் | 68 |
| 6 | திருவிதாங்கூர் - மன்னர் வரலாறு | 83 |
| 7 | சைவப்பிரகாச சபை | 95 |
| 8 | பிற எழுத்தோவியங்கள் | 108 |
| முடிவுரை | | 121 |
| வாழ்க்கைக் குறிப்புகள் | | 122 |
| பின்னிணைப்பு | | 124 |
| துணை நூற்பட்டியல் | | 131 |

# தமிழ்த்தாய் வாழ்த்து

ராகம்: மோகனம் தாளம்: திஸ்ரம்

*நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்*
*சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்*
*தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே*
*தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்*
*அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற*
*எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே -உன்*
*சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து*
*வாழ்த்துதுமே வாழ்த்துதுமே வாழ்த்துதுமே*

சுரப்படுத்தியவர்
'மெல்லிசை மன்னர்' எம்.எஸ். விசுவநாதன்

# 1
# பிறப்பு - இளமை - கல்வி

அன்னைத் தமிழுக்கு 19ஆம் நூற்றாண்டில் அணிசெய்த சான்றோர்களில் முன்னணியில் நின்று நிலைபெற்றிருப்பவர் பேராசிரியர் 'மனோன்மணீயம்' பெருமாள் பிள்ளை சுந்தரம்பிள்ளை.

இவர்தம் பிறப்பு, இளமை, கல்வி ஆகியவை மட்டும் அல்லாமல், கடின உழைப்பு, விடா முயற்சி, பிறர்க்கு உதவும் பாங்கு, நன்றிமறவாமை, உண்மையை யாரிடத்தும் எவ்விடத்தும் துணிந்து நிலைநிறுத்தும் கொள்கை போன்ற இன்னோரன்ன இயல்புகள் எல்லாம் பிறரும் கைக்கொண்டு முன்னேறத்தக்கனவாகும்.

இத்தகைய தமிழ்ச் சான்றோரைப் பற்றி அறிந்து, உணர்ந்து, நெகிழ்ந்து எழுதுவதே பேரின்பம் தரும் தமிழ்ப்பணியாய் அமைகிறது எனின் மிகையன்று

கி.பி ஆயிரத்து எண்ணூறு முதல் தொடங்கி காலச் சூழலில் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை வாழ்ந்தபோது காலனியாதிக்கம், முதலாளித்துவம் போன்ற சமுதாயச் சீர்கேடுகள் கோலோச்சி வந்தன.

*'' அடியேன் கடையேன் அறியாச் சிறியேன்*
*கொடுமலையாளக் குடியிருப்புடையேன்*
*ஆயினும் நீயே தாயெனும் தன்மையின்''*

என, மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையே மனோன்மணீயம் நாடகப் பாயிரத்தில், தமிழைத் தாயாகப் பாவித்துத் தன்னடக்கத்தோடு, தன் பிறந்த பிரதேசத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்.

இருப்பினும் இவர்தம் மூதாதையர் எங்கிருந்து ஆலப்புழையை அடைந்தனர் என்பதில் தனித்தனிக் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. மதுரையில் இருந்து வந்தனர் என்று பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையும், கவிமாமணி பி. குமரேசனும், தஞ்சாவூரிலிருந்து வந்தனர் என்றும் எஸ். மீனாட்சிநாதனும், திருநெல்வேலியிலிருந்து வந்தனர் என்று எம். ஷீலாவும் குறிப்பிட்டுள்ளனர்.

எப்படியிருப்பினும் கொடுமலை யாளக் குடியிருப்பில் பிறந்தாலும் அவர் மதுரை சோமசுந்தரக் கடவுள் அருளால் பிறந்த சேரநாட்டுச் செந்தமிழர்.

## பிறப்பு

திருவிதாங்கூர் வரலாற்றில் முக்கிய இடம்பெற்றிருக்கும் திவான் இராஜாகேசவதாஸ், அன்றைய திருவிதாங்கூர் துறைமுகப்பட்டின மாகவும், இன்றைய கேரளத்தின் துறைமுகப்பட்டினமாகவும் விளங்கும் ''கிழக்கு வெனிஸ்'' என்று கூறும் அளவுக்கு இன்று புகழ்பெற்றிருக்கும் அன்றைய ஆலப்புழையை வளர்ச்சியடையச் செய்ய, தமிழகத்தி லிருந்து பல குடும்பங்களை வரவழைத்தார். அவ்வாறு வணிகம்புரிய வந்த வேளாளர் குடும்பங்களில் ஒன்றே மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையின் பாட்டனார் குடும்பம். பாட்டனார் பெயர் அர்ச்சுனன் பிள்ளை. அக்குடும்பத்திற்குத் தெக்கேக்கரக் குடும்பம் என்பது பெயர் (கவிமாமணி பி. குமரேசன் வடக்கேக்கர குடும்பம் என்று குறிப்பிடுவார்)

தெக்கேக்கர குடும்பம் என அழைக்கப்பெற்ற அர்ச்சுனன் பிள்ளையின் மகன் பெருமாள் பிள்ளை. பெருமாள் பிள்ளை மாடத்தி அம்மாள் எனும் நற்குண நங்கையை மணம்புரிந்து இல்லறத்தை நல்லறமாக நடாத்தி வந்தார். வணிகத்தின் செழிப்பு, அவர்கள் வாழ்க்கையிலும் திகழ்ந்தது. வாழ்க்கைச் செழிப்பிற்கு வித்திட்டது, வணிகச் செழிப்பு வணிகச் செழிப்பிற்கு வித்திட்டவர்கள் ஆலப்புழையைத் துறைமுகப் பட்டினமாக மாற்றப் பாடுபட்டவர்கள், மன்னர் கார்த்திகைத் திருநாள் இராமவர்மா மற்றும் அவர் ஆட்சியில் முதல் திவானாகத் திகழ்ந்த ராஜா கேசவதாஸ் ஆகியவர்கள் ஆவர் ராஜா கேசவதாசுக்கு 'வலிய திவான்ஜி' என்ற பட்டப் பெயருண்டு இவர் மீது 'திவான் வெற்றி' என்ற வில் கவிதையைப் பாடியிருக்கிறார் தமிழ்ப்புலவர் திருவனந்தம் பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது

இவ்வளவு பெருமையையும் வரலாறும் கொண்ட ஆலப்புழைத் துறைமுகப்பட்டினத்தில் அரசின் அழைப்பினை ஏற்று ஆடை வணிகமும் பிற வணிகமும் புரிந்து வந்த பெருமாள் பிள்ளை - மாடத்தி அம்மாள் ஆகியோருக்கு அரும் ஆண்மகவாகப் பிறந்தவர்தாம் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை. அவர் பிறந்தது கொல்லம் ஆண்டு 1030. பங்குனி மாதம் 28ஆம் நாள். அதாவது 5 4.1855.

ஏற்கனவே, கடவுட்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று, மனிதப் பற்று ஆகிய பற்றுக்களோடு, பொறுமை, அடக்கம், நயம்படப் பேசுதல் ஆகிய நற்குணங்களை இயல்பாகப் பெற்றிருக்கும் பெருமாள் பிள்ளைக்குப் பிறந்த மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை, தனது ஐந்தாம் அகவையிலேயே ஒரு தமிழ்ப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். பள்ளிக் கல்வியுடன், பெருமாள்பிள்ளை தன் மகனுக்கு அவ்வையாரின் ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, நன்னெறி, நீதிநெறி

விளக்கம் போன்ற நீதி நூல்களையும், சைவசமயக் குரவர்களின் தேவாரம், திருவாசகம் போன்ற அருள் நூல்களையும், மற்றும் திருக்குறள், நாலடியார் போன்ற அறிவு நூல்களையும் சிறிது சிறிதாகக் கற்பித்து வந்தார். இவ்வாறு அவர் தமிழ்ப்பற்றையும், சைவப்பற்றையும் ஒருங்கே பெற்றார். தனது பன்னிரண்டாம் அகவையிலேயே சிறந்த தமிழ்மொழி அறிவு பெற்றவராய் விளங்கினார்.

பிறகு, ஆலப்புழையிலேயே ஓர் ஆங்கில வெர்னாகுலர் பள்ளியில் சேர்க்கப்பட்டு நுழைவுநிலைத் தேர்ச்சி (Pre-Entrance) வரை பயின்றார். அவர்தம் ஆசிரியர்களிடம் பணிவு, அடக்கம், அன்பு ஆகிய பண்புகளோடு நடந்துகொண்டார். படிப்பில் தனிக்கவனம் செலுத்தினார். அவர் வகுப்புப் பிள்ளைகளிடம் 'நல்லபிள்ளை' என்றே பெயர் வாங்கினார் ஆசிரியர்களின் பாராட்டைப் பெற்றார். நன்கு பயின்று தேறினார். இதனால் அப்போது அப்பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்த திரு.பீல் (Mr. Peel) இவரின் சுறுசுறுப்பு, மதிநுட்பம் ஆகிய அருங்குணங்களைக்கண்டு, ''இவர் பிற்காலத்தில் பெரும்புகழ் எய்துவார்'' எனப் பலமுறை பலரிடத்தும் கூறியுள்ளார்

அதன்பின்னர் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை திருவனந்தபுரம் பேரரசர் கல்லூரியில் சேர்ந்து உயர்நிலைக் கல்வி கற்கத் தொடங்கினார். அந்த ஆண்டு, பத்தாவது வகுப்பில், முதல் வகுப்பில் முதல் மாணவராகத் தேறினார். இதனால் அரசினர் திங்கள்தோறும் ரூபாய் எட்டை உதவித் தொகையாக இவருக்கு வழங்கினர். இந்த உதவித் தொகை பி ஏ முடிக்கும்வரை அவருக்குக் கிடைத்தது. அரசு ஆங்கிலக் கல்லூரியில் படித்த அவருக்கு ஆசிரியர்களாக அமைந்தவர்கள் பென்சிலிசேசையா, பிள்ளைவீட்டின் மாதவன் பிள்ளை, பண்டிதன் சாமிநாதபிள்ளை ஆகியோர் ஆவர்.

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை தம் படிப்பில் கண்ணும் கருத்துமாக இருந்து 1876ஆம் ஆண்டில் தனது 21 வது வயதில் பி ஏ. வகுப்பில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். இந்தத் தேர்ச்சி, திருவனந்தபுரத்தைப் பொறுத்தவரை முதல் நிலை மாணாக்கராகவும், சென்னையில் முதல் நான்கு மாணவர்களில் ஒருவராகவும் அமைந்திருந்தது. கல்லூரியில் இவரோடு உடன்பயின்ற மாணவர்களில் சர்.டி மாதவராயரின் மகன் இரங்கராயர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையின் நெருங்கிய நண்பராக விளங்கினார் அன்றைய கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றிய டாக்டர் ராஸ்துரை இவரிடம் மற்றொரு தந்தைபோலப் பேரன்பு பூண்டிருந்தார். உடன் பயிலும் மாணவர்களுடன் விளையாட்டுகளில் ஈடுபடாமல் ஒதுங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாம். கல்லூரியில் பயிலுங் காலத்திலேயே

இவர் அறிவுத் தேடலில் - ஆராய்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருந்தார்

தான் முயற்சிசெய்து வளர்த்துக் கொண்ட தமிழறிவு நாகை நாராயணசாமிப் பிள்ளை என்னும் தமிழாசிரியரால் மேலும் மெருகூட்டப்பட்டது. நாகைப்பட்டணத்தில் புத்தகக் கடை வைத்திருந்த நாராயணசாமிப் பிள்ளையிடம் யாப்பருங்கலக்காரிகையை ஐயம்திரிபு அறக் கற்றுக் கொண்டார். முதுகலைத் தேர்வுக்காக சில தினங்கள் சென்னையிலேயே தங்கித் தேர்வுக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டார்

1880ஆம் ஆண்டில் தத்துவத்துறையில் (Philosophy) முதுகலைப் (எம் ஏ ,) பட்டம் பெற்றார், 'அறிவின் கதிர்' எனத்தகும் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை

1882-1885 ஆம் ஆண்டுகளில் திருவிதாங்கூர் அரசுப் பணியில் இருந்தபோதே சட்டக் கல்வியும் பெற்றார்.

''என்னுடைய மிகச் சிறந்த மாணவர்களுள் ஒருவனான நீ வகுப்பில் என்றும் நல்லவனாகவும், தலைமையானவனாகவும் விளங்குகிறாய்'' என்ற சட்டப் பேராசிரியர் ஓம்ஸ்பி (Ormsby) -யின் பாராட்டு மொழிகள் அவரின் நுண்மாண் நுழைபுலத்தைத் தெளிவாக்கும்.

திருநெல்வேலியில் ஆசிரியர் பணி ஆற்றிக் கொண்டிருக்கும் போதுதான் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளைக்குக் கோடகநல்லூர் சுந்தரம் சுவாமிகளுடன் தொடர்பு ஏற்பட்டது. இருவரும் பலமுறை தத்துவ உரையாடல்களில் ஈடுபட்டிருந்ததும் கருத்தில்கொள்ள வேண்டியதாகும்

1876-ஆம் ஆண்டில் தான் பயின்ற திருவனந்தபுரம் அரசர் கல்லூரியிலேயே ஆசிரியர் பணி ஆற்றும் நல்வாய்ப்பு மனோன் மணீயம் சுந்தரம்பிள்ளைக்குக் கிட்டியது. இதற்குக் காரணம் திரு. ராஸ் (Mr. Ross) என்னும் அக்கல்லூரித் தலைவரேயாவார். அங்குப் பயிலும் எப்.ஏ. இளங்கலை மாணவர்களுக்கு வரலாறும் (History), தத்துவநூலும் (Philosophy) - கற்பிக்கும் ஆசிரியராய் அமர்த்தப் பட்டார். இதற்கு இவரின் பணிவு, பண்பு, கல்வித் தகுதி ஆகியவை காரணம்.

தாம் மறுநாள் கற்பிக்கவிருக்கும் பாடங்களை முதல் நாளிலேயே நன்கு படிப்பார். அதற்குப் பல நூல்களைப் படித்து அந்தப் பாடத் திற்குரிய கருத்துக்களைத் திரட்டுவார். அவற்றைச் சாதாரண மாணவர் களும் எளிதில் புரிந்து கொள்ளுமாறு நன்முறையில் விரித்துரைப்பார்.

மாணவர் எத்துணை முறைகேட்டாலும் சலிப்பின்றிச் சினமின்றிக் கூறுவார். ஒவ்வொரு மாணவரையும் தனித்தனியே சந்தித்துப் படிப்பில் ஊக்குவிப்பார். அவர்தம் ஐயங்களை மகிழ்வோடு ஏற்று நீக்குவார். இவ்வாறு நல்லாசிரியப் பண்புக்கு இலக்கணமாகத் திகழும் இவரை எந்த மாணவன்தான் வெறுப்பான்?

பாடம் கற்பிக்க வேண்டுமென்றால், பண்புநிறைந்த, அறிவுசிறந்த என் அன்பு மாணவன் மாணவர்களின் பெருமதிப்பிற்குப் பாத்திரமான ஆசிரியர் சுந்தரம்பிள்ளையிடம் பயிற்சி பெற வேண்டும் என அடிக்கடி திரு.ராஸ், தன் மகன் யு.டி. ராஸ் என்பாரிடம் கூறிப் பெருமைப் படுவாராம்

அவரது பெயர் திருவனந்தபுரம் எங்கும் நன்முறையில் பரவலாயிற்று இவ்வாறு அவர் புகழ்பெறும்போது அகவை அவருக்கு இருபத்து ஒன்று என்றால் வியப்பாக இருக்கின்றதன்றோ? இருப்பினும் உண்மை அதுதான்.

இருபத்தொன்றாம் வயதில் பி ஏ , பட்டம் பெற்றார் அந்த ஆண்டிலேயே விரிவுரையாளர் பதவியும் பெற்றார். அந்த ஆண்டு முடிவதற்குள் அவருக்குத் திருமணமும் இனிதே நிகழ்ந்தது.

எது அந்த ஆண்டு? 1877.

1877ஆம் ஆண்டு தைத் திங்கள், மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை சிவகாமி என்னும் மங்கைநல்லாரை மணந்தார் பெருமாள் பிள்ளைக்கு மாடத்தி அம்மையார் வாய்த்ததைப் போலவே, இவருக்கு சிவகாமி அம்மையார் மனைவிளக்காய் அமைந்தார் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் வாழ்வில் ஆராய்ச்சியும் கல்வியும் இரு கண்கள். மனைவி அமைந்தவிதத்தில், சற்றும் கவலையின்றி ஆராய்ச்சிப் பணியில் மூழ்கினார்

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை நடுத்தரமான உயரமுள்ளவர் சற்றே ஸ்தூலித்த உடல். மாநிறம். அபூர்வ சோபையோடு வசீகரமாய் அமைந்த முகம் அறிவொளியும் அன்பும் மிளிர்ந்து அமர்ந்து நோக்கும் கண்கள். புன்னகை தவழும் இதழ்கள். இனிமையும் அழகும் ததும்பும் பேச்சு வன்மை. இவர் செல்லுமிடமெல்லாம் கல்வியாளர் கூட்டம்தான் சுற்றி இருக்கும். இலக்கியம், சரித்திரம், தத்துவ சாத்திரம் ஆகிய ஆய்வில் தோய்ந்திருந்தார்.

இனிய இல்லறத்தின் நற்பயனாய் 1891ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10ஆம் நாள் ஆண் குழந்தைக்குத் தந்தையானார். தன் புதல்வனுக்கு மரபுப்படி தன் தந்தையின் பெயருடன் இணைத்து 'நடராஜ பெருமாள் பிள்ளை' எனப் பெயரிட்டார். மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையிடம்

மன்னர் மூலந்திருநாள் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பன்னிரண்டாம் வியாழனில் பிறந்த மகன் வறுமைத் துன்பத்தில் வாடுவான் என்பது கணியன் தந்த செய்தி. நடராஜபிள்ளை பன்னிரண்டாம் வியாழனில் பிறந்தவர் ஆதலின் அக்குழந்தைக்காக வாழ்நாள் முழுமையும் திங்கள்தோறும் பொருள் வழங்கினார் என, பல்கலைச் செல்வர் சுந்தரனார் என்னும் நூலில் பி குமரேசன் தெரிவித்துள்ளார்.

ஒரே மகன் என்ற நிலையில் பாசத்தையும் பண்பையும் கொட்டி வளர்த்தனர் பெற்றோர். இதனால் தம் ஆசிரியர் கடமையிலிருந்து அவர் சிறிதும் பிறழவில்லை. தம் அன்னையார் 1878இல் மறைந்து பல்லாண்டுகளுக்குப் பின்னும் தாயின் ஆண்டுச் சடங்கினை ஆற்றத் தவறவில்லை. நடராஜபிள்ளையின் தொடக்கக் கல்விக்கு சுந்தரம் பிள்ளையே முதற்குருவாகத் திகழ்ந்தார். தன் ஆறு வயதுக் குழந்தையைக் குதிரை வண்டியில் ஏற்றிக் கல்லூரி அழைத்துச் சென்று மகிழ்ந்திருந்தார் எனில், அவர்தம் புத்திர பாசத்தை நன்கு உணர்ந்து கொள்ளலாம் அன்றோ? தன் மகன் சட்டத்துறையில் பட்டம் பெற வேண்டும் என்று கனவு கண்டார் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை. ஆனால் அது கலையாத கனவாகவே நிலைத்துவிட்டது.

தாயின் மறைவிற்குப் பிறகு, தன் தந்தையை முன்னிலும் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டார் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை. தன் ஊதியத்தைத் தன் தந்தையிடம் முழுமையாகக் கொடுத்து விட்டு, அவரிடமிருந்தே தன் தேவைக்கு அவ்வப்போது பெற்று வந்தார். வாழ்க்கைத் துணையை இழந்த தன் தந்தையின் மனதை ஆற்றும் வகையில் அவர் மேற்கொண்ட ஓர் உளவியல் செயற்பாடாகும் இது. *எத்தனை மக்கள் இவ்வாறு செயற்பட்டிருக்கக் கூடும்?*

1886 இல் அருமைத் தந்தையும் இவ்வுலக வாழ்வை நீத்தார். இவ்வாறு, அவர் வாழ்க்கையின் எதார்த்தங்களைச் சந்தித்து வரும்போது கடமைமாற்றம் மட்டும் எவ்வித மாற்றமும் இன்றி அணுகியது. திருநெல்வேலியில் ஆங்கிலக் கல்விச் சாலை ஒன்று தலைவர் இல்லாமல் மீகாமன் இல்லாப் படகுபோல் தத்தளித்தது. அப்போது சென்னை, கல்வித்துறைத் தலைவராக இருந்த டாக்டர். டங்கன் (Dr. Duncun) என்பார் திருவனந்தபுரம் அரசு கல்லூரித் தலைவர் திரு. ராசுவிடம் 'தக்கவர் ஒருவர் வேணடுமு' என்று வேண்டுகோள் விடுத்தார். திரு. ராசு, மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையைப் பரிந்துரைத்து அனுப்பினார். அவர் 1877இல் திருநெல்வேலி ஆங்கிலக் கலாசாலைக்குத் தலைவர் ஆனார்.

அத்துடன் நின்றாரா? அக்கல்விச் சாலையின் முன்னேற்றத்திற்கு முழு மூச்சாய் உழைத்தார். திருநெல்வேலி வாழ் சான்றோர்களைக் கண்டு பழகினார் மாணவர்களின் பெற்றோர்களைச் சந்தித்துப் பேசினார் சிறந்த முறையில் பாடங்களைக் கற்பிக்குமாறு ஆசிரியர் களை உற்சாகப்படுத்தினார். ஆசிரியர்களிடம் தினமும் பழகி அவர்களைத் தம்பால் அன்பால் ஈர்த்தார். திருநெல்வேலி நகரத்தில் தமிழச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார் மேலும் ஆங்கில இலக்கியம், தமிழ் இலக்கியம் ஆகியவை பற்றி ஒப்பியல் நெறியில் உரை யாற்றினார். அவர் அக்கல்லூரிக்குச் சென்ற சில ஆண்டுகளில் அந்தக் கல்லூரியை இரண்டாம் நிலைக் கல்லூரியாக உயர்த்தினார். பத்தாம் வகுப்புவரை இருந்த அக்கல்லூரி எப்.ஏ. (F.A.) வகுப்புள்ள கல்லூரியாக (Second Grade College) மாறியது. தற்போது திருநெல்வேலிப் பேட்டையில் அமைந்த மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரி ( Madurai Diraviyam Thayumanavar Hindu College) தான் அது. திருநெல்வேலிப் பகுதி மக்களுக்குக் கல்வித் தொண்டாற்றி வந்த நிலையில், மீண்டும் ஓர் இடமாற்றத்திற்கும், பணிமாற்றத்திற்கும் தயாராகும் நிலைமை மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளைக்கு ஏற்பட்டது.

1879இல் திருவனந்தபுரம் மாமன்னர் கல்லூரியில் தத்துவத்துறைப் பேராசிரியராக இருந்த டாக்டர் ராபர்ட் ஹார்வி (Dr. Robert Harvey) தம் தாயகம் செல்ல வேண்டிய நேர்ந்தது. அப்போது அவர், மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையை அழைத்துத் தான் வகித்த பதவியில் அமர்த்திவிட்டு தன் தாய் நாடாம் ஸ்காட்லாண்ட் சென்றார். இதன் பிறகே இவர் 1880இல் எம்.ஏ., தேர்வெழுதி வெற்றிபெற்றார்.

இக்காலத்தில்தான் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் தமிழ்த் தொண்டு தொடங்கியது திருநெல்வேலியில் இருந்தபோது எழுதத் தொடங்கிய இலக்கியங்களான மனோன்மணீயம், நூற்றொகை விளக்கம் ஆகியனவற்றைத் திருவனந்தபுரத்தில் செம்மையாக எழுதி முடித்தார். திருவிதாங்கூர்ப் பகுதிகளில் இருக்கும் பழைய திருக்கோயில்களில் பாழடைந்து பாதுகாப்பற்றுக் கிடந்த கல்வெட்டுக்களைத் தம்பொருட் செலவிலேயே சென்று ஆராய்ச்சி செய்தார்.

இவ்வாறு இவர் பணியாற்றி வரும்போது 1882ஆம் ஆண்டிறுதியில் மேதகு விசாகம்திருநாள் மாமன்னர் இவர்தம் கல்விப் பெருமையை நன்குணர்ந்து, தன் அரண்மனையிலேயே ‘பிறவகை சிராஸ்தார்’ (Commissioner of Separate Revenue) - எனும் உயர்பதவியை வழங்கி மகிழ்ந்தார். இப்பதவி, ‘திவான்’ பதவிக்குரிய

படிக்கட்டுப் பதவியாகும். 1882 முதல் 1885 வரை இப்பொறுப்பில் தன் இயல்புக்கு மாறாய்ப் பணியாற்றி வந்தார் என்றுதான் கூற வேண்டும். கல்விக்கும் மனத்திற்கும் ஏற்ற பதவியாக மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை அதைக் கருதவில்லை. எனவே அப்பதவி அவருக்குப் பொருந்தவில்லை. ஆனால் அவ்வேலையில் அவர் அமர்ந்திருந்த பொழுது சட்டக் கல்லூரியில் சட்ட நூற்களைப் படித்து வந்தார். ஆனால் சட்டத்திற்கான பட்டம் பெறவில்லை. அப்போது அரசர் கல்லூரித் தலைவர் திரு. ராசு தம் தாய்நாடு செல்ல நேர்ந்தபோது டாக்டர் ஹார்வி வகித்து வந்த தத்துவப் பேராசிரியர் பணியை, சுந்தரம்பிள்ளையே பொருத்தமானவர் என்று முடிவுசெய்து 1885இல் அவருக்கு வழங்கிச் சென்றார்.

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை அப்பதவியைப் பெற்ற நாள் முதல் இறுதிக் காலம் வரையில் அதிலேயே நிலைத்துவிட்டார். வறட்டுத் தன்மை உடையது என்றும், விருப்பமான பாடமாக இருக்காது என்றும் மாணவர்களால் கருதப்பட்ட தத்துவப் பாடத்தை மாணவர்கட்கு விருப்பம் உண்டாகும்படி பெரும்திறமையுடன் கற்பித்தார். அவரின் விரிந்த எண்ணங்களும், நகைச்சுவை இழையோட உரையாடும் திறனும், ஆற்றொழுக்காகச் சொற்களைக் கோக்கும் திறனும், சொல் வன்மையும் கருவிலேயே திருவாய் வாய்க்கப்பெற்ற நுண்ணிறவும், கல்லூரி ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் மற்றவர்களாலும் பெரிதும் பாராட்டப் பட்டன

'குருபக்தியே சகல சக்தியும்' என்பர். 'முதற்கண் குருவணக்கம்' என்பது வழக்கில் உள்ளது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நான்கு வகையினரும் ஒருவர் மறத்தற்கரிய குரவர்கள் என்றவாறு குரு பக்தியைப் பலர் பலவாறு கூறிச் சென்றுள்ளனர். இவ்வாறு போற்றிப் புகழப்படும் குரு பக்திக்கு ஓர் எடுத்துக் காட்டாய்த் துலங்கியவர் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை.

தம் குருநாதன் சுந்தரசுவாமிகள் இயற்றிய 'நிஜானந்த விலாசம்' என்ற நூலை இவரும், இவரது சில நண்பர்களும் இணைந்து அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். இதைச் சுந்தரசுவாமிகள் அரிமளம் என்ற இடத்தில் தங்கியிருந்த போது, மகா **சந்நிதானம், மகா வாக்கியச் சுருக்கம், வேதாகமம், சம்பிரதாயப் பிரகரணம், மனோ நாச மார்க்கம்,** ஆகிய நூல்களை இயற்றி, முன் இயற்றிய பிரசுரங்களையும், ஒன்றிணைத்து 'நிஜானந்தவிலாசம்' எனப் பெயரிட்டு வழங்க ஆக்ஞாபித்துப் பஜனை சிதம்பரம் பிள்ளையின் கையிற் கொடுத்தனர் - என்ற செய்தி, கோடக நல்லூர் கே. சுந்தரசுவாமிகள் திவ்விய சரித்திரம் என்ற நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது இங்கு நோக்கத்தக்கதாகும்.

இவ்வாறு, இவரின் அரும்பெரும் ஆய்வை உள்நாட்டினரேயன்றி வெளிநாட்டினரும் போற்றத் தவறவில்லை. இவரது ஆய்வுத் திறனைத் தங்கள் தூதர் வழி அறிந்த அன்றைய ஆங்கில அரசு தங்களுக்குச் செலுத்த வேண்டிய கப்பப் பணத்திலிருந்து பத்தாயிரம் ரூபாயை மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையவர்களுக்குப் பரிசாக அளிக்குமாறு திருவிதாங்கூர் அரசுக்கு ஆணை பிறப்பித்ததாகவும், அவ்வாறு வழங்கப்பட்ட தொகைகளை இவர் பத்மநாபசுவாமி கோயிலுக்கு நன்கொடையாக அளித்தார் என்றும் வரலாறு கூறுகிறது.

இவரின் தொல்லியல் ஆய்வுத் திறனைப் பாராட்டி, இவரை இங்கிலாந்தில் உள்ள 'ராயல் ஏஷியாடிக் கழகம்' (Member of the Royal Asiatic Society of Great Britain and Ireland) தங்கள் நிறுவனத்தின் உறுப்பினராக (M.R.A.S.) நியமித்துப் பெருமைப்படுத்தியது. பிறகு, லண்டன் வரலாற்று ஆராய்ச்சிக் கழகம் - F.R.H.S. என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது. தென்னிந்திய வரலாற்றில் இவர் செய்த சாதனைகளைக் கவனத்தில் கொண்டு அன்றைய ஆங்கிலேய அரசு 'ராவ் பகதூர்' என்ற பட்டத்தை வழங்கியது 1896ஆம் ஆண்டு ஜெர்மன் நாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்று டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கத் தங்கள் நாட்டிற்கு அழைத்தபோது உடல் நிலையின் காரணமாகச் செல்ல இயலவில்லை. இவர் இயற்றிய காலக்கணிப்பு, இரணகீர்த்தியின் நடுகல்லும் வேணாட்டு வேந்தர்களின் காலக்கணிப்பும், தமிழ்த்தாய் வாழ்த்தும், இவர் கற்ற கல்வியின் பயன்கள் அன்றோ!

*'யாதானும் நாடாமால் ஊராமல் என்னொருவன்*
*சாந்துணையும் கல்லாத வாறு'*

என்பது திருவள்ளுவர் குரலின் குறள் ஒருவருக்குக் கல்வி என்பது சாகும் வரையில் தொடரும் பணிநிலையாகும். 'கல்வி கரைஇல' என்பதும், 'கற்றது கைமண் அளவு' என்பதும் அனைவர் நினைவிலும் நிற்கும் கருத்துரை என்றாலும், இவற்றிற்கெல்லாம் இலக்கணமாக, இந்நில்லா உலகில் நின்று நிலைத்திருப்பவர் ஒரு சிலரே. அவர்களில் ஒருவர் தாம் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை என்பது ஒருதலை.

இத்தகைய சிறப்புமிகு கல்வி, மற்றும் ஆராய்ச்சிகளுக்கு மேல் தமிழர்கள் என்றும் உச்சிமேல் வைத்து மெச்சும்படியாக ஓர் அடிப்படை ஆராய்ச்சியை நிகழ்த்தியுள்ளார் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை.

அதுதான் திராவிட இன ஆராய்ச்சி. ஆம்! தென்னாட்டில் திராவிட இன உணர்வுக்கு வித்திட்டவர் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை என்பதை எவரே மறுக்க இயலும்! இதை இன்றைய திராவிடவியல் ஆய்வாளரே நன்றியோடு நினைவு கூர்ந்துள்ளனர். இவர் தோற்றுவித்த

திராவிட இயக்கம்தான் பொது வாழ்வின் நுழைவின்போதே பேரறிஞர் அண்ணா (தமிழக முன்னாள் முதல்வர் சி.என். அண்ணாதுரை) அவர்களைப் பற்றிக் கொண்டது என்பர்.

ஏசு கிறித்துவின் தியாக வாழ்க்கையும், அறிவுரைகளும் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையைக் கவர்ந்து, வயப்படுத்திய செய்திகள் தெரிய வருகின்றன. வரலாற்றியல் அறிஞர் வி.ஆர். பரமேஸ்வரன் பிள்ளை 'மகான்மாரும் மகிதைகளும்' என்ற தன் நூலில் உள்ள மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை பற்றிய கட்டுரையில் கிறிஸ்துவின் தியாகச் சுடர் வீசும் வாழ்க்கையும், கருத்துரைகளும் சுந்தரம்பிள்ளையைக் கவர்ந்திழுத்ததாய்க் குறிப்பிட்டுள்ளார். அது அவரது பெற்றோரை மனக் கவலையுறச் செய்தது. கிறிஸ்துவ மதத்தோடு உள்ள அவரின் பற்றுதல் ஓர் உறவினரின் வீட்டில் வைத்து நடைபெற்ற தீவிர விவாதத்தோடு முடிவடைந்தது என்றும் குறிப் பிட்டுள்ளார்

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை, புவிஇயல், தத்துவஇயல், மொழி இயல், வரலாற்றியல், தொல்லியல் ஆகிய பல்துறை அறிஞர் என்பதை அவர் இயற்றிய தமிழ்த் தெய்வ வணக்கப் பாடல் புலப்படுத்தும்

*" நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்கு எழில் ஒழுகும்*
*சீராரும் வதனம் எனத் திகழ்பரத கண்டமிதில்*
*தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே*
*தெக்கணமும் அதில் சிறந்த திராவிட நல் திருநாடும்*
*அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பம் உற*
*எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே*
*பல்லுயிரும் பல உலகும் படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்*
*எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்*
*கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்*
*உன் உதிரத்து, உதித்து எழுந்தே ஒன்று பல ஆயிடினும்*
*ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையாஉன்*
*சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே"*

இப்பாடல் பல்வேறு துறைகளில் அவர் பெற்றிருந்த நுண்ணிய பரந்த கூர்ந்த அறிவினைப் பறைசாற்றி நிற்கிறது.

*" நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்குஎழி லொழுகும்*
*சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமதில்"*

என்ற வரிகளில் புவிஇயல் பேசப்படுகின்றது.

*" அனைத்துலகும் இன்பமுற எத்திசையும் புகழ்மணக்க*
*இருந்த பெரும் தமிழணங்கே"*

என்ற வரிகளில் தொல்லியலும் வரலாற்றியலும் தெரிவிக்கப் படுகின்றன.

இந்த உலகின் பல பகுதிகளிலும் தமிழின் தாக்கம் உள்ளது என்பது ஆய்வாளர் கருத்து. வட அமெரிக்காவில் மாயன் நாகரிக மக்கள் பேசும் மொழியிலும், ஆப்பிரிக்கா நாட்டு மக்கள் பேசும் மொழிகளிலும், 'தென் அமெரிக்காவில் பெரு நாட்டவர் பேசும் மொழியிலும் பல தமிழ்ச்சொற்கள் இடம்பெற்றுள்ளன. கிழக்கு ஆப்பிரிக்கா கடலோர மக்கள் தங்கள் நாட்டுப் படகினைத் 'தெப்பம்' என்றும், 'மிதப்பு' என்றும் அழைக்கின்றனர் என்று அமெரிக்கா நாட்டு ஆய்வாளர் 'சிரோம் நிக்' சுட்டியுள்ளார் என்ற இத்தகவலை கன்னியாகுமாரி வரலாற்றுப் பண்பாட்டு ஆய்வு மையப் பொதுச் செயலாளர் டாக்டர் எஸ். பத்மநாபன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா நாட்டுப் பழங்குடி மக்கள் பேசும் மொழியில் முப்பதுக்கு மேற்பட்ட தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளன என்பதை, நடன நிகழ்ச்சிக்கு அங்கு சென்று வந்த டாக்டர் பத்மா சுப்பிரமணியம் ஒரு தொலைக்காட்சி நேர் காணலின்போது குறிப்பிட்டதை 2001 இல் டாக்டர் எஸ். பத்மநாபன் தெரிவித்துள்ளார்.

கீழைநாட்டு மொழிகளாம் சீனம், கொரியன் மற்றும் ஜப்பானிய மொழி ஆகியவற்றிலும் தமிழ்ச்சொற்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு உலக மொழிகள் பலவற்றில் தமிழ்மொயியின் தாக்கம் உள்ளது. எகிப்தில் கிடைத்த பானை ஓட்டில் தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ள தகவலை தொல்லியல் வல்லுநர் ஐராவதம் மகாதேவன் தெரிவிக்கின்றார். இவைகள் எல்லாம் ''அனைத்துலகும் இன்பமுற'', ''எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே'' என்று போற்றுகிற, மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் கருத்துக்களை அரண்செய்வதாக உள்ளன. இவ்வாறு, எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே என்ற அடியின்வழி தொல்லியல், வரலாற்றியல், மொழிஇயல் ஆகிய துறைகளில் அவர் பெற்றிருந்த பேரறிவினை நாம் உணர்கிறோம்.

*''பல்லுயிரும் பல உலகும் படைத்து அளித்துத் துடைக்கினும் ஓர்*
*எல்லையறு பரம்பொருள் முன்னிருந்த படி இருப்பது போல்''*

என்ற அவரது அடிகள் மெய்ப்பொருள் (தத்துவம்) பேசுகின்றன. அண்ட சராசரங்களையெல்லாம் ஈன்ற பரம்பொருளாகிய இறைவன் என்றும் முதுமை யின்றி வாழ்தல் போன்று மூவா, சாவா மொழியாகிய தமிழும் என்றுமுள தென் தமிழாக வாழ்கின்றது என்று வாயார வாழ்த்தி வணங்குகிறார். அவர் ஒரு மெய்ப்பொருள் மேதை என்பதை இவ்வடிகள் தெற்றெனப் புலப் படுத்துகின்றன.

*''கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்*
*உன் உதிரத்து உதித்து எழுந்தே ஒன்று பல ஆயிடினும்*
*ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையாஉன்*

*சீர்இளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே''*

என்ற அடிகள் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையின் மொழிஇயல் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

இப்பூபாகத்தில் எத்தனையோ மொழிகள் பிறந்தன. செழித்து வளர்ந்தன மக்கள் ஆதரவுடன். இத்தகைய பழம் மொழிகளில் பல மொழிகள் கால ஓட்டத்தில் தாக்குப் பிடிக்க முடியாமல், நாட்டு வழக்கற்று ஏட்டிலேயே அடங்கிவிட்டன. ஐரோப்பிய நாட்டுச் செம்மொழிகளான, லத்தீன், கிரேக்கம் போன்ற மொழிகள் இன்றுஉலக வழக்கற்ற செம்மொழிகளாகி விட்டன. இத்தகைய செம்மொழியைச் சேர்ந்ததுதான் ஆரியம் என்ற வடமொழியும், தமிழ் என்ற தென்மொழியும். ஆரியம் வடபுலத்தில் வழங்கப் பெற்றதால் வடமொழி என்ற பெயரைப் பெற்றது. தமிழ், கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் வழங்கியதால் தென்மொழியாயிற்று.

வடமொழியிலிருந்து பலமொழிகள் பிறந்தன. தென்மொழியான தமிழும் பல மொழிகளை ஈன்றது. வடநாட்டில் பலமக்களை ஈன்ற தாய் இறந்து விட்டாள். தென்னாட்டில் பல மக்களை ஈன்றதாய் இன்றும் இளமை குன்றாமல் இருக்கின்றாள். அதனால்தான் தமிழ், கன்னித் தமிழ் என்று அழைக்கப் படுகின்றது. இக்கருத்தை மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை அழகுறக் கூறியுள்ளார். சதுமறை ஆரியம் வருமுன் இந்தியா முழுமையும் தமிழ் கோலோச்சி நின்றது என்று பெருமிதத்தோடு நிறுவியவர் இவர்

பழைய இலக்கியங்களையும், தத்துவ நூல்களையும், கல்வெட்டுக் களையும் நுணுகி ஆராய்ந்த சுந்தரம்பிள்ளை மொழிப் பற்றுடன் நாட்டுப் பற்றும் பெற்றிருந்தார். பட்டம், பதவி பெற்றுக் கண்ணியமான வாழ்வை நடத்தினார். அவர் நேர்மையான, ஆனால் நிதானமான தேசப் பற்றுக் கொண்டிருந்தார். பண்டை மன்னராட்சி பற்றி நன்காராய்ந்த அவர் புறநானூறும் சிலப்பதிகாரமும், கலிங்கத்துப் பரணியும் காட்டும் போர் முறைகளையே தம் நாடகக் காவியத்தில் அமைத்துள்ளார் அவர் இதயத்தில் தேசக்கனல் கனன்றது. ஹார்விபுரத்தில் இல்லாமையை அறியாது தான தருமங்கள் செய்து கொண்டு நூல்களின் இடையில், பண்புடையாளர் பக்கலில் வாழ்ந்த தேசபக்தர் அவர்.

தேசப்பற்று, மொழிப்பற்று, தெய்வப்பற்று ஆகிய பற்றுக்களைக் கருவிலேயே திருவாய்க்கப்பட்டிருந்தார் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை என்பதை மேற்குறிப்பிடப்பெற்ற சில கருத்துக்கள் நன்கு உணர்த்தவல்லன. மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையின் கல்விச் செழுமையும், ஆய்வு முனைப்பும், அவரைப் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்கள் தம் உறுப்பினராக ஏற்றுச் சிறப்பித்தன. சென்னைப்

பல்கலைக் கழகம் தன் உறுப்பினராக இவரை ஏற்று 'உயர்கலைக்கழக உறுப்பினர்' (F.M.U. - Fellow of Madras University) பொறுப்பில் நியமித்தது. இந்தப் பொறுப்பை அவருக்கு 1891இல் சென்னைப் பல்கலைக்கழகம் அளித்தது.

இதன்மூலம் அவர், தேர்வுக் கண்காணிப்பாளராகவும் *நியமிக்கப்பட்டார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ், ஆங்கிலம்,* வரலாறு, தத்துவம் ஆகிய துறைப் பாடங்களின் தேர்வுநிலை உறுப்பினராகவும் விளங்கினர். நாடகப் பேராசிரியர், ராவ்பகதூர் பம்மல் சம்பந்த முதலியார் 1896இல் அச்சிட்ட தன் நாடகமான 'லீலாவதி சுலோசனை'யிலிருந்து ஐம்பது பக்கங்களைச் சென்னைப் பல்கலைக்கழக எப்.எ. தேர்வுக்குப் பாடமாக வைக்கத் தமிழ்த் துறையினருக்குப் பரிந்துரை செய்தார், மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை. பல்கலைக்கழகத்தார் ஒரு தமிழ் நாடகத்தைத் தேர்வுக்குப் பாடமாக வைத்தது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

1896, மே திங்களில், மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளைக்கு அவர்தம் வரலாற்று ஆராய்ச்சிக்காக சென்னை அரசு ''ராவ்பகதூர்'' என்னும் பட்டம் வழங்கியது. இவர்தம் முழுப் பெயரை எழுதுவதென்றால், ''ராவ்பகதூர் பெ. சுந்தரம்பிள்ளை அவர்கள், எம்.ஏ , எப்.ஆர் எச்.எஸ் , எம்.ஆர்.ஏ.எஸ்., எப்.எம்.யூ.'' என்று எழுத வேண்டும். திருவிதாங்கூர்ப் பொது மக்கள் இவருக்கு வழங்கிய பட்டம் 'எம்.ஏ.சுந்தரம்பிள்ளை' என்பதாகும்.

ஆசிரியருக்கு உரிய அடையாளம் அந்தக் காலத்தில் உருமாலை என்று சொல்லப்படும் தலைப்பாகை மற்றும் மேற்சட்டை - மரபுரிமைச் சின்னம் தாங்கிய மேலங்கி (coat), ஆசிரியர் தினத்திற்கு (Teacher's Day) உரியவரான டாக்டர் எஸ் இராதாகிருஷ்ணன், தான் ஆசிரியர் என்பதற்கு அடையாளமாக இந்த உடையுடன்தான் இறுதிவரையில் காட்சியளித்தார் என்பது ஈண்டு நினைவுகூரத்தக்கது. டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த தினத்தைத்தான் நாம் ஆசிரியர் தினமாக ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறோம்.

தத்துவப் பேராசிரியராகவும், கல்லூரி முதல்வராகவும், வரலாற்று ஆராய்ச்சி அறிஞராகவும், கல்வித் தொண்டாற்றிய மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் தமிழ்த் தொண்டை, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்,

> *''ஆரா அமுதம் அனைய தமிழ்வளர்த்த பேராசிரியர்*
> *பெருமான்''*

என்று கூறுவதை ஓர்க!

உலகுக்குத் தமிழின் உயர்தனிச் சிறப்பினைச் செம்மையுற உணர்த்திய உரவோர் என உவகையுடன் கூறுவதைப் பாருங்கள்,

*'எம்மொழியும் ஈடாகாது இம்மொழிக்கு என்றுலகம்*
*செம்மையுறக் கண்டு தெளிந்திடவே - நம்மினிய*
*செந்தமிழின் தெய்வச் சிறப்பெல்லாம் யாருரைத்தார்*
*சுந்தரனைப் போலத் தொகுத்து'*

என்ற கவிமணியின் பாடல் சிந்தித்து இன்பம் பெறத்தக்கதாகும். தமிழ் உணர்ச்சிப் பாவலன் பாவேந்தர் பாரதிதாசனோ, ''மன்றப் புலவரில் கைகாரன் தமிழ் மனோன்மணீயம் செய்த சுந்தரன்'' என்று சுட்டிக் காட்டியுள்ளதை நோக்க வேண்டும்

தமிழன்னை, தன்பிள்ளை தன்னை வாழ்த்தி வணக்கமாகப் பாடியதை உணர்ந்து நெகிழ்ந்து கீழ்க்காணும் வண்ணம் கூறுகிறாள் -

*''நான் பெற்ற மக்களில் சுந்தரன் சிறந்தவன்*
*நற்றமிழ் காக்கத் தன்னலம் துறந்தவன்*
*தேன்போன்ற தமிழை வளர்க்கப் பிறந்தவன்*
*செந்தமிழ்க்கு உழைத்தே இறந்தவன்''*

இவ்வாறு தேனருவியாய் உருகுகிறாள் என்று பாவேந்தர் பாரதிதாசன் தன் படைப்பாம் 'தேனருவி' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆராய்ச்சிப் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையும், ''சென்ற நூற்றாண்டில் தமிழுக்குச் சிறப்புச் செய்த சான்றோர் அறுவருள் தலையாயவர் சுந்தரனார்'' என்று மொழிந்திருப்பதும் இங்கு கருதற்குரியதாம்.

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் பிறப்பு, இளமை, ஆய்வுடன் கூடிய கல்வி பற்றி இதுவரை ஆராயப்பட்டதில், இளமை என்று சுட்டியதற்குக் காரணம், இளமையிலேதான் நின்றார் மார்கண்டேயனைப்போல் முதுமை அவரை அணுகவே இல்லை. எனவே, அவரின் உள்ளமும், உணர்வும், உழைப்பும் முதுமையை அடையாததைப் போலவே, அவர் உடலும் முதுமை அடையவில்லை. எனவே, இளமையிலேயே நின்றார்.

# 2
# தத்துவம் - வரலாறு - தமிழ்

**த**த்துவ ஆராய்ச்சி, தென்னிந்திய வரலாற்று ஆராய்ச்சி, தமிழ் இலக்கியம் ஆகிய இந்த மூன்று துறைகளிலும் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை எக்காலத்திலும் அழிக்க முடியாத தொண்டுகளை நிறைவேற்றிச் சென்றுள்ளார்.

முப்பரிமாணத்தின் உருவமாகத் திகழும் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையை மேலோட்டமாக அறியும் எவரும், தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றிய தொண்டை மட்டும்தான் காண்பர்.

'மரத்தில் மறைந்தது மாமதயானை; மரத்தை மறைத்தது மாமதயானை' என்னும் பொருள்மொழிக்கேற்ப நடைபெற்ற, நடைபெறும் நிகழ்ச்சி இது.

உண்மையில், மேற்கூறப்பட்ட மூன்று துறைகளிலும் சம அளவு ஈடுபாட்டோடுதான் உழைத்தார் அவர்.

**தத்துவம் (Philosophy)**

கற்ற கல்வி நிலையிலும், பெற்ற பட்டத்தின் நிலையிலும், வகித்த பொறுப்புக்களின் நிலையிலும் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை தத்துவத் துறையைச் சார்ந்தவரேயாவார்.

தத்துவம் என்ற சொல்லுக்கு 'உண்மைப் பொருள்' என்று பொருள். தத்துவம் - சித்துத் தத்துவம், சடத் தத்துவம் என இரு வகையாகப் பிரிப்பர். உயிரும் இறைவனும் சித்துத் தத்துவத்தில் அடங்கியவர்கள். மனோன்மணிய நாடகம் உருவக மாலையாக அமையப்பெற்ற மிகப் பெரிய ஞான விளக்கம் ஆகும். சுந்தரம்பிள்ளையின் தத்துவக் கருத்துக்கள் அத்துவைத (இரண்டன்மை) வேதாந்தத்தின் பொருளாக இருந்தாலும், அவை சைவ-வைணவ சித்தாந்தங்களின் சமரச நிலைக்குப் பொருத்தமாகவும் உள்ளன மேலை நாட்டுத் தத்துவக் கருத்துகட்கும் இசைந்ததாக உள்ளன என்பது ஆழ்ந்து எண்ணத்தக்கதாகும்.

திருவனந்தபுரம் மாமன்னர் கல்லூரியிலும், திருநெல்வேலி மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரியிலும் தத்துவத்துறைப் பேராசிரியராகவே பணியாற்றி வந்தார்.

திருநெல்வேலியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தபோது, மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளைக்குத் தன் 23வது வயதில் கோடக நல்லூரில் சுந்தரசுவாமிகளின் அறிமுகமும், தொடர்பும் ஏற்பட்டது. சுந்தரம்பிள்ளை, சுந்தர சுவாமிகளிடம் வேதாந்த, சித்தாந்த உரையாடல் களை மேற்கொண்டு வந்தார் இருவரும் பலமுறை தத்துவ உரையாடல் களில் ஈடுபட்டிருந்தனர். இவர்தம் ஆன்மீக உணர்வு இல்லறத்தைப் புறக்கணிப்பதில், பொருள் வாழ்க்கையை வெறுப்பதில் அமையாமல் வாழ்வை உணரும் நிறைவாக மலர்ந்ததை உணர முடிகிறது

சீடரான மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை நாற்பத்திரண்டு வயதுவரை வாழ்ந்தார் குருவாகிய சுந்தர சுவாமிகள் நாற்பத்தேழு வயதுவரை வாழ்ந்தார் இருப்பினும் **குரு-சூதசம்ஹிதை, ஸ்ரீஅத்வைத போத தீபிகா, பிரம்ம சூத்திர பாஷ்யம், பத்து உபநிஷதங்கள்,** ஆகியவற்றிற்குத் தெளிந்த உரை எழுதியவர் **சுவானுபூதிரசாயனம், சுவானுபவரசமஞ்சரி, நிஜானந்த விலாசம்** ஆகிய தத்துவ நூல்களையும் தமிழ் இலக்கிய உலகிற்கு அளித்தவர். உப நிடதங்களைச் சாதி வேறுபாடின்றி, பால்வேறுபாடின்றி யாவரும் கற்றுணரலாம் என்று பிரச்சாரம் செய்தவர் கோயில்கள்தோறும் சென்று விரிவுரை செய்து, சிவத்தொண்டு புரிந்து வந்திருக்கிறார் அற்புதங்கள் நிகழ்த்தி, அற்பர்களின் அறியாமையைப் போக்கியவர். இத்தகைய முனிவரும் பேராசிரியரும் கோடக நல்லூரில் சந்தித்துத் தங்கள் ஆன்மநேயத்தை உருவாக்கிக் கொண்டார்கள்.

பிறகு, தான் உருவாக்கிய '**மனோன்மணீயம்**' நாடகத்தில், தன் குரு சுந்தர சுவாமிகளை சுந்தரமுனிவராகவும், தன்னை ஜீவக வழுதியாகவும் உருவகித்து சிவத்தத்துவம் பொதுள அந்த நாடகத்தைப் பேராசிரியர் பின்னியுள்ளார்

இந்த அறிமுகத்தோடு, மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை தன் எழுத்துக்களால் இந்தியத் தத்துவத்துறையை எந்த அளவிற்குச் செழுமைப்படுத்தி உள்ளார் எனக் காண்பது தேவையாகும். இவர் தம் நூல்களில் **மனோன்மணீயம்** நாடகமும், **நூற்றொகை விளக்கமும்** தத்துவ அடிப்படையில் குறிப்பிடத் தக்கவை. மனோன்மணீயம் வெளிப் பார்வைக்கு நாடக நூல் ஆயினும், அதன் உயிர், அதன் சாரம், அதன் நோக்கம் அனைத்துமே சிவ தத்துவம்தான். அது போல் நூற்றொகை விளக்கமும் பெரும்பகுதி தத்துவ விளக்கமாகவே உள்ளது இதன் உள்ளே அமைந்திருக்கும் நூல் வகுப்பில் மதநூல் பிரிவில் முதல் நூலாகத் திகழ்வது தத்துவ நூலேயாகும். பொதுநூல் பிரிவில் மூன்றாவது நூலாகத் திகழ்வது வியாகரணம், தருக்க நூல், மற்றும் தருமநூல் ஆகும் கலை நூல் பிரிவில் யோக கலையைச் சேர்ந்த

அஷ்டாங்க யோகம், ஞான யோகம் என்ற இரண்டு நூல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன

எனவே, மதநூல், பொதுநூல், கலை நூல் ஆகிய மூன்று பிரிவிலும், இடம் பெற்றிருப்பது தத்துவ நூல்கள்தாம். ,இவற்றிலிருந்து மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளைக்குத் தத்துவத்தில் உள்ள ஈடுபாடு வெள்ளிடைமலை.

மனோன்மணீயம் நூலின் முகவுரையில் நூலுக்கு ஒரு தத்துவ விளக்கத்தைத் தருகிறார். அது - இல்லறம், துறவறம், பக்தி, ஞானம், வீடுபேறு என்னும் வாழ்க்கைத் தத்துவங்களை உருவகமாக உணர்த்துகிறது.

நாடகப் பாத்திரங்களைத் தத்துவ அடிப்படையில் உருவக மாலையாகக் கொள்ளும்போது ஜீவகன்-ஜீவாத்மா, குடிலன்-மாயாசக்தி, மனோன்மணீ-சுத்த தத்துவம், வாணி- புத்திதத்துவம், நடராஜன்-உபாசனமூர்த்தி, புருடோத்துமன்- அனுக்கிரகசக்தி, சுந்தரமுனிவர்-அருட்செல்வமாகிய ஞானாசிரியர்.

மதுரை ஜீவாத்மா உதித்து ஒடுங்கும் மூலத்தானம். திருநெல்வேலிக் கோட்டை மாயா காரியமான அன்னமாயாதி பஞ்ச கோசத்தால் அமைந்த சரீரம். மனோன்மணீ கண்ட கனா இறைவனின் அருள் தோற்றம். சுருங்கை பிரத்தியஷானுபூதிக்கு ஏதுவான பாவ விமோசன பந்தம். பிறவும் இம்முறையே பாவித்து, உய்த்து உணர்ந்துகொள்ள வேண்டியது என்று அதில் குறிப்பிட்டுள்ளார்.

மனோன்மணீய நாடகத்தில் நடுநாயகமாகத் திகழ்வது **சிவகாமி சரிதம்** இந்நூல் மனோன்மணீய நூல் எழுதுவதற்கு முன்பே பேராசிரியரால் எழுதப் பட்டது. சைவசித்தாந்தத்தின் செம்பிழிவே அழகுமிக்க இக்கதையாகும்.

மனோன்மணீய நாடகத்தில் இந்நூலை மூன்றாம் அங்கம் மூன்றாம் களத்தில் இணைக்கிறார் நாடக ஆசிரியர். இதுவே, அவரின் விரகு. மேலும் இவர் சைவ சமய இலக்கியங்களான தேவார - திருவாசகங்கள், பெரிய புராணம், திருவிளையாடல் புராணம், திருவிசைப்பா, தாயுமானவர் பாடல்கள், நீதிநெறி விளக்கம், நீதிவெண்பா, பாடுதுறை, ஒழிவிலொடுக்கம் முதலிய நூற்கருத்துக்களை சைவசித்தாந்த விளக்கங் களுக்கு மேற்கோளாகக் காட்டுகிறார். பேராசிரியர் உணர்த்தும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் சிலவற்றைக் காண்டல் மிகையன்று. சிவகாமி சரிதத்தைச் 'சின்ன மனோன்மணீயம்' என்று ஆய்வாளர் குறிப்பிடுவர்.

இவர்தம் வழிபடுதெய்வம் முழுமுதற் பொருளாகிய சிவபெருமான்தான் என்பதை இவரது கடவுள் வணக்கப் பாடலால் அறிகிறோம்.

*"வேத சிகையும் விரிகலையும் மெய்யன்பர்*
*போதமும்போய்த் தீண்டாப் பூரணமே - பேதமற*
*வந்தெனை நீ கூடுங்கால் வாழ்த்துவர்யார் வாராக்கால்*
*சிந்தனையான் செய்ம்முறையென் செப்பு".*

மும்மலங்கள் எனப்படும் ஆணவம், கன்மம், மாயை ஆகியன உயிர்களைப் பற்றிக் கொள்ளும் தன்மையது. இவை நீங்குமானால் உயிர்கள் ஞானம் பெற்று வீடுபேறு அடையும் என்பது சைவ சித்தாந்தக் கொள்கை. இவற்றை உணர்த்த சுந்தரனார்,

*'மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தில் மாண்டோர்கள்*
*கனஞ்சடையென்றுருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ'*

என்றும்,

*'தீதற வாதனத்து இருந்தருள் இறைவ,*
*என்பவ பாசம் இரிந்திட நின்பாதம் இறைஞ்சுவல்'*

என்றும் ஜீவகன் கூற்றாகவும்,

*'உளமும் உளமும் நேர்பட அறியும்?*
*பூதப் பொருட்கே புலன்துணையன்றிப்*
*போதப் பொருட்குப் போதும் போதம்;*
*இரவியை நோக்கற்கு ஏன் விளக்குதவி?*

என்று மனோன்மணீ கூற்றாகவும்,

*பொறிகளறியாதுள்ளே புகும்பொருட்கள் இலையென்பர்*
*பொருளே யுன்னை*
*அறிய அவா வியகரணம் அலமாக்க அகத்திருந்தாய்*
*அச்சோ! அச்சோ!*

எனும் அடிகளும் - மலங்கள் நீங்குமானால் உயிர்கள் இறைவனை அடையும் என்னும் அனுபவ உண்மைகள் உணர்த்துகின்றன.

இனி, பசு, பதி, பாசம் என்ற அமைப்பு இதில் உள்ளுறையாக உணர்த்தப்படுகிறது. சிவகாமி சிதம்பரனைத் தேடிச் செல்லுதலின் தத்துவம் யாதெனில், உயிர் மாயாகாரியமாகிய இவ்வுலகில் தோன்றிக் கடவுள் நெறியை விட்டு விட்டுப் புறவழியில் செல்லுகிறது. மாயையாகிய இவ்வுலகில் பல துன்பங்களை அடைகிறது. மாயை உயிரை ஆசைகாட்டித் தன் பக்கம் திருமணம் என்ற ஒன்றால் இழுத்துக் கொள்ளுகிறது. பக்குவநிலை அடைந்த உயிர் இறைவனை நாடித்தீர்த்தம், மூர்த்தி, தலம் ஆகிய இடங்களைச் சென்று காண்கிறது. சிவகாமி சிதம்பரனை நோக்கி, 'உடலம்மாறும் வகை வீடுளதேல் அடையும் நெறியருளாய்' எனக் கேட்கிறாள். உயிர் வீட்டுலகையடைய வேண்டுமெனில் உலகப் பற்றைவிட வேண்டும்; தவம் செய்ய வேண்டும். உடம்பை வருத்தி உயிரைப் பக்குவநிலை அடையச் செய்ய வேண்டும் என்னும் தத்துவங்கள் இங்கே உணர்த்தப் படுகின்றன. இவ்வாறெல்லாம் நாம் ஆராயும்போது, மனோன்மணீயம் ஒரு

பொழுதுபோக்கு நாடகமல்ல; வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு உரிய வாழ்க்கைத் தத்துவக் கருவூலமாக மிளிர்வதைக் காண முடிகிறது.

மனோன்மணீயத்தில் செய்த தத்துவ விசாரணையோடு நிற்காமல், ஐரோப்பிய அறிஞர்களின் கருத்தைத் தழுவி தத்துவ நூல்கள் தமிழில் தோன்ற வேண்டும் என்பதற்குப் பெருமுயற்சி செய்தார் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை.

திருவனந்தபுரத்தில் அரசினர், பொது மக்களின் நன்மைகருதிச் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்திருந்தனர். அந்தச் சொற்பொழிவு வரிசையில் தத்துவ சாஸ்திர சம்பந்தமாகப் பல சொற்பொழிவுகளைச் சுந்தரம்பிள்ளை நிகழ்த்தினார். திருவிதாங்கூர் அரசினர் அமைத்த பொது மக்கள் சொற்பொழிவுச் சங்கத்தின் (Public Lecture Committee) மதிப்புறு தலைவராக அமர்ந்து பணியாற்றியவர் சுந்தரனார் என்பது குறிப்பிடத்தக்கது இவைகளே **நூற்றொகை விளக்கம்** என்ற பெயரோடு நூலாக 1888இல் வெளியிடப்பட்டது. அறிவுத்துறை களைத் தற்கால விஞ்ஞான முறைக்கு ஏற்றபடி பாகுபாடு செய்து வருவதே நூற்றொகை விளக்கத்தின் முதன்மை நோக்கமாக இருந்தது.

இவ்வுலக வாழ்க்கையில் தத்துவ ஈடுபாடு பேராசிரியருக்குத் தோன்றக் காரணம் அவர் இளமையிலிருந்தே கடவுட் பற்றோடு விளங்கியதேயாகும். நாள்தோறும் காலையில் பிள்ளையாருக்கு வழிபாடு செய்துவிட்டே பள்ளிக்குச் செல்லுதல், பள்ளியிலிருக்கும் பிள்ளையாருக்கும் வழிபாடு செய்த பின்பே படிப்பதுமான பழக்கங்களை அவர் கொண்டிருந்ததையும் இந்த இடத்தில் நாம் நினைவுகூர வேண்டும்.

கல்லூரிப் பேராசிரியர் பணிக்கு அடுத்து அவர் செய்து வந்தது தத்துவ ஆராய்ச்சிதான். கோடகநல்லூர் சுந்தரசுவாமிகளோடு நட்புக் கொண்டது முதல், காலையில் நீராடிய பின்பு தேவாரம் முதலிய தமிழ் மறைகளை ஓதி வழிபாடு செய்த பின்பே உணவருந்திப் பணிமேற்கொள்வது பேராசிரியர்தம் அன்றாட வழக்கமாக இருந்தது. பிற சமய நூல்களையும் நன்கு கற்றுச் சமயநூல் அறிவு நிரம்பப் பெற்றார். உண்மையான சமயத்துறவிகளிடம் மிக்க அன்பையும் மதிப்பையும் காட்டினர்.

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை தம் பூத உடலை நீத்தபோது, 'பாட்டுக்கள்' என்ற தலைப்பில் சிவசர்மா என்பவர்.

*"மேலை, கீழைத் தத்துவத்தில் புலமைஉடைய*
*நீ, தென்புலத்தார்க்குக் கற்பிக்கச் சென்றாயோ?"*

என்று இரங்கற்பா பாடியிருப்பதிலிருந்தும், இந்தியத் தத்துவத்திலும், மேனாட்டுத் தத்துவத்திலும் அவர் கொண்டிருந்த புலமை புலனாகும்.

1955ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4ஆம் நாள் அன்று பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளையவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்த, திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத்தின் அப்போதைய துணைவேந்தர் சர்.ஏ. இராமசுவாமி முதலியார் தன் உரையில், 'பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை அவர்கள் தத்துவத்திற்காகவும், தமிழ்த் தொண்டிற் காகவும் தென்னிந்தியாவெங்கும் பெரும்புகழ் பெற்றிருக்கிறார் அத்தகைய சான்றோரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைக்க எனக்குக் கிடைத்த வாய்ப்பை கிடைத்தற்கரிய சிறப்பாகக் கருதி, இப்போது மிக்க மகிழ்ச்சியோடு இப்பணியை ஆற்றுகிறேன்' என்று குறிப்பிட்டிருப்பதும் ஈண்டு நோக்கத்தக்கது.

சர். இராமசாமி முதலியார் அவர்களும், பேராசிரியரின் தத்துவப் பணியைக் குறிப்பிடத் தவறவில்லை.

இவ்வாறு மனோன்மணீயம் சுந்தரனார் தத்துவத்துறையில் தன் முத்திரையைப் பதித்துள்ளார் எனக் கூறவும் வேண்டுமோ!

**வரலாறு (History)**

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை தத்துவத் துறைக்கு அடுத்தபடியாக, உடல் உழைப்பைப் பெரிதும் சிந்திப்பாடுபட்டதுறை வரலாற்றுத்துறை அவருடைய, தென்னிந்தியா வரலாற்று ஆய்வுக் காகத்தான், இந்தியாவை அப்போது ஆண்ட பிரிட்டிஷ் அரசு ராய்பகதூர் (Rai Bahadur) என்ற பட்டத்தை 1896, மே திங்களில் வழங்கிச் சிறப்பித்தது என்று வரலாற்று அறிஞர் கே.ஜி. சேஷஐயர் 19.2.1909இல் குறிப்பிட்டுள்ளார்.

இவர் தமிழ் இலக்கியத்திற்குப் பணியாற்றிக் கொண்டே வரலாற்று இலக்கியத்திற்கும் பணியாற்றி வந்தார். வரலாற்றுத்துறை இவர்தம் ஆய் விற்கும் ஆர்வத்திற்கும் ஏற்ற துறையாக ஒளிர்ந்தது. திருவனந்தபுரம் மாமன்னர் கல்லூரியில் எப்.ஏ., பி.ஏ., மாணவர்களுக்கு வரலாற்றுப் பாடத்தைக் கற்பித்துள்ளார். பூர்வசரித்திர ஆசிரியராக இவர் தொடக்கத்தில் நியமனம் பெற்றார். அச்சரித்திரங்களை அவர் பயிற்றுவித்து வரும்போது, தமது நாட்டின் பூர்வசரித்திரத்தையும் ஆராய வேண்டும் என்ற ஓர் ஆசை இவருக்கு உண்டாயிற்று.

திருவிதாங்கூர்ப் பூர்வீக அரசியல் வரலாறுகளைப் பற்றி நன்றாக ஆராய்ந்து ஒரு நூல் எழுதினார். இது அந்நாட்டுச் சரித்திரத்திற்கு இன்றி யமையாத ஆதாரங்களுள் ஒன்றாக இன்றும் விளங்குகிறது. இந்நூலின் பொருட்டு திருவிதாங்கூர் மாமன்னர் இவர் குடும்பத்தினர்க்குப் பரம்பரையாகத் திங்கள்தோறும் ஒரு நன்கொடைத்தொகை அளித்து வர ஏற்பாடு செய்திருந்தார். இது, இச்சரித்திர நூலின் பெருமையை ஒருவாறு விளக்குகிறது.

இந்நூலை இயற்றி வருங்காலத்துத் திருவிதாங்கூரிலுள்ள சிலாசாசனங்களை (கல்வெட்டுக்களை) நன்கு பரிசோதிக்க வேண்டுவது தேவையா யிருந்தது. ஆனால் அச்சாசனங்கள் படி எடுக்கப்படாத தினாலும், அச்சில் வெளியிடப்படாததினாலும் இவர் பெரிதும் வருந்தி உழைக்க வேண்டியிருந்தது. தாமே பல இடங்களுக்குச் சென்று சிலாசாசனங்களைக் கண்டுபிடித்துப் படியெடுக்கும்படி நேர்ந்தது இவ்விடர்ப்பாடுகளையெல்லாம் திருவிதாங்கூர் அரசாங்கத்தினர்க்கு அறிவித்து, அந்நாட்டில் ஒரு சிலாசாசன இலாகா (துறை) நிறுவி, அதில் தாமே கௌரவத் தலைவராக விளங்கி பல அரிய சாசனங்களை வெளியிட்டுச் சரித்திர உணர்ச்சி பெருகும்படிச் செய்தார்.

திருவிதாங்கூர் அரசு, 1896 ஏப்ரல் திங்கள் 10ஆம் நாளன்று கல்வெட்டுத் துறையைத் தொடங்கியது. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் அரசுக் கல்வெட்டுத் துறையின் 'மதிப்புறு தொல்லியல் ஆய்வாளர்' ஆக்கப்பட்டார். அவர் திருவிதாங்கூரின் பல பகுதிகளிலும் கிடைத்த கல்வெட்டுக்களைப் பற்றிப் பல கட்டுரைகளை வெளியிட்டார். ஆறு ஆண்டு காலம் அவர் அப் பதவியில் இருந்தார். அவரைத் தொடர்ந்து 1902ஆம் ஆண்டு டி.எ. கோபிநாதராவ் தொல்லியல் கண்காணிப்பாளர் பதவியில் அமர்த்தப்பட்டார் என்பது வரலாறு.

எனினும், திருவிதாங்கூர் மாநிலத்தில் கல்வெட்டுத் துறையிலும் மற்ற துறைகளில் முன்னோடியாக இருப்பதைப் போன்றே முன்னோடியாகத் திகழ்ந்தார், மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை. இந்த உண்மையை வரலாற்று அறிஞர் டாக்டர் கே.கே பிள்ளை தமது சுசீந்திரம்கோயில் என்ற ஆய்வுநூலிலே குறிப்பிடுகின்றார்:-

"Professor Sundaram Pillai is the pioneer epigraphist of Travancore" (**Suchindrum Temple** Dr. K.K. Pillai) என்பது அவர் கூற்று. புரவசேரி ஆழ்வார் கோயில், சோழபுரம் சோழராஜாகோயில், திருவட்டாறு ஆதிகேசவப்பெருமாள் கோயில், திருவல்லம் பரசுராமர் கோயில் உட்பட பல்வேறு கோயில்களில் ஐம்பது கல்வெட்டுக்களை அவர் தேடிக் கண்டுபிடித்து அவைதரும் தகவல்களை வெளியிட்டார்.

தொல்லியல் துறையில் திருவிதாங்கூர் மாநிலத்தில் மட்டுமல்ல; தென் இந்தியாவிலேயே முன்னோடியாகத் திகழ்கிறார் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் என்று அந்நூலின் அணிந்துரையில் குறிப்பிடுகிறார், திருவனந்தபுரம் மாமன்னர் கல்லூரி வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் கே வி.ரங்க சுவாமி ஐயங்கார்.

வேணாட்டு மன்னர்களான சர்வாங்கநாத ஆதித்தவர்மன், கீழப்பேரூர் ஸ்ரீவீர கேரள மார்த்தாண்ட திருவடி, ஸ்ரீவீரராம மார்த்தாண்டவர்மா, கேரளவர்மா குலசேகரப் பெருமாள் ஆகியோர்

பற்றிய வரலாற்றுத் தகவல்களையும், அவர்களது காலத்தையும் கல்வெட்டுகள் மூலம் வெளியே கொண்டு வந்தபெருமை பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களையே சாரும். இந்நூல் வெளியிட்டு முப்பது ஆண்டுகளுக்குப் பின்னரே திருவிதாங்கூர் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் இரண்டு நூற்றாண்டுகள் திருவிதாங்கூரை ஆண்டு வந்த மன்னர்களின் பட்டியலை வெளியிட்டனர். இப்பட்டியல் தயாரிக்க, பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களின் ''திருவிதாங்கூர் பண்டை மன்னர்கள் சிலர்'' என்ற ஆய்வுநூல் மிகவும் உதவியாக இருந்தது குறிப்பிடத்தக்கது

இனி, ''இராமாயண உள்ளுறைப் பொருளும் தென்னிந்தியச் சாதி வரலாறும்'' என்ற தமது நூலின் முன்னுரையில் வெ.ப சுப்பிரமணிய முதலியார் குறிப்பிடும் கருத்துக்கள் கவனமுடன் பரிசீலிக்கத் தக்கனவாகும்.

''திருவனந்தபுரம் மகாராஜா காலேஜ் புரோபஸர் பி.சுந்தரம் பிள்ளை, எம்.எ., இங்கிலீஷிலும், தமிழிலும் ஒருங்கே பாண்டித்தியம் உள்ள மிகச் சிலருட் சிறந்தோர் ஒருவர் என்பதும், ஆங்கில இலக்கியங்கள், சாஸ்திரங்கள் இவைகளிற் பயிற்சியுள்ள தமிழ் விற்பன்னரை விசேடமாக மகிழ்வித்து அத்துவித தத்துவக் கருத்துக்களை ஒருபுடை விளக்கும் **மனோன்மணீயம், நூற்றொகை விளக்கம்** முதலிய சில தமிழ் நூல்களுக்கு ஆசிரியர் என்பதும், மகாராஜா கல்லூரியில் தத்துவ சாஸ்திர பட்டாசாரிய (Philosophy Professor) -ராக வீற்றிருந்தார் என்பதும் தமக்கமைந்த ஒழிவு காலங்களில் செய்யும் முயற்சிகளுள் பூர்வ சரித்திர ஆராய்ச்சியே பிரதான முயற்சியாகக் கொண்டு அதற்காக நெடுங்காலம் உழைத்துத் திருஞான சம்பந்தர் கால நிர்ணயம் முதலிய சரித்திர சம்பந்தமான சில உண்மை களை நூதனமாகக் கண்டுபிடித்து, அவைகளை இனிது விளக்கி நிலை நிறுத்தியதனால், அத்தகைய உண்மைகளின் அருமையறிந்த ஐரோப்பிய சங்கத்தார்களால் கவுரவமாக வழங்கப்பெற்ற பல பட்டப் பெயர்கள் பூண்டு தென்னிந்தியாவுக்கோர் அருமையான ஆபரணமாக விளங்கினர் என்பதும் பலர் அறிவர். அவர் அவ்வாறு புராதன சரித விசாரஞ் செய்து வருங்கால் கண்டுபிடித்த உண்மைகளுள் வெளிப்படுத்தியவைபோக எஞ்சிய உண்மைகள் பல உள. அவைகளைத் தமது மனதுக்கு நிறைவாகவும், பூரணமாகவும் அறிந்துகொண்டு ஏனையோர்க்கு எளிதாகவும் இனிதாகவும் விளங்குமாறு வேண்டுவன சேர்த்து முறைப்படுத்தி எழுதி வெளிப்படுத்த உத்தேசித்திருந்தனர். தென்னிந்தியா செய்த தவக்குறைவால் அவ்வுத்தேசங்களை நிறைவேற்றுமுன் காலஞ் சென்றனர்''.

மேலும், சரித்திரம் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் 'களித்தோழன்' என்பர். கொல்லம் மாவட்டத்தில் வறகலை ஊரில் குகைப்பாதை செப்பனிட்ட வேளை அங்கிருந்து கல்வெட்டு நிரம்பிய இரண்டு கற்சிலைகள் கிடைத்தன. அச்சிலைகளை ஆய்வு செய்து அதன் வழியே பல வரலாறுகளை வெளிக்கொணர்ந்த பெருமையும் இவரையே சாரும். அந்த அரும்பெரும் பணியை அனைவரும் வெகுவாகப் புகழ்ந்தனர் வெளிநாட்டினரோ வியப்புற்றனர்.

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் உற்ற நண்பரும், அவரைவிட மூத்தவருமான பி. தாணுப்பிள்ளை, திருவிதாங்கூர் அரசின் முதன்மைச் செயலாளராகப் பதவி வகித்தவர். இந்த இருவரையும் முறையே பிறவிஞானி (Born Philosopher) என்றும், கற்றறிந்த தத்துவஞானி (Learned Philosopher) என்றும் அறிஞர்களால் புகழப்பட்ட இவர்களின் அரும் பெரும் முயற்சியால்தான் சுமார் நூறாண்டுகளுக்கு முன்பு திருவிதாங்கூர் தொல்பொருள் - கல்வெட்டு ஆய்வுத்துறை நிறுவப்பட்டது. அப்போது கல்வெட்டு ஆய்வில் சுந்தரம்பிள்ளை ஈடுபட்டபோது டி.எஸ். கணேசபிள்ளை என்பார் அவருக்குத் துணை அலுவலராகச் செயல்பட்டு அவரின் வெற்றிக்குத் துணை நின்றதையும் நாம் மறத்தற்கில்லை.

கொல்லம் காலக் கணிப்பு முறைத் தொடக்க ஆராய்ச்சியிலும் (Kollam Era) தன் முத்திரையை மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை பதிக்கத் தவறவில்லை. இந்த ஆராய்ச்சியில், கோபிநாதராவ் என்ற அறிஞர் கொல்லம் ஆண்டு கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் என்ற கருத்தினைக் கொண்டிருக்க, சுந்தரம்பிள்ளையும் தனித்த ஒரு கருத்தை வெளிப்படுத்தினார்.

இவர் தமக்குக் கிடைத்த பல தரவுகளையும் வைத்து அலசிப் பார்த்து ஒரு முடிவுக்கு வந்தார். 825 AD இல் தொடங்கும் கொல்லம் காலக் கணிப்புமுறை வட இந்தியாவில் பழங்காலத்தில் பின்பற்றப்பட்டு நம்தாக்கப்பட்ட சப்தரிஷி (Saptharishi Era) காலக் கணிப்பு முறைத்தொடக்கம்தான் என்று அறுதியிட்டு உரைத்துள்ளார். அவரைப் பொறுத்தவரை இதற்கு வானசாஸ்திர ஆராய்ச்சியோ (Astronomical Research), கணக்கீடுகளோ (calculations), அறிவியல் எண்ணிக்கைகளோ தேவையற்ற ஒன்று எனத் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். இதே கருத்தை பி. சங்குன்னிமேனனும் கொண்டிருப்பது ஈண்டு நோக்கத் தக்கது. மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை, தன் மறைவுக்குப் பன்னிரண்டு நாட்களுக்கு முன்பு படுக்கையில் காய்ச்சலால் புலம்பிக் கொண்டிருந்தபோது, அவர்தம் தொடையைத் தட்டிக் காட்டி, 'இப்பகுதி தொல்பொருள் ஆய்வுத்துறைக்காகப் பதிவு செய்யப்பட்டது (This part

**reserved for archeology)** என்று கூறினார் என்றால் அவர்தம் வரலாற்றுக் காதலை நாம் உய்த்துணரக் கூடுமன்றோ!

## தமிழ்

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை எவ்வளவுதான் தத்துவத்திலும், வரலாற்றிலும் தோய்ந்து இருந்து சாதனைகளைப் புரிந்திருந்தாலும் அவர் யாத்த ஒரு கலைப்படைப்பாம் மனோன்மணீயம் நாடகத்தின் மூலம்தான் தமிழ்கூறு நல்லுலகிற்குப் பெரிதும் அறிமுகம் ஆகியிருக்கிறார் என்றால், அது உண்மையே.

அவர்தம் தமிழ்ப்பற்று வேறு யாருடைய தமிழ்ப்பற்றுக்கும் அணுவளவும் குறைந்ததன்று. மனோன்மணீய நாடகமெங்கும் ஆங்காங்கே அவர் தெளித்துச் சென்றுள்ள தமிழ்மொழி பற்றிய சிந்தனைகளே அகச் சான்றாக மிளிர்வதைக் காண்கிறோம். அவர்தம் தமிழ் உணர்வு ஊனோடு உயிரோடு கலந்து உள்ளத்தினின்றும் வெளிப்பட்டது. அவர் எங்குப் பிறந்து, எங்கு வளர்ந்து, எங்குப் பணியாற்றியிருந்தாலும் தாம் தமிழன் என்பதை அணுவின் அணுவளவும் மறந்தாரில்லை.

இதுகாறும் எத்தனையோ புலவர்கள் தமிழன்னையை எத்தனையோ வகைகளில் ஏற்றிப் போற்றியிருந்தாலும், முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் அமைந்திருந்த தமிழக அரசு, அரசு விழாக்களில் அவர்தம் மனோன்மணீய நாடகத்தின் பாயிரத்தில் உள்ள தமிழ்த்தெய்வ வணக்கப் பாடல்தான் பாடப்பெற வேண்டும் என முடிவெடுத்தது அவ்வாறு 1970ஆம் ஆண்டு முதல் பாடப்பெறும் பேறுபெற்றிருக்கிறது இந்த இயற்கை நிகழ்வு வேறு யாருக்கும் வாய்க்கவில்லை உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே இனிமை உண்டாகுமன்றோ! எனவே, சுந்தரனாரின் தமிழ்ப்பற்றுக்கு இதுவே பெருஞ்சான்றாகும்.

தமிழக வரலாற்றில் மற்ற எந்தக் காலத்தையும் விட சமய எழுச்சிக்காலத்தில் (கி.பி.700-900) மொழியுணர்வு வீறுகொண்டு எழுந்ததைக் காண முடிகிறது. புறச்சமயங்களை வெல்வதற்கு, சைவ-வைணவக் குரவர்கள் மொழியை ஒரு கருவியாகப் பயன்படுத்தத் தலைப்பட்டனர். இந்த உணர்வு பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை உயிர்ப்புடன் இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்த உணர்வு பின்னும் புத்தெழுச்சி பெற்றது.

சமஸ்கிருதம், ஆங்கிலம் போன்ற மொழிகளின் ஆதிக்கமும் இந்த எழுச்சிக்குப் பிறிதொரு காரணமாகும். தமிழின் பழமையையும், சிறப்பையும் கூறி வந்ததோடு, தாய்மொழி வழிக் கல்வியையும் இந்த நூற்றாண்டிலேதான் வற்புறுத்தும் நிலை தொடங்கியது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழுணர்வைப் புதிய நோக்கில் பார்த்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் இராமலிங்க வள்ளலார் (1823-1874), தண்டபாணி சுவாமிகள் (1838-1898), மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை (1826-1889), பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை (1855-1897) ஆகியோராவர். இவர்களில் முன்னவர் இருவரும் சமயப் பின்னணியிலும், பின்னவர் இருவரும் சமுதாயப் பின்னணியிலும் தமிழுணர்வை வளர்த்தனர்.

இராமலிங்க அடிகள் தமிழை - எம்மொழிக்கும் 'பித்ரு (தந்தை) பாஷை' என்று கூறித் தந்தைமொழி என்பார். இக்கருத்தின் பின்னணியில்தான் தண்டபாணி சுவாமிகளும் தமிழைத் தந்தைமொழி என்றார். தெலுங்கு முதலிய மொழிகளுக்குத் தந்தை மொழியெனத் திகழ்வது தமிழ் என்பது அவரது கருத்து.

இராமலிங்கரைப் போலவே தண்டபாணி சுவாமிகளும் பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளைக்கு அவர் பாடிய ஒரு பாடல் கருத்துக்கு முன்னோடி ஆகிறார். கலைமகளின் வலது மார்பகத்தைத் தமிழாகவும், இடது மார்பகத்தை வடமொழியாகவும் தண்டபாணி சுவாமிகள் பாடுவதன் பின்னணியில்தான் பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளையும் கலைமகளின் வலது விழியாகத் தமிழையும், இடது விழியாக வடமொழியையும் தம் தமிழ்த்தாய் வணக்கப் பாடலில் பாடியுள்ளார்.

மனோன்மணீய நாடகத்தின் பாடுபொருட்களில் ஒன்றாக அவரின் மொழிப்பற்று இடம்பெற்றுள்ளது. இதர பாடுபொருட்கள், நாட்டுப்பற்று, காதல், தத்துவம், அரசியலறம், மற்றும் வாழ்க்கை நெறிகளான இல்லறம், துறவறம், நடப்பியல் சிக்கலை உணர்தல் ஆகியனவாகும். மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் தமிழ்ப்பற்றை டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் கீழ்க்காணுமாறு எடுத்துரைக்கின்றார்:-

திரு. சுந்தரம்பிள்ளையவர்கள் தமிழ்மொழியினிடத்திலே மிக்க பற்றும் அன்பும் வைத்திருந்தவர் என்பது மனோன்மணீயத்திற்குப் பாயிரமாக அமைந்த தமிழ்த்தாய் வணக்கத்தை அவர் இயற்றியுள்ள வகையான் அறியப்படும். தமிழ்த்தாயின் அடியாகத் தோன்றியவை கன்னடமும், களிதெலுங்கும், கவின்மலையாளமும், துளுவும் போன்ற மொழிகள் என அவர் மொழிந்துள்ளார். தமிழின் கன்னித் தன்மையையும் சிறப்பினையும் பாராட்டியுள்ளார். ஆரியம் இந்திய தேசத்திற்கு வருவதற்குமுன் தமிழே முதல் மொழியாக இந்தியா யாங்கணும் பரவியிருந்தது என்பது அவரது கருத்து எனக் குறிப்பிட்டிருப்பதும், இதனை அரண்செய்வதுபோல் 'என்றுமுள தென்தமிழ்'

என்ற தலைப்பில் டாக்டர் ரா.பி சேதுப்பிள்ளையவர்கள், மனோன்மணீயம் என்னும் நாடக நூல் இயற்றி அழியாப் புகழ் பெற்றவர் பேராசிரியர் சுந்தரனார் அந்நூலிலே தமிழ்த்தாய் வாழ்த்தாக அமைந்துள்ள பாடல் இப்பொழுது நாடெங்கும் முழங்குகின்றது. அருமையான மொழி நூற்கருத்தொன்றை அழகாக வெளியிடுவது அப்பாட்டு என்று குறிப்பிட்டு வேறு சில விளக்கங்களையும் தெளிவுபடுத்தியுள்ளார்

திராவிட நாட்டில் வழங்கிவரும் கன்னடம் முதலிய நான்கு மொழிகளும் தமிழ்த்தாயின் சேய்கள் என்று திட்டவட்டமாகக் கூறுகிறார் சுந்தரனார் இக்கொள்கையை இன்று கன்னடரும், தெலுங்கரும், மலையாளத்தாரும், துளுவரும் ஏற்றுக் கொள்ளத் தயங்கினாலும் திராவிட மொழி நூல் ஆராய்ச்சியின் பயனாக இவ்வுண்மை நன்கு புலனாகும் என்பதில் ஐயமில்லை. இந்நான்கு சிறந்த மக்களையும் ஈன்ற நற்றாய் முதுமையும் இறப்புமின்றி ஒரு படித்தாய் இலங்கும் தன்மையை எண்ணி இறைஞ்சுகின்றார் கவிஞர்.

இவ்வுலகில் உள்ள சராசரங்களையெல்லாம் ஈன்ற பரம் பொருளாகிய இறைவன் என்றும் முதுமையின்றி வாழ்தல் போன்று மூவாச் சாவா மொழியாகிய தமிழும் என்றுமுள தென்தமிழாக வாழ்கின்றது என்று வாயார வாழ்த்தினார்.

'கொடுமலையாளக் குடியிருப்புடையேன்' எனறுதாம் வாழ்ந்த நாட்டின் சிறப்பினைக் கூறிய சுந்தரனார், மலையாள நாடு, தமிழ் மொழி ஆராய்ச்சிக்குப் பயன்படும் பான்மையையும் விளக்கிக் கூறியுள்ளார் இக்காலத்தில் தமிழில் வழங்கிவரும் பழஞ்சொற்கள் சிலவற்றின் வேரும் பொருளும் தெரிந்து கொள்ளுதற்குச் சில காலமேனும் தமிழாராய்ச்சியாளர்கள் மலையாள நாட்டில் குடியிருத்தல் வேண்டுமென்பது அவர் கொள்கை

எலும்பு என்ற சொல் தமிழ்நாட்டில் எங்கும் வழங்குகின்றது. ஆயினும் அச்சொல்லின் வேரும் பொருளும் விளக்கமாகத் தெரிய வில்லை. மலையாள நாட்டில் எல் எனும் சொல் எலும்பைக் குறிக்கின்றது 'எல்லு ஒடிச்சுவிடும்' என்பது மலையாளத்தில் ஒரு வஞ்சினவாகசம். திருக்குறளில் 'என்பு' என்ற சொல் வழங்குதலைத் தமிழறிஞர்கள் அறிவார்கள்

> *"அன்பின் வழியது உயிர்நிலை அஃதில்லார்க்கு*
> *என்புதோல் போர்த்த உடம்பு"*

என்ற குறளில் அமைந்துள்ள 'என்பு' என்பது 'எல்' எனும் வேரின் அடியாகப் பிறந்ததென்று கூறுதல் தவறாகாது. இலக்கிய வழக்கில் 'என்பு' என்று எடுத்தாளப்பட்ட சொல்லே உலக வழக்கில் எலும்பு

என்றாயிற்று ஆயினும் இச்சொற்களின் வேர் இன்று தமிழ்நாட்டில் காணப்படுவதில்லை; மலையாள நாட்டிலே காணப்படுகிறது என்பது உயத்துணரப்பாலது.

திராவிடன் என்ற உணர்வோடு பிற மொழிகளின் மீது காழ்ப்பின்றி இங்கு மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் தமிழ்மொழிப் பற்று ஆராயப்படுகிறது மேலும், பிற மொழிகளின்மீது வெறுப்பை உமிழ வேண்டிய தேவையில்லை; கூடாது மொழியின் இயல்பை அவர் கூறினாரேயன்றி எம் மொழியையும் அவர் தாழ்வாகவோ, குறைத்தோ கூறியதும் இல்லை; எடைபோட்டதும் இல்லை இதற்கு அவர் பயன்படுத்திய களிதெலுங்கு, கவின்மலையாளம் என்ற தொடர்களே சான்றுகளாம்.

நீர் நிறைந்த கடற்பரப்பை ஆடையாக உடுத்திய நிலமகளின் திருமுகமாகப் பரதகண்டம் விளங்குகின்றது தெக்கணமாகிய தென்னகம் திருமுக நெற்றியாகவும், தமிழகம் நெற்றிப் பொட்டாகவும், தமிழ்மொழி எத்திசையும் புகழ்மணக்கவும் உலகெங்கும் இன்புறவும் தக்க திலக நறுமணமாகவும் திகழ்கின்றன என்ற சுந்தரனார் பாடற்கருத்து எண்ணி எண்ணி இறும்பூதெய்த வைக்கின்றது.

ஆறடித் தரவு இரண்டின் வாயிலாகத் தமிழ்த் தெய்வத்தைப் பாடிப் பரவிய சுந்தரனார், பன்னிருதாழிசைகளால் தமிழ் இலக்கியப் பரப்பையும், இலக்கணச் சிறப்பையும், பழந்தமிழ் நூல்களின் மாண்பையும் புலப்படுத்தியிருப்பது நோக்கத்தக்கது

*''வள்ளுவர் செய்திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள்*
*உள்ளுவரோ மநுவாதி ஒருகுலத்துக் கொருநீதி''*

என்று கேட்கும் சுந்தரனார், ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்னும் திருக்குறள் கொள்கையை நிலைநிறுத்துகிறார்.

நாராயணன் என்ற பாத்திரப் படைப்பின் மூலம் நற்றமிழ் நலிந்தால் புகழும் உரிமையும் பறிபோகும் என்று எடுத்துரைக்கின்றார் இப்படி,

*'இதனினும் அபாயமிங்கு எய்துதற்கு இல்லை*
*நுந்தமிழ் மொழியும் அந்தமில் புகழும்*
*சிந்திடும் சிந்திடும் நுஞ் சுதந்தரமும்*
*இத்தகை நிலையில் என்னைநும் கடமை?'*

எனக் கேட்டு, நாட்டையும் மொழியையும் காத்திடத் தூண்டுவர்.

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை தாம் இயற்றிய நாடக நூலில் தமிழ்ப்பற்றுணர்வை மட்டும் காட்டாமல், வருங்காலத்தைக் கருத்தில் கொண்டு அறிவியலைப் போற்றியும், ஆங்கிலத்தில் உள்ள சில அறிவியற் கலைச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களை மொழி

பெயர்த்துத் தந்துள்ளார். தம் தமிழ்ப்பணியை விரிவு செய்துள்ளார் என்பதையும் அறிய முடிகிறது. சில எடுத்துக்காட்டுகள் கீழ்வருமாறு:-

| **இயல்பான சொற்கள்** | **சுந்தரனார் மொழிபெயர்த்த சொற்கள்** |
|---|---|
| எதிரொலி (Echo) | மாற்றொலி |
| மாலுமியின் திசைகாட்டும் கருவி (Mariner's Coms) | வடக்குநோக்கி |
| குவிஆடி (Convex Lens) | சிற்றாடி |
| ரசாயன மாற்றம் (Chemical Change) | வேதித்தல் |
| வெடிமருந்து (Gun Powder) | கருமருந்து |
| நெருப்புக்கோழி (Ostrich) | தீக்குருவி |
| மண்புழு (Earthworm) | நாங்கூழ்ப்புழு |

இவ்வாறெல்லாம் தமிழோடு கலந்திருக்கும் சுந்தரனாரை, கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை,

*"சொல்லிலமுதம் கனிந்து சுவை*
*சொட்டச் சொட்டக் கவி தருவோன்*
*நல்லன் பஹதூர் சுந்தரனை*
*நாளும் நாளும் போற்றுவமே"*

என்று போற்றியுரைப்பதில் தவறும் உண்டோ!

# 3
# நாடக மாண்பு

பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை என அழைக்கப்பட்டவர், ஒப்புயர்வற்ற 'மனோன்மணீயம்' என்ற நாடகத்தினைப் படைத்ததால் 'மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை' என்று அனைவரும் அழைக்கும் பேறுபெற்றார். அந்த அளவுக்கு அந்த நாடகம் பயில்வோர் அனைவரின் உள்ளங்களையும் ஈர்க்கும் ஆற்றல் பெற்றுள்ளது எனில் மிகையன்று.

நாடகக் கவிஞர் என்று போற்றும் நிலைக்கு உயர்ந்த மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை, இந்த அரிய மனோன்மணீய நாடகத்தை இயற்றி வெளியிட்டது 1891 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ஆகும்.

மனோன்மணீய நாடகக் கதையின் உட்பொருள், கதையின் அமைப்பு, கதைக்குரிய பாத்திரங்கள், நூலின் யாப்பு ஆகிய வற்றையெல்லாம் ஆங்கில நாடக ஆசிரியர், வில்லியம் ஷேக்ஸ்பியர் போல் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்து படைக்கத் தொடங்கினார் என்று தெளியலாம்.

மனோன்மணீயத்தின் கதை Edward Bulwer Lytton (1803 1873)பிரபு எழுதிய 'The Secret Way' என்ற ஆங்கில இலக்கியத்தைப் பின்பற்றியது. இந்நூலின் கிளைக்கதையாகிய சிவகாமி சரிதம், Goldsmith எழுதிய The Hermit என்பது. மனோன்மணீயத்தில் சிவகாமி சரிதம் போலவே Vicar of wake field என்ற நெடுங்கதையின் இடையே வருவது The Hermit என்பது குறிப்பிடத்தக்கது. லிட்டன் பிரபுவுக்கும் சுந்தரம்பிள்ளைக்கும் சில ஒற்றுமைகள் உண்டு. லிட்டன் மெய்யியல், சமூக ஒழுக்கம் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டிருந்தார். இதன் அடிப்படையிலேயே 'இங்கிலாந்தும் ஆங்கிலேயரும்' (England and the English) என்ற வரலாற்று நூலை எழுதினார். எனவே லிட்டன் பிரபுவின் நூல்கள் சுந்தரம்பிள்ளையை ஈர்த்ததில் வியப்பில்லை.

ஆனால் கதையை நம் நாட்டிற்குத் தகுந்தபடி மாற்றி அழகுற அமைத்துள்ளார் சுந்தரனார். நாடகத்தின் பெரும்பிரிவு அங்கமாகவும், சிறு பிரிவு களமாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

மொழிநடையின் அடிப்படையில், நாடகங்கள் பொதுவாக - கவிதை நாடகம், உரைநடை நாடகம், கவிதையும் உரைநடையும் கலந்த

நாடகம் என்று முப்பிரிவுகளாகப் பிரிக்கப்டும். மனோன்மணீயம் கவிதை நாடகமாகும். 19ஆம் நூற்றாண்டில் கவிதைச் செல்வாக்கு கொடி கட்டிப் பறந்தது எனினும் கவிதை நாடகங்கள் அளவில் சிலவே. வெனிஸ் வணிகன் (1876), மனோன்மணீயம் (1891), வீல நாடகம் (1894) என்ற மூன்றே அறியக் கிடக்கின்றன.

19ஆம் *நூற்றாண்டின்* இம்மூன்று கவிதை நாடகங்களும் பிறமொழிக் கதைப் பொருள்களைக் கொண்டதே. வீலநாடகம், கிரேக்கக் கதைப் பொருளைக் கொண்டது. இதில் 'களம்' என்ற பிரிவில்லை. 'வெனிஸ் வணிகன்' நாடகத்தில் அங்கம், களம் ஆகிய பிரிவுகள் உண்டெனினும் மொழிபெயர்ப்பு நாடகமாகும். சுந்தரம்பிள்ளையின் நாடகமான மனோன்மணீயம் ஐந்து அங்கங்களும், இருபது களங்களும் உடைத்தாயினும் தழுவல் நாடகம் ஆகும். மேலைநாட்டு நாடக மரபகளையொட்டி இவ்வாரு உட்பகுப்புக்கள் செய்யப்பட்டன.

தன் நாடக முன்னுரையில், ''பல்வேறு தொழில்களிடையிலும், பிணி கவலையாதிகள் நடுவிலும் ஆங்காங்கு அகப்பட்ட அவகாசங் களிற் செய்யப்பட்டமையால் இந்நாடகத்துப் பல பாகங்கள் என் சிற்றறிவிற்கே திருப்தி தருவன அல்ல. ஆயினும் கல்வி கேள்விகளிற் சிறந்த கனவான்கள் இக்கூறிய குறைவுகளைப் பாராட்டாது என்னை இம்முயற்சிக்குத் தூண்டிவிட்ட நன்னோக்கத்தையே கருதி இந்த நவீன நாடகத்தை அநாதரவு செய்யாது கடைக்கணித்து அருள்புரியப் பலமுறை பிரார்த்திக்கின்றேன்.

''பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து ஆள்வினை யின்மை பழி'' என, தன்னடக்கத்தின் எல்லையில் நின்று சுந்தரனார் பயில்வோரை வேண்டிக் கொள்வதே அவரைப் புகழின் கொடுமுடியில் கொண்டுபோய் நிறுத்தியது எனலாம்!

நாடக ஆசிரியர் கூறிக்கொள்வதுபோல் கருத்தை உறுத்தும் பிழைகள் இந்நாடகத்தில் அகப்படவில்லை என்பது அறிஞர்களின் ஒருமித்த கருத்து.

இவை இவ்வாறிருக்க, ஆய்வுநோக்குடன் நாடகத்துட் செல்வோம். 'மனோன்மணீயம்' படிப்பதற்கேற்ற நாடகம். நடிப்பதற் கேற்ற நாடகம் அன்று என்பது ஒரு சாரார் கருத்தாக இருந்தது. இது உரைநடையில் அமைந்திருந்தால் நடிப்பதற்கு ஏற்றதாக இருந்திருக்கக் கூடும். நாடக ஆசிரியரும் சிவகாமியின் சரிதம் உட்பட நான்கு பகுதிகளை நீக்கி விட்டு நடிக்கலாம் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். அவ்வளவு ஆர்வம் அவருக்கு, அதைக் கவிதை நாடகமாகவே மேடையேற்றிப் பார்க்க. ஆனால் அது இயலவில்லை.

இதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. நாடகப் பேராசிரியர் என்று புகழப்பெற்ற பம்மல் சம்பந்த முதலியாரிடம் மனோன்மணீயம் நாடகத்தின் ஒரு படியைக் கொடுத்துப் படித்துவிட்டுக் கருத்தைச் சொல்லுமாறு கேட்டிருந்தார் சுந்தரனார். பம்மல் சம்பந்த முதலியார் சுந்தரனாரைவிடப் பதினெட்டு ஆண்டு இளையவர். எனவே தன் கருத்தை வெகுநாட்களுக்குப் பிறகுத் தயக்கத்துடன் சுந்தரனாரிடம் தெரிவித்தார்.

நாடகம் செய்யுள் நடையில் நன்றாய் எழுதப்பட்டு இருக்கிறது. ஆயினும் இது தமிழ் நாடக மேடைக்கு உதவாது. ஒரு நாடகமானது முதன்மையாக நடிக்கப்படுவதற்கே எழுதப்பட்டதாகும். சமஸ்கிருதத்தில் காவியங்கள் எல்லாம் 'படன காவியம்', 'திருஷ்ட காவியம்' என்று பிரிக்கப்பட்டிருக்கின்றன. காளிதாசன் எழுதிய மேக சந்தேசம், ரகுவம்சம் முதலியன படிப்பதற்காக எழுதப்பட்டதற்கு உதாரணம். அம்மகாகவி எழுதிய சாகுந்தலம், விக்கிரமோர்வசியம் முதலியவை முக்கியமாக நடிப்பதற்கே எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, நாடகங்கள் எல்லோரும் பார்த்து நுகரத்தக்கவைகளாயிருக்க வேண்டும். உங்கள் மனோன்மணீயத்தை அப்படியே மேடை யேற்றினால் எத்தனை பேருக்குப் பொருளாகும்'', என்று வினவிய பம்மல் சம்பந்த முதலியாரின் கருத்தில் உண்மை இருப்பதை உணர்ந்து அம்முயற்சியைக் கைவிட்டார் சுந்தரனார். காரணம் வேறு சிலரும் இதே கருத்தைக் கொண்டிருந்ததேயாகும்.

ஆனாலும் பின்னாளில் மனோன்மணீயத்தினைச் சில மாற்றங்களோடு உரைநடைப்படுத்தி மறுபடைப்பாக்கி சண்முகசுந்தர முதலியார் என்பார் மேடையேற்றியதாக அறிகிறோம். இந்நாடகத்தை எவ்வாறேனும் மேடையேற்றிக் காண வேண்டும் என்ற ஆவல் பலரிடம் இருந்திருக்கிறது என்பது புலனாவதோடு, நாடகத்தின் வெற்றியும் அதுவேயானது. மேலை நாடுகளிலும் மேலும் சில மாறுதல்களோடு உரை நடையில் இருபதாம் நூற்றாண்டில் நடிக்கப் பெற்றதாக ஏ. என். பெருமாள் குறிப்பிட்டுச் செல்கிறார்.

இந்த இடத்தில் இன்னொரு கருத்தையும் குறிப்பிட வேண்டும். மனோன்மணீயம் நாடகமாக இங்கு நடிக்கப்பெறவில்லையே தவிர, வெகுமக்கள் ஊடகமாக (Mass Media) அப்போது வளர்ந்து கொண்டிருந்த திரைப்பட வடிவமாக எடுக்கப்பட்டது. இது பருத்தி புடவையாய்க் காய்த்தது போலாம். பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் நாடகக்கதைக்கு எம். எல். டாண்டன் திரைக்கதை அமைக்க, சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்து வெளியிட்ட இப்படத்தின் இயக்குநர் டி. ஆர். சுந்தரம். மனோன்மணீயம், ''மனோன்மணீ'' என்று பெயர்

மாற்றித் திரைப்படமாக்கப்பட்டு 1942, நவம்பர்த் திங்கள் 11-ஆம் நாள் வெள்ளித் திரைக்கு வந்தது.

அரங்க நிர்மாணத்திலும், கலைக்கூறுகளிலும் படம் சிறப்புற்றிருந்ததாகத் தகவல் தெரிவிக்கின்றது. 'நடிகமன்னன்' பி. யூ. சின்னப்பாவின் 13வது படம் இது. பி. யூ. சின்னப்பா - புருஷோத்தமன்; டி. எஸ். பாலையா - குடிலன்; டி.ஆர்.ராஜகுமாரி-பேரழகி மனோன்மணீ. கனவில் கண்ட காதலி மனோன்மணீயை நினைத்து,

*"மோகனாங்க வதனீ உனையே*
*காணும் பாக்கியம் வருமோ?"*
*எனக் காதலாகிக் கசிந்து உருகினார் பி.யூ. சின்னப்பா.*

காட்டிக் கொடுக்க நினைத்த குடிலனிடம் "எவனுடைய உப்பைத் தின்று இந்த ஊத்தைச் சடலத்தை வளர்த்தாயோ அவனையே காட்டிக் கொடுக்க நினைத்தாயே குடிலா?" என்று சாடினார் பி.யூ. சின்னப்பா.

'புருஷோத்தமன்' சின்னப்பா,அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் பேசுகிறார். "இந்தப் பாண்டி நாட்டுத் தமிழர், தம் உரிமை பாராட்டும் தன்மையர். அவர்களுக்குத் தேசமே தெய்வம். சுதந்திரமே சுவாசம். அவர்கள் கண்ணியத்தைத் தீண்டுவோர் கேடுறுவது திண்ணம். பகைவர்களே ஜாக்கிரதை!"

பாலையா(குடிலன்), ராஜகுமாரி(மனோன்மணீ) ஆகியோரின் நட்சத்திர அந்தஸ்து இந்தப்படத்தின் மூலம் உயர்ந்ததாகவும் தெரிகிறது. மேலும் 2001-இல் காலஞ்சென்ற திரை இசை அமைப்பாளர் 'திரை இசைத் திலகம்' என்றுபுகழ்க் கொடி நாட்டிய கே.வி. மகாதேவன் இந்த மனோன்மணீ திரைப்படத்தின்மூலம்தான் இசை அமைப்பாளராக அறிமுகம் ஆனார் என்பதும் இன்றியமையாக் கருத்தாகும்.

மனோன்மணீயம் பெரும்பாலும் அகவற்பா என்ற ஆசிரியப்பா வகையால் இயன்றதாயினும், மற்ற மூன்று பாவகையானும், துறை தாழிசை, விருத்தம் என்ற பாவினங்களானும் புனையப் பெற்றிருத்தல் கண்கூடு. மனோன்மணீயத்தில் ஐந்து அங்கங்களிலும் மொத்தப் பாக்களின் எண்ணிகை 184. 181 என்பாரும் உளர். அடிகளின் எண்ணிக்கை 4506.

மனோன்மணீயம் 1891-இல் நூலாசிரியராலேயே வெளியிடப் பெற்றது.1893-ஆம் ஆண்டு முதல் கல்லூரிகளில் பாட நூலாக வைக்கப்பட்டது. அது இன்றளவும் கல்வி நிறுவனங்கள் பலவற்றில் தொடர்கின்றது. இதுவரை, சற்று ஏறத்தாழ இருபத்து மூன்று பதிப்புக்கள் வெளிவந்துள்ளன. ஒருவரிமுதல் நூல்முழுமைக்கும் என ஒப்பாய்வு மற்றும் திறனாய்வுகளை இன்னும் பெற்று வருகிறதுஎனில் அதனுடைய உயிர்ப்பு எளிதில் புலனாகும்.

இந்த நாடகம் திருநெல்வேலியில் எழுதத் தொடங்கப்பட்டு, திருவனந்தபுரத்தில் எழுதி முடிக்கப்பெற்றது. இந்நாடகம் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையின் பதிப்புப் பணியில் முதற்பதிப்பாகும். 1922-இல் இதை வையாபுரிப்பிள்ளையவர்கள் மிகுந்த ஈடுபாட்டோடு பதிப்பித்தார்.

இப்பதிப்பினை அவர் முந்திய பதிப்புக்களுடன் ஒப்புநோக்கித் திருந்திய பாடங்களுடன் வெளியிட்டுள்ளார். 38 பக்கங்கள் கொண்ட நூலாராய்ச்சியை கே.என். சிவராஜப் பிள்ளையைக் கொண்டு எழுதச் சொல்லி அச்சிட்டுள்ளார். 'பதிப்பாளர் குறிப்பு' என்ற தலைப்பில் சில செய்திகளை மட்டும் வையாபுரிப் பிள்ளை தந்துள்ளார். மற்றும் விவரணக் குறிப்புகள், அரும்பத விளக்கம், மூலக்கதை ஆகியவற்றை இணைத்துள்ளார்.

வையாபுரிப் பிள்ளையவர்களின் பதிப்புப் பணியில் மனோன்மணீயப் பதிப்பு, முதல் பதிப்பு முயற்சியே என்றாலும் மனோன்மணீயப் பதிப்புகளில் முதன்மையானது எனக் குறிப்பிடலாம். இத்துடன் நிற்காமல், சென்னையிலிருந்து வெளியான 'திராவிடன்' என்னும் பத்திரிக்கையில் 'மனோன்மணீயத்தின் மறுபிறப்பு' என்ற தலைப்பில் அதுபற்றி மதிப்புரை ஒன்றை வெளியிட்டார் என்பதும் குறிப்பிடத்தகுந்ததாம்.

மேலும் இவர், தமிழ்ச் சுடர்மணிகள் என்னும் தன் நூலில் 'ஆசிரியர் சுந்தரம்பிள்ளை' எனும் தலைப்பில் 'தமிழ்த் தெய்வ வணக்கமொன்று அருமையாகவும், அழகாகவும் சுந்தரம்பிள்ளை இயற்றியுள்ளார். கண்ணகியை வணங்குவித்த இளங்கோவடிகளைப் போல், தமிழ்மொழியைத் தெய்வமாக்கி அத்தெய்வ வணக்கத்தை முதன்மையாகத் தொடங்குவித்தவர் இப்பேராசிரியரேயாவார்' எனக் குறிப்பிட்டிருப்பது நோக்கற்குரியதாம். பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராக விளங்கியபோதுதான் தமிழ்ப் பேரகராதியை உருவாக்கினார்.

'சோனார் பங்களா' என்ற தாகூரின் வங்க தேசிய கீதம் போல் தமிழ் மக்களுக்கு ஓர் ஒப்பற்ற தேசியப் பாடலை அளித்துள்ளார் சுந்தரனார். பிற்காலத்தில் தமிழ் மொழி சார்ந்த இயக்கங்களுக்கு உந்துசக்தியாகவும், திராவிட அரசியலின் வேருக்கு நீராகவும் தமிழர்களுக்குக் கிளர்ச்சி யூட்டுவதாகவும் இத்தமிழ்த் தெய்வ வணக்கம் அமைந்தது.

இக்கருத்தை வழிமொழிவது போல் ''இந்தத் தமிழ்நாட்டுப் பகுதிக்குத் திராவிட நல் திருநாடு என்றும், அது தெக்கணத்தில் சிறந்தது என்றும் கூறப்பட்டுள்ள செய்திகள் தமிழ் இலக்கிய வரலாற்றில்

புதுமையும், புரட்சியும் கொண்டவை என்றும், தமிழ்த் தெய்வ வணக்கம் உணர்ச்சியும், உருக்கமும், உறுத்தலும், ஊக்கமும் கொண்ட மறுமலர்ச்சியும் புரட்சியும் தாங்கிய உயிர்ப்புடைய பாடல்கள் என்பதனை எவர்மறுக்க முடியும்?'' என்றும் '**மனோன்மணீயம் சுந்தரனாரின் புரட்சி-திறன்**' என்ற தன் நூலில் குறிப்பிடுகின்றார் பேராசிரியர் டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம்.

*முகம், பிரதிமுகம், கருப்பம், துய்த்தல், வினை எனும் ஐம்பிரிவுகள்* உடையனவாய் உள்ளது இந்நாடகம். சுந்தரமுனிவருடைய வருகையில் தொடங்குவதாய் அமைந்த இந்நாடகம், குடிலனின் சூழ்ச்சியால் வளருகிறது. சேர நாட்டுடன் பாண்டிநாடு போர்புரிந்து போரிலே பாண்டியர் தோற்குமாறு செய்து குடிலனின் சூழ்ச்சிகள் வெளிவர மனோன்மணிக்கும், புருசோத்தமனுக்கும் நடக்கும் திருமணத்துடன் நாடகம் முடிகிறது.

*''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில்*
*பெயர்த்தல் வேண்டும்,*
*இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில்*
*இயற்றல் வேண்டும்''*

என்றார் மகாகவி பாரதி. பாரதிக்கு முன்பே இப்பணியைத் திறமையாக மேற்கொண்ட ஆற்றல் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளைக்கு இருந்தது. *சிக்கல் முறுகலும் நெகிழ்ச்சியும்* (Complication and Resolution Movement) என்ற ஆங்கில நாடக உத்தி 'மனோன்மணீயம்' நாடகத்தில் சிறப்பாகக் கையாளப்பட்டிருத்தல் கண்கூடு.

ஆங்கிலக் கவிதை நாடகங்களில் முன்னிலைக் கூற்று (Open Speech) புறக்கூற்று (Aside Speech) தற்கூற்று அல்லது தனிமொழி (Soliloquy) இடம்பெறுவது பெருவழக்காகும். மனோன்மணீயத்தில் இம்மூன்று கூற்றுகளும் திறன்தோன்ற நாடக ஆசிரியரால் கையாளப் பெற்றுள்ளன.

மனோன்மணீய நாடகத் தொடக்கமே முன்னிலைக் கூற்றாக அமைந்துள்ளது. குடிலனின் தீய பண்புகள் ஜீவகனின் 'வெளுத்த தெல்லாம் பால்' என்று நம்பும் குணம் ஆகியவை புறக்கூற்றுகளுக்கு எடுத்துக்காட்டாம். குடிலனின் தனிமொழித் தற்கூற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

மனோன்மணீயத்தால் நாடக ஆசிரியர் மனப்பான்மையையும் நமக்குச் சிறிது விளங்காமல் இல்லை. பண்டிதவர்க்கத்தினரையும் ஒருபால் தழுவி, முற்போக்காளரையும் ஒருபால் தழுவி இந்த அரிய நாடகம் இயற்றப் பெற்றதெனச் சொல்லலாம். பழையமுறைகளை முற்றும் கைவிட்டுவிடாது புதிய முறைகளில் நூல் இயற்ற வேண்டும்

என்ற மனப்பான்மையானது இப்போதுள்ளவர்க்கும் ஒத்ததாகவே உள்ளது.

இப்புதுமுறை நூல்களும் ஐரோப்பிய நாட்டு அறிஞர்களது சிறந்த இலக்கியச் செல்வங்களை ஒட்டியிருக்க வேண்டும் என்பதும் சுந்தரம் பிள்ளையின் மற்றொரு மனப்பான்மை. இவ்விருவகை மனப் பான்மையும் மனோன்மணீய நாடகத்தில் நன்றாகவே பிரதிபலிக்கிறது. இக்காரணத்தினாலேயே தமிழ்நாட்டிலுள்ள அனைவராலும் இந்நூல் போற்றி வரவேற்கப்பட்டது.

இந்த நாடகம் இப்பொழுது ஓர் உயர்ந்த தமிழ் இலக்கியம் (Classic) ஆகிவிட்டது. இதற்குக் காரணம், "தத்துவஞானம் விஞ்ஞானங் களின் பேரரசி" என்ற ஆங்கிலப் பழமொழிக்கேற்ப அமைந்துள்ளது மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை எழுதியது.

இந்நாடகத்தின் மதிப்புரையொன்று கிறிஸ்தவ கலாசாலைப் பத்திரிக்கையில், 'கமலாம்பாள்' ஆசிரியராகிய இராஜமைய்யர் எழுதியது இங்கே குறிப்பிடத்தக்கது. தமிழும் ஆங்கிலமும் கலந்து பெற்ற 'அரும்பெறல் மகவு' என்று, இந்த நாடகத்தைச் சொல்லலாம், என்றும் இன்றுவரை இதனோடு ஒத்த சிறப்புடைய நாடகம் தமிழில் பிறிதொன்று தோன்றியதில்லை என்றும் கூறியுள்ள பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களின் கருத்துக்களை நெஞ்சில் பதிய வைக்க வேண்டும்.

தமிழில் ஒப்பியல் ஆய்வுக்கு ஓரளவு பங்குப்பணி ஆற்றியுள்ள க. கைலாசபதி என்பாரின் கருத்துக்களையும் ஈண்டு நினவுகூர்வது பொருத்தமானதாகத் தோன்றுகிறது.

புதுமைக் கவிஞன் பாரதியாருக்குச் சிறிது முன்னதாகப் பிறந்த கோபாலகிருஷ்ண பாரதியார், அண்ணாமலை ரெட்டியார், இராமலிங்கர், பரிதிமாற் கலைஞர், மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை முதலானோர் சிற்சில துறைகளிலே பாரதியாருக்கு முன்னோடிகளாக விளங்கினர் என்பது இப்பொழுது மெல்ல மெல்ல உணரப்பட்டு வருகிறது. இவருள் மனோன்மணீயம் ஆசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை குறிப்பிடத்தக்கவர் என்று பாரதியோடு ஒப்பிட்டுக் கூறிவரும் கருத்துக்களில், சுந்தரனாரின் பெருமைகள் பின்னும் சுடர்விட்டு ஒளிர்கின்றதைத் தரிசிக்க முடிகின்றது.

சுந்தரம்பிள்ளை 19-ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்த தலையாய தமிழ்ப் பெருமக்களில் ஒருவர். ஆங்கில ஆதிக்கத்தின் விளைவாகச் சென்ற நூற்றாண்டின் இறுதிக்காலப் பகுதியில் ஆங்கில மொழி நாகரிகம் முதலியவற்றின் தாக்கமும், அவற்றிற்கு ஆதாரமாக இருந்த மத்திய தரப் பிரிவினரும், அதற்கு அடிப்படையாகக் கைத்தொழிற் பெருக்கமும்

காணப்பட்டன. இத்தகைய சூழலில் ஆங்கிலக் கல்வியும், அதனோடு தொடர்புடைய வினைகளும் இந்தியத் துணைக் கண்டத்தில் ஏற்பட்டன. ஆங்கில அறிவும், அதனால் பெறப்பட்ட சமூக உயர்வும் சிலரை ஒன்றிணைத்தன.

ஆங்கில வரலாற்றுப் புதின ஆசிரியர் 'சர். வால்டர் ஸ்காட்' டைப் பின்பற்றி எழுதிய பங்கிம் சந்திரரும், மில்டனைப் பின்பற்றி காவியம் படைத்த மைக்கேல் மதுசூதனதத்தரும், ஐரோப்பிய இலக்கிய ஆசிரியரைப் பின்பற்றி நாடகம் எழுத முனைந்த துவிஜேந்திர லாலராயர், ஆங்கிலப் பாடல்வகைகளில் ஒன்றான 'சானட்' (Sonnet)- அமைப்பைப் பின்பற்றிப் புதுப்பாடல்கள் படைத்த பரிதிமாற்கலைஞர் போன்றோர் அனைத்திந்தியப் போக்கு ஒன்றின் பிரதிநிதிகளாக இருந்தனர். இவர்களைப் போன்ற ஓர் உன்னதப் படைப்பாளர்தான் பெ.சுந்தரம்பிள்ளை.

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையும், அவர் போன்றோரும், தாய் நாட்டின் பழஞ்சிறப்பையும், தாய்மொழியின் தொல்வளத்தையும் உணர்ந்திருந்தனர். அதேசமயத்தில் மேனாட்டின் நவீன காலச் சிறப்பையும் பெருமையையும் கண்டறிந்தனர். தமது படைப்புக்கள் இவ்விரு தகைமைகளுக்கேற்ப இருத்தல் அவசியம் என்று கருதினர். சுருக்கமாகவும் எளிமையாகவும் கூறுவதாயின் செந்தமிழின் நலமும், நவீன ஆங்கில இலக்கியத்தின் பொருளமைதியும் தமது இலக்கியத்தில் அமைவதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர் எனலாம். இன்னொரு வகையாகச் சொன்னால், மரபுவழி வந்த தமிழறிஞரும், ஆங்கில இலக்கிய அறிவுடையோரும் ஒருங்கே போற்றக்கூடிய இலக்கியங் களைப் படைக்க விரும்பினர். இக்காலம்தொட்டே புதுத் தமிழ் நூல்களுக்கு ஆங்கிலத்தில் நீண்ட முன்னுரை எழுதும் வழக்கம் ஏற்பட்டது. சுந்தரம்பிள்ளை, பரிதிமாற் கலைஞர், வெள்ளக்கால் சுப்பரமணிய முதலியார், சோமசுந்தர பாரதியார், மறைமலை அடிகள் போன்றோர் தத்தம் படைப்பிலக்கிய நூல்களுக்கு நீண்ட ஆங்கில முன்னுரை எழுதினர். சுந்தரம்பிள்ளை தமது முகவுரையில் பின்வருமாறு கூறியுள்ளார்.

''கல்விகேள்வியால் நிறைந்த இத்தலைமுறைச் சிரேஷ்டர் அங்கீகரித்து எனது இச்சிறு முயற்சியும் தமிழ் மாதாவுக்கு அற்புதமாகும்படி அருள்புரியாதொழியார் என நம்பிப் பிரகடனஞ் செய்யப்படுகிறது''.

நூலாசிரியரின் நம்பிக்கை வீண்போகவில்லை. அக்காலத்து போப், பூண்டி அரங்கநாத முதலியார், சி. வை. தாமோதரம் பிள்ளை, பி. ஆர். இராஜமைய்யர், கே.ஜி. சேஷையர் முதலானோர் தமிழிலும்,

ஆங்கிலத்திலும் மனோன்மணீயத்தின் அருமை பெருமைகளை வியந்து பாராட்டினர். பிள்ளையைப் பின்தொடர்ந்து செய்யுள் நாடகங்கள் இயற்றிய சி. எஸ். முத்துஸ்வாமி அய்யர், வடுவூரார் (துரைசாமி ஐயர்) இருவரும் முறையே தமது விசுவநாதம் (1906), திலோத்தமா (1921) நாடகங்ளில் இந்நெறியினையே மேற்கோண்டமை கருதத்தக்கது என்று கருத்துரைத்த க. கைலாசபதி. சுந்தரனாரின் தமிழ்த் தெய்வ வணக்கத்தைப் பற்றிக் கூறும்போது, 'அவர் திருக்குறளையும் மனுநீதி சாத்திரத்தையும் ஒப்பிட்டும், திருவாசகத்தையும், வேதத்தையும் ஒப்பிட்டும் தமிழின் உயர்வு பேசுகிறார். இவ்வகையில், சுந்தரம் பிள்ளைக்கு வழிகாட்டியாகப் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளைக் குறிப்பிடலாம்' என்றும் குறிப்பிட்டுள்ளார். இவையெல்லாம் ஏற்புடைய கருத்துக்களேயாம். ஆனால், இப்படிக் கூறிக்கொண்டே செல்லும் கைலாசபதி அவர்கள் பாரதி பெரியவரா, சுந்தரனார் பெரியவரா என்ற ஒரு சர்ச்சையை நோக்கிப் போவதைப் பார்க்க முடிகிறது. இங்கு அதற்குத் தேவையே இல்லை.

பிறப்பிலே பாரதியாரைவிட மூத்தவரான மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, அறிவியற் கல்வி ஆகியவற்றில் பாரதிக்கும் முன்னோடி என்பதும், அவர் வாழ்ந்த அரசியல் மற்றும் சமுதாயச் சூழலுக்கு உட்பட்டே தமது படைப்புக் களைப் படைத்துச் சென்றுள்ளார் என்பதும், பாரதியும் அத்தகைய சூழலுக்கு ஆட்பட்டே தமது நாட்டு விடுதலைக் கவிகளைப் புனைந்து சென்றுள்ளார் என்பதும் மறுக்க முடியாத உண்மைகளாம்.

மனோன்மணீயம் நாடகத்தில் சுந்தரனாரின் தமிழ்ப்பற்றுக்குச் சான்றுகூறும் 'தமிழ்த் தெய்வ வணக்கம்' பாடல்களைவிட, நாடகத்துள் வேறு சில அடிகளும் உண்டு. அவைகளாவன:-

*'அமிழ்தினும் சிறந்த தமிழ்மொழி'*
*''விந்தம் அடக்கினோன் தந்த நற்றமிழ்மொழி''*
*'கண்துயிலாது கனிவுடன் கேட்ட வண்தமிழ்மொழி'*

சங்க இலக்கியம், திருக்குள் ஆகியவற்றைத் தம் நாடகத்தில் பொன்னேபோல் போற்றிப் பாராட்ட அவர் தவறவில்லை. சுந்தரம் பிள்ளை இடத்திற்கேற்றாற்போல் முன்னோர் மொழி பொருளைத் தம் நாடகத்தில் பயன்படுத்தியுள்ளார். தமிழ்ப்பழமொழிகளை மட்டும் அல்லாது ஆங்கிலப் பழமொழிகளையும் தக்க இடத்தில் கோத்துக் காட்டியிருப்பது நாடகத்தின் நயத்திற்கு மேலும் நயம் சேர்ப்பதாக இருக்கிறது.

'புத்தியே சகலசத்தியும்' என்ற பொருள்கொண்ட **'Knowledge is Power'** என்னும் ஆங்கிலப் பழமொழியையும். 'ஆத்திரந்தனக்குச்

சாத்திரம் என்னை' என்ற பொருள்கொண்ட 'Necessity has no law' என்னும் ஆங்கிலப் பழமொழியையும். 'கால விளம்பனஞ் சாலவும் தீதே' என்ற பொருள்கொண்ட 'Delay is Dangerous' என்னும் ஆங்கிலப் பழமொயியையும் சான்றுகளாகக் குறிப்பிடலாம்.

மனோன்மணீயத்தின் யாப்பும் மனங்கொள்ளத்தக்கதாம்.

*''எழுத்து முதலா ஈண்டிய அடியில்*
*குறித்த பொருளை முடியநாட்டல்*
*யாப்பு''*

எனத் தொல்காப்பியமும்,

*''எழுத்தசைசீர் தளையடி தொடை தூக்கோடு*
*இழுக்கா நடையதுயாப் பெனப் படுமே''*

என யாப்பருங்கலமும் யாப்பிற்கு இலக்கணம் கூறுகின்றன.

''யாப்பு'' என்னும் சொல் மீட்டர் (Metre)என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு ஒப்பானது. ஆனால் கிரேக்க மொழியில் இச்சொல்லிற்கு 'அளவியல்' என்று பொருள் என ஆங்கிலக் கலைக் களஞ்சியம் இயம்புகிறது.

ஒலிநயத்தோடு கூடிய அசை வகைகளின் பிணைப்பே யாப்பு எனப் பேராசிரியர் 'செயின்ட்ஸ்பரி' கூறிய கருத்தை அப்படியே ஆமோதிக்கும் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் கருத்தும் ஈண்டு மனங்கொள்ளத்தக்கதாகும்.

தமது நாடக இலக்கியமாகிய மனோன்மணீயத்திற்குச் சுந்தரம் பிள்ளை ஆசிரியப்பாவைப் பயன்படுத்துவதற்கு, நாடகக் கதையைக் கூறுவதற்கு ஆசிரியப் பாவே வாய்ப்பாக இருக்கும் என அவர் கருதியதே காரணமாகும். மேலும் அவரே கூறியிருப்பதுபோல், 'ஏறக்குறைய வாசகநடைக்குச் சமமாக ஆசிரியப்பா அமைந்திருப்பதும்' ஒரு காரணமாக இருக்கக் கூடும்.

நீண்ட காப்பியங்களாகிய சிலப்பதிகாரமும், மணிமேகலையும் ஆசிரியப்பாவில் இயன்றுள்ளமையை இங்கு எண்ணிப் பார்ப்பதும் பொருத்தமாகிறது. மனோன்மணீய நாடகத்தின் யாப்பை ஒட்டுமொத்தமாகச் சிந்தித்தால் ஆசிரியப்பாவைத் தவிர பிற பாக்கள் அல்லது பா இனங்கள் பதினோரு இடங்களில் யாப்பு மாற்றத்தைப் பெற்றுள்ளது புலனாகும். அவற்றுள் ஆறு இடங்களில் ஐந்து வகைகள்-ஆசிரியத் தாழிசை, கொச்சகக்கலிப்பா, கலித்தாழிசை, வஞ்சித் தாழிசை, (இரண்டு இடங்களில் குறள் வெணசெந்துறை) பாடற்காட்சிகளாகவே அமைகிறது. பிறவிடங்களில் செய்திகளைப் பொதிந்து கூறுவதற்கு அல்லது போர்க்களக் காட்சியை வருணனை செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

''மரபு வழிப்புலவர்களின் நெறியிலிருந்து மாறுபட்டுச் சுந்தரனாரின் ஆளுமைத் தனித்தன்மையோடு வீறுநடைபோடுகிறது.

பரந்த உலகம் என்ற கருத்தோட்டம் உடைமையால் தன் இயல்நிலத்தில் வேர்பதியாமல் சுந்தரனாரின் ஆளுமை அந்தரத்தில் பறக்கவில்லை. எனவேதான், 'கொடுமலையாளக் குடியிருப்புடையேன் ஆயினும் நீயேதாயெனும் தன்மையின்' எனவும், 'நாட்டபிமானம் உள்மூட்டிய சினத்தீ அன்றோ வானோர்க்கு என்றும் உவப்பு' எனவும் பாட முடிந்தது தன் நாடகத்திற்கு வடமொழி ஆக்கத்தையும், ஆங்கில நாடகத்தையும் பின்பற்றிய அவர் 'ஆரியம்போல் உலகவழக்கு அழிந்து ஒழிந்து சிதையாத சீரிளமைத் தமிழ்த்தாயை ஏற்றிப் போற்றவும் மறக்கவில்லை. சைவத் தத்துவத்தில் ஆழங்கால் பட்டுத் திளைக்கும் சுந்தரனாரின் ஆளுமை, 'சங்கப் புலவர்கள் திருவள்ளுவர் போன்ற ஞானிகளை நாடிப் போற்றும் சுந்தரனாரின் ஆளுமை', பழமொழி பேசும் பாமரர்களையும் மறந்ததில்லை! ஆன்மீகம் பாடுவோனாயினும் உலகியல் பாடுவோனாயினும் அந்தக் கவிஞனின் ஆளுமை அடையும் இமாலயச் சாதனை ஓர் அறிஞர் கூறுவது போல் விழுப்பக் கலை நிகழ்ச்சியை எட்டுவதுதான். சுந்தரனாரும் தம் கவிதை நாடகம் மூலம் ''தமிழ் இலக்கிய உலகில் இமாலயச் சாதனையை எட்டியவர் தான்'' என்னும் டாக்டர் கே.குற்றாலம்பிள்ளையின் கருத்துமணிகள் பொருந்தி வருகிறதன்றோ! இனி, மனோன்மணீயத்தில் பாத்திரப் படைப்புக்களைத் தனித்து நின்று ஆராய்ந்தால், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோற்றுப் பருக்கையையே பதம் காணப் பயன்படுத்துவதுபோல், மனோன்மணீய நாடகத்தின் அத்துணைப் பாத்திரங்களையும் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை வஞ்சகப் பாத்திரமான 'குடிலன்' பாத்திரத்தை எடுத்துக்கொண்டாலே போதும்.

குடிலன் பாத்திரத்தைப் பொதுவாக 'வில்லன்'(Villain)என்று குறிப்பிடுவர். ஆனால், வில்லன் என்ற எதிர்மறைப் பாத்திரத்திற்குப் புதிய பொருள் பொதிந்த சொல்லாக 'எதிரன்' என்று பிரயோகித்து இருக்கிறார் டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம் அவர்கள். குடிலன் யார் யாரோடு எதிர்த்துப் போராட்டம் நிகழ்த்துகிறான் எனில்- மன்னன் ஜீவகன், குருசுந்தரமுனிவர், நண்பன் நாராயணன் ஆகிய மூவரோடும் உள்முகப் போராட்டம் நிகழ்த்துவதாகக் கதை செல்கிறது.

இந்த எதிரன் குடிலனை ஏ.என். பெருமாள் 'முரணன்' என்று குறிப்பிடுவது நோக்கத்தக்கது. இயல்பான குணங்களினின்றும் முரண்பட்டு நடந்துகொண்டதால் இப்பெயர் பெற்றான்போலும்!

மேலும் அவர், குடிலனை 'ஒத்தெல்லோ'நாடகத்தில் வரும் எதிர்மறைப் பாத்திரமான இயாகோ(Iago)-வுடன் ஒப்பிடுவது

நோக்கத்தக்கது கேஸியோ(Cassio)-வுக்கும் கீழ்ப்பதவியில் தான் இருப்பதால், இயாகோவின் மனத்தில் பொறாமை அவன் மனத்திற் குள்ளேயே ஒலியில்லாமல் வெடித்துச் சிதறுவதை ஷேக்ஸ்பியர் படம்பிடித்துக் காட்டத் தவறவில்லை.

குடிலனுக்குத் தன் ஆற்றலைப் பற்றி முழு நம்பிக்கை இருந்தது. அவனது தனிமொழி மூலம் இது தெளிவாகிறது

*"புத்தியே சகல சத்தியும்; இதுவரை*
*நினைத்தவை அனைத்தும் நிறைவேறினவே"*

என்பது அவன் கூற்று.

இதேபோல் பிறர் மெலிவுகளை அல்லது பலவீனங்களை (Weakness)க் கண்டறிந்து காரியம் சாதிப்பதில் வல்லவனாக இயாகோ திகழ்கிறான்.

நாடகத் தொடக்கத்திலேயே இயாகோ வெனிஸ் நாட்டுக் கனவான் 'ரொட்டிரிகோ' (Roderigo)- வின் அன்பைப் பெற்றுத் தருவதாகக் கூறி அவனிடமிருந்து செல்வத்தைக் கவர்ந்த அவன், கனவான் போனபின்பு தனி மொழியாகக் கூறுகிறான்:

"இவ்வாறு, மடையர்களை என்னுடைய பணப்பையாக ஆக்கிவிடுவேன்" (Thus do I even make my fool my purse)என்று கூறித் தன்னைத்தானே மெச்சிக்கொள்கிறான்.

இறுதிவரையில் தங்களுடைய நிறங்களை எதிரர்களான குடிலனும், இயாகோவும் தம் மன்னர்களிடம் காட்டிக்கொள்ளாமல் இருப்பதிலிருந்து, அவர்கள் இருவரும் தங்கள் உள்ளக்கிடக்கையை இறுக்கமாகப் பூட்டி வைத்துள்ள திறமை வியக்க வைக்கிறது!

குடிலன்மேல் ஜீவகனுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்ததைப் போலவே, ஒத்தெல்லோவுக்கும் இயாகோவின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. மனோன்மணீ வாயிலாகச் சுந்தரனார் குறிப்பிடும் "நம்பல் என்பதுவே அன்பின் நிலைமை" என்ற கூற்று எவ்வளவு கொடூரத்தை உருவாக்கி விடுகிறது! ஒத்தெல்லோ, வெனிஸ் மன்னன் டியூக்கிற்கு இயாகோவைப் பற்றிக் கூறும்போது, 'அவன் ஓர் உண்மையான நம்பிக்கையான மனிதன் அவனுக்கு வழித் துணையாக என் மனைவியை அனுப்புவேன் (A man he is honesty and trust; to his conveyance I assign my Wife)- என்று கூறிய பின்பு, இயாகோவின் சதியால் தன் மனைவியைத் தானே கொன்றுவிட்ட பின்பும் அவன் மேல் நம்பிக்கை கொண்டிருக்கும் கொடுமைதான் நம் இதயத்தையே உறைய வைக்கிறது.

டெஸ்டிமோனோவின் கொலைக்கு யார் காரணம் என்று இயாகோவின் மனைவி எமிலியா கேட்கும்போது ஒத்தெல்லோ

சொல்லுகிறான்: ''என் நண்பன், உன் கணவன் நேர்மைக்கு நேர்மையான இயாகோ'' (My friend Thy husband honest lago)என்கிறான். இதைக் கேட்டதும் எமிலியா ''அட கொலை பாதகா! மடையா'' என்று கூக்குரல் இடும்போதுதான் ஒத்தெல்லோவுக்குக் கண்திறக்கிறது; மனைவியின் மாண்பு புரிகிறது. நெஞ்சு வெடிக்க - சோகம், கோபம் ஆகியவற்றின் எல்லையில் நின்று கதறுகிறான் இயாகோவைப் பார்த்து -

''அடேய்! ஈடு இணையற்ற வஞ்சகா!''(O! Precious Villain) என்ன பயன்?

ஷேக்ஸ்பியரும், சுந்தரனாரும் போட்டி போட்டுக் கொண்டு இயாகோவையும், குடிலனையும் செதுக்கிச் செதுக்கி அப்பாத்திரங் களைப் படைத்ததுபோல் உள்ளது. இருப்பினும் குடிலனின் பாத்திரப் படைப்பில் குரூரத்தன்மை குறைவாகவும், ஒத்தெல்லோவின் பாத்திரப் படைப்பில் குரூரத்தன்மை மிகையாகவும் இருப்பதைக் காண முடிகிறது.

மற்ற பாத்திரப் படைப்புக்களை விட்டுவிட்டு ஏன் எதிர்மறைப் பாத்திரங்கள் மட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டன எனில், சிக்கல் உருவாக்கும் பாத்திரமாகவும், கதைப் பின்னலுக்குத் தேவையான பாத்திரமாகவும் இருப்பதால் இவையிரண்டும் ஈண்டு எடுத்துக்காட்டப் பட்டன. குடிலன் கொடியவன் எனில் இயாகோ மிகக் கொடியவன்.

காவியங்களைப் படைக்கும் கவிவாணர்கள் தங்கள் காவியத்தில் தங்களையே ஒரு பாத்திரமாக உருவாக்கி உலவவிடுவது அவர்களை யறியாமலேயே அக்காவியங்களில் நடக்கும் அனிச்சைச் செயலாகும்.

மனோன்மணீயத்தில் நடராசன் பாத்திரப் படைப்பு இன்றி யமையாதது.

'அழகன், ஆனந்தன்' எனறன்றோ குடிலனும் புகழ்வது போல் இகழ்கின்றான்! ஒரு காட்சியைக் காண்போம். கதிரவன் எழுவது கண்டு நடராசர் பாடும் பாட்டு ஆசிரியர் பிள்ளை பாடும் பாட்டே எனலாம்.

*''ஓவியத் தொழில் வலோன் நீவியக்கிழியில்*
*தீட்டுவான் புகுந்த சித்திரம், நீட்டுந்*
*தூரியந் தொடத் தொடத் துலங்குதல் போலச்*
*சூரியன் பன்னிறக் கதிர்கள் தொடத் தொட*
*உருவுதோன்றாவணம் ஒன்றாய்ச் செறிந்து*
*கருகிருள் மயங்கிய காட்சிகழிந்து*
*சிறிது சிறிதாய் உறுப்புக்கள் தெளியத்*
*தோன்றும் இத்தோற்றம் நன்றே''*

இவ்வளவும் கூறியதால் நடராசரை ஆசிரியர் சுந்தரம்பிள்ளையின் 'இலக்கிய ஒளி நிழல்' என்றே கொள்ளலாம். பாவாணர்கள் தம் இலக்கியத்தில் தம் ஒளிவடிவம் இவ்வாறு அமைத்து வைப்பதும்

மரபேயாகும். ஷேக்ஸ்பியர் தமது புயற்காற்று (Tempest)- என்ற நாடக நூலில் 'பிராஸ்பெரோ'(Prospero) என்ற நாடக உறுப்பினரைத் தம் நிழல் ஓவியமாகவே பாடிவைத்தார் என உலகம் இன்றும் போற்றுகிறது. அஃதே போல நடராசரையும் பிள்ளையவர்களின் ஒளிநிழல் (பிரதி பிம்பம்) எனக்கூற இடம் உள்ளது.

மனோன்மணீய ஆசிரியர், தம் நாடகத்தில் புதுமை ஆற்ற விழைந்ததின் விளைவாகப் பெண் விடுதலைக்கு வாணியையும், அறிவியல் நோக்குக்கு நடராசனையும், மெய்ப்பொருள் விளக்கத்திற்கு கருணாகரர், நிஷ்டாபரர் ஆகியோரையும், பாத்திரங்களாய்ப் படைத்துள்ளார். தமிழ் மொழிப் பற்றிலும் தலைநின்றார். தமிழ், தமிழர், தமிழ்நாடு என்ற கருத்தியலுக்கு, வளமும் வனப்பும் சேர்த்த தமிழ்த் தேசியத்தின் துருவ நட்சத்திரமாக விளங்கியவர் சுந்தரனார் எனில் மிகையல்ல.

இந்த இடத்தில், மனோன்மணீயம் நாடகத்தின் உருவத்தையும் உள்ளடக்கத்தையும் ஒரேவழி ஆராயும்போது, மனோன்மணீயம் இயற்றப்பட்ட காலத்தில் கேரளத்தின் நாடகச் சூழல் யாது என்று அறிதல் இந்நாடக மதிப்பீட்டுக்குச் சிறப்பளிக்கும்.

கூடியாட்டம் வடமொழி மரபின் கேரள வடிவமாக எழுந்தது. கதகளிநாட்டிய மரபும் செழித்திருந்தது. ஒரு பக்கம் வடமொழிச் செல்வாக்குக்கு ஆளான நாடக மரபும் மற்றொரு பக்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே மொழி பெயர்ப்புகள் செய்யப்பட்டுவிட்ட ஆங்கில நாடகங்களின் மரபும் கலந்து மலையாள நாடகங்கள் உருவாகத் தொடங்கின. வடமொழி மரபுகள் சார்ந்திருந்தாலும் கூடியாட்டம் கதகளி, துள்ளல் வடிவங்களில் நாட்டார் மரபு ஆதிக்கம் பெற்றிருந்தது. அதே சமயம் மலையாள நாடகத்துக்குள் ஒரு தமிழ் நாடக அலையும் வீசியது. தமிழ் இசைக் கலைஞர்கள் தமிழ் நாடகக் குழுக்கள், மலையாள மக்களுக்கு ஸ்வாதித் திருநாள் (1829-1847) காலத்திலிருந்தே அறிமுகமாயினர். தொடர்ந்து கல்யாணராமய்யன், ராமுடு, சாமிஐயர், குழுக்கள் தமிழ்நாடகங்களைக் கேரளத்தில் அரங்கேற்றினர். ஆரிய மாலா தமிழ்நாடகம் 1882 ஆம் ஆண்டிலேயே கேரளத்தில் நடிக்கப் பட்டது.

தமிழ்நாடகங்களின் செல்வாக்கு வண்ண வண்ண உடைகளும், மின்னும் ஆபரணங்களும், மிகையுணர்ச்சி நடிப்புமாகக் கேரள நாடக உலகைப் பாதித்தது என்றும் விரைவில் அந்தச் செல்வாக்கு மங்கியது என்றும் ஜி. சங்கரபிள்ளை குறிப்பிட்டுள்ளார். வடமொழி நாடகங்களின் மொழிபெயர்ப்பும் ஷேக்ஸ்பியர் நாடகங்களின் மலையாள ஆக்கமும் 19ஆம் நூற்றாண்டு மலையாள நாடக இலக்கியத்தைச்

செழுமைப்படுத்தின. ஆனால் இந்தக் கேரள நாடகச் சூழலின் பாதிப்பு எதையும் மனோன்மணீயம் பெற்றிருக்கவில்லை

ஆங்கில, வடமொழி நாடகக் கூறுகள் சிலவற்றைத் தம் விரிந்த கல்வியால் பெற்றுப் பயன்படுத்திய அடையாளங்கள் மட்டுமே மனோன்மணீயத்தில் காணக் கிடக்கின்றன. அதாவது, தொழில்முறை நாடக உலகோடு பொருந்தாத அறிவுசால்படைப்பாக (Scholarly in Nature)- மட்டும் மனோன்மணீயம் உருவானது எனலாம்

*" தேடிவைத்த செல்வ மெல்லாம்*
*திரை கொண்டோட வருந்திமுகம்*
*வாடி மெலிந்த தமிழணங்கு*
*மகிழ்ந்து மகிழ்ந்து கூத்தாட,*
*நாடும் அறிய மனோன்மணிய*
*நாட கத்தைச் செய்தளித்த*
*நீடு புகழோன் சுந்தரனை*
*நித்தம் நித்தம் போற்றுவமே"*

என்னும் கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளை பாடலின் பொருள் இங்கு எண்ணி மகிழத்தக்கதாம்

# 4
# திருஞான சம்பந்தர்கால ஆராய்ச்சி

**நா**ம் முன்பே குறிப்பிட்டவாறு மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை தத்துவம், வரலாறு, தமிழ் ஆகிய முப்பரிமாணம் கொண்டவர் என்பது, அவரது வரலாற்று ஆய்வுகளில் புலனாகும்.

எத்துறையிலும் இன்று(கி.பி.2001)அறிவியல் ஆய்வுமுறை வேண்டும் என்று பரவலாகப் பேசுவதைக் கேட்கும் நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிற நாம், ஒன்றேகால் நூற்றாண்டு காலத்திற்குப் பின்னோக்கிச் சென்று பார்க்க வேண்டியது கடமையாகிறது.

ஒரு புதிய முறை ஆய்வு முயற்சியில் ஈடுபட்டு, ஆய்வு நெறி முறைகளை உருவாக்கும் வகையில் - அதுவும் வரலாற்று ஆராய்ச்சியில், அவர் ஈடுபட்டிருந்தார் எனில் அதற்குக் காரணம், அவரது ஆங்கில அறிவும் ஆற்றலும் பிறநாட்டு ஆய்வு நெறி முறைகளை அறிந்திருந்ததுமேயாகும்

''தமிழ் இலக்கிய வரலாற்றில் சில மைல் கற்கள் அல்லது திருஞான சம்பந்தரின் காலம்'' (Some Mile Stone, in the History of Tamil Literature or The Age of Tirujnanasambandha)என்பது மூலநூல். இது நூல்வடிவம் பெறுவதற்கு முன்பு, சென்னைக் கிறித்துவக் கல்லூரி இதழ்களில் 1891 இல் கட்டுரைகளாக வந்துள்ளது என்பது அறியப்படுகிறது (Madras Christian College Magazine for 1891 under the title of "The age of Tirugnana Sambandha - a question of South Indian Archaeology) 1895 இல் நூல் வடிவம் பெற்றது.

இந்நூல் இந்திய அரசின் தொல்லியல் ஆய்வாளராக விளங்கிய 'ராய்பகதூர்' வி. வெங்கையா அவர்கள் முன்னுரையோடு வந்துள்ளது.

மேலும், எம். ஆர். ராய்பகதூர் கே. ஜி. சேஷ அய்யர் (திருனந்தபுரம் - உயர்நீதிமன்ற வழக்கறிஞர்) சுந்தரம்பிள்ளையின் சுருக்கமான வாழ்க்கை வரலாற்றை எழுதி இணைத்திருப்பதும் இந்நூலில் காணக் கிடைக்கிறது.

இந்நூல், தென்னிந்திய வரலாற்று ஆராய்ச்சித் தலைவர் டாக்டர் இ.கூல்ச் (Dr.E.Hultzsch) என்பார்க்குக் காணிக்கை ஆக்கப் பட்டிருக்கிறது என்பதோடு, திருச்சிராப்பள்ளியில் உள்ள டி. ஏ.

சொசைட்டியினரால் 1909 மார்ச் திங்கள் 10-ஆம் நாள் வெளியிடப் பெற்றதேன்றும் அறியலாகிறது. 1895 மார்ச் 24 அன்று திருவனந்தபுரம் ஹார்விபுரத்தில் நூலாசிரியரால் வெளியிடப்பெற்ற முதற்பதிப்பு நமக்குக் கிட்டவில்லை.

ஆங்கிலத்தில் அறுபத்தைந்து பக்கங்களேயுள்ள இந்த நூலில் உள்ள கருத்துக்கள் அவ்வளவும் செறிவாக இலங்குவது நோக்கத் தக்கது.

ஆங்கிலத்திலும், பிற அயலக மொழிகளிலும் அமைந்திருந்த அறிவியல் செய்திகளை அருந்தமிழ்மொழியில் மொழிபெயர்த்து இயற்றும் பணி பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கப் பட்டது இத்தகைய பணி தொடங்கப்பெற்ற காலத்தில் சுந்தரம்பிள்ளை ஒரு முன்னோடியாக ஆற்றிய பணி வியத்தற்குரியது.

மேலும், உண்மையை அறிய உதவும் அறிவார்ந்த நெறிமுறையே புதிய நோக்கு எனப்படுகிறது இந்த நோக்கு, ஆய்வின் முழுமையான பயன்பாட்டினை அறிந்துகொள்வதற்கு, சுந்தரம்பிள்ளைக்கு அன்றே துணைபுரிந்தது. மேலை இலக்கியத் திறனாய்வாளர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இப்புதிய நோக்கினைப் பயன்படுத்தி இலக்கியத்தின், ஆய்வின் பயன்பாட்டினை உலகிற்கு வெளிப்படுத்தினர்.

மேனாடுகளில் பதினான்காம் நூற்றாண்டிற்குப் பிறகுத் தொடர்ச்சியான பல மறுமலர்ச்சிகள் தோன்றின. இந்த நூற்றாண்டில் சமயப்புரட்சியும், பதினைந்தாம் நூற்றாண்டில் கலைப்புரட்சியும், அதனைத் தொடர்ந்து அறிவியல் புரட்சியும் தோன்றின. இவைகளே இலக்கியப் படைப்பிலும், திறனாய்விலும் புதிய நோக்கு மேலோங்கு வதற்குப் பொருத்தமான சூழல்களாக அமைந்தன

மேலைநாட்டு இலக்கியத் திறனாய்வினால் புதுமை நோக்கு மீக்கூர்ந்து நின்ற இக்காலத்தில் மக்களின் அன்றாட வாழ்விலும் புதிய புயல் வீசத் தொடங்கியது. இவ்வாறு மேனாட்டவரின் வாழ்விலும் இலக்கியத்திலும் புதிய நோக்கு ஆட்சி செலுத்தத் தலைப்பட்டது. அக்காலக் கட்டத்தில் - குறிப்பாக 1868-இல் டேவிட் டங்கன் (David Duncan)- என்பார் சென்னை மாநிலக் கல்லூரியில் தத்துவத் துறைத் தலைவராகப் பொறுப்பேற்றார். இவர் ஹெர்பர்ட் ஸ்பென்சர் என்பாரின் 'முதற்கொள்கைகள்' (First Principles)- எனும் நூலைப் பதிப்பிக்கும் பணியினை ஏற்றார். தமிழ் நாடகவியலின் முன்னோடிகளில் ஒருவரான பரிதிமாற்கலைஞர் டேவிட் டங்கனுடன் நெருங்கிய நட்புப் பூண்டிருந்தார். ஆங்கிலேயக் கல்வி முறையால் அமைக்கப்பெற்ற சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்து 1865இல் சி. வை. தாமோதரம்

பிள்ளை முதல் பட்டதாரியாக வெளியே வந்தார் பின்னர் பழைய ஏடுகளைத் தேடிப் பார்த்து அவற்றைப் பதிப்பிக்கும் அரிய பணியை முதன்முதலில் மேற்கொண்டார். மேலும், தமிழ் இலக்கிய வரலாற்றைக் காலநெறிப்படுத்தவும் உழைத்தார். இவரின் இவ்விரு இலக்கியப் பணிகளுக்கும் மேலைநாட்டு நெறிவழி வந்த புதிய உணர்வே காரணம் என்பார் க. கைலாசபதி.

| | |
|---|---|
| பாலின் வி. யங் | (Pauline V. Young)- வகுத்தளித்த, |
| புள்ளியல் ஆய்வு | (Statistical Study) |
| நேர்வு ஆய்வு | (Case Study) |
| ஒப்பியல் ஆய்வு | (Comparative Study) |
| சோதனை ஆய்வு | (Experimental Study) |
| பகுப்பியல் ஆய்வு | (Analytical Study) |

என்ற ஆய்வின் தன்மை (Nature of Study)-க்கு ஏற்றவண்ணம் சுந்தரம் பிள்ளையின் இந்த ஆராய்ச்சி இருத்தல் கண்கூடு.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மாதவச் சிவஞான சுவாமிகளின் திறனாய்வு, சமய உண்மைக்கும், சோழவந்தான் அரசஞ் சண்முகனாரின் திறனாய்வு, இலக்கணத்திற்கும் துணைபுரிந்தன. திருமணம் செல்வக் கேசவராய முதலியார் 'சித்தாந்த தீபிகை' இதழில் எழுதிய 'கம்பன்' எனும் கட்டுரைத் தொடர் திறனாய்வுப் போக்கில் அமைந்தது. வில்லியம் மிண்ட்டோ என்பவரைப் பற்றி மறைமலை அடிகள் முல்லைப் பாட்டாராய்ச்சியைத் திறனாய்வு நோக்கில் எழுதியுள்ளார் என்ற கருத்து நிலவியது.

இராஜமய்யர் விவேகசிந்தாமணியில் 'கீதை' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரைத் தொடரும் திறனாய்வாகக் கொள்ளத்தக்கது. இக்காலத்தில் வாழ்ந்த குறிப்பிடத்தக்க சில திறனாய்வாளர்கள், ஆறுமுக நாவலர், விபுலானந்த அடிகள், பரிதிமாற்கலைஞர், சேஷாசலம், போப் ஆகியோராவர். மூலபாடத் திறனாய்வுத்துறையில் உ. வே சா., சி. வை தாமோதரம் பிள்ளை, பவானந்தம் பிள்ளை, நா.கதிரைவேற்பிள்ளை, என்.அனவராத விநாயகப் பிள்ளை, தி த.கனகசுந்தரம் பிள்ளை மற்றும் இவர்கள் காலத்திற்கு மூத்திருந்த மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை ஆகியோரைக் குறிப்பிடலாம்.

மேலும், சுந்தரனாரின் திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சியில் சமுதாயவியல் அணுகுமுறையும்(Sociological approach)மூலப்படிவ அணுகுமுறையும்(Achetypal Approch)இருந்தமை தெளிவாகிறது.

இவற்றில் சமுதாயவியல் அணுகுமுறை என்பது-இலக்கிய ஆசிரியனுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவு மிகவும்

குறிப்பிடத்தக்கது. நெருக்கமானது. எந்தக் கலையும் வெற்றிடத்தில் தோன்றுவதில்லை இலக்கியம் ஒரு குறிப்பிட்ட மனிதனின் படைப்பு அன்று. ஒரு குறிப்பிட்ட இடச் சூழலிலும், காலச் சூழலிலும், வாழும் சமுதாயத்தில் சிறப்பான பங்குபெறும் ஓர் ஆசிரியனின் படைப்பு. எனவே, ஓர் இலக்கியத்தை அணுகுகிறபோது, அவ்விலக்கியம் தோன்றிய சமுதாயச் சூழ்நிலையையும், காலச்சூழ்நிலையையும் கருத்திற் கொண்டு, இலக்கிய ஆசிரியன் எந்த அளவுக்கு எந்தவகையில் தன் சமகாலச் சமுதாயவியல் அதன் எண்ணங்களை வெளிப்படுத்து கிறான் எனக் காண்பதே சமுதாயவியல் அணுகுமுறை ஆகும். மேற் கூறியநோக்கில்தான்சுந்தரம்பிள்ளை, ஞானசம்பந்தரையும்,அவரது தேவாரப் பாடல்களையும் அணுகியுள்ளார் என்பது வெளிப்படை.

அடுத்து, மூலப்படிவ அணுகுமுறையிலும், சுந்தரம்பிள்ளை முனைப்புச் செலுத்தியுள்ளார் என்பதும் போதருகின்றது.

ஒரு சமுதாயத்தின் அடிப்படைப் பண்பாட்டுப் பின்னணியில் இலக்கியத்தை ஆராயமுற்படுவது மூலப்படிவ அணுகுமுறையாகும். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் கூட்டு நனவிலித் தன்மையை(Collective Unconciousness)-க் கருத்திற்கொண்டு புராணச் செய்திகளின் அடிப் படையிலும், பண்பாட்டு மரபின் அடிப்படையிலும் இலக்கியத்தை அணுகுவதுதான் இது. உருவவியல் அணுகுமுறை, சமுதாயவியல் அணுகுமுறை, உளவியல் அணுகுமுறை ஆகியவற்றின் கூறுகளை உள்ளடக்கியதுமூலபடிவ அணுகுமுறை. உளவியல் அணுகுமுறை ஒரு குறிப்பிட்ட தனி மனிதனின் நனவிலி மனப்போக்கை ஆராய்வது, மூலப்படிவ அணுகுமுறை ஒரு சமுதாயத்தின் கூட்டு நனவிலி மனப் போக்கை ஆராய்வது. இவ்வணுகுமுறை சமுதாய மானிடவியலோடு (Social Anthropology) நெருங்கிய தொடர்புடையது.

இத்தகைய மூலப்படிவ அணுகுமுறையினின்றுதோன்றுவது மூல பாடத் திறனாய்வு (Textual Criticism) மூலபாடத் திறனாய்வு என்பது, ஒரு படைப்பின் பல்வேறு பதிப்புக்களில் காணப்படும் பிழைகளையும், குழப்பங்களையும் நீக்கிப் படைப்பாசிரியர் உண்மையாக எழுதியது எது என்பதை அந்த இலக்கியப் படைப்பைக் கூர்ந்து கவனித்து நிறுவும் முயற்சி எனக் கருதுகிறார் எம்.எச்.ஆம்பிராஸ் (**M.H.Abrams, *A Glossary of litterary Terms***)

மேற்கூறியவாறு உள்ள அணுகுமுறைகளையெல்லாம் உட்படுத்தி ஆராயப்பட்டதுதான் திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி.

'இவர் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை இக்காலத் தமிழ் ஆராய்ச்சிக்கு அடிப்படை கோலியர். தமிழும் தமிழரும் ஆரிய வகுப்பு முறையுட்படாத தனிப்பெருமை உடைமையை நிலைநாட்டித் தமிழ்ப்

புலவர் கண்ணைத் திறந்தவர். தமிழாராய்ச்சிக் குறைபாடுடைய ஐரோப்பிய - ஆரியப் புலவருடைய தப்புக் கொள்கைகளைக் கண்டொதுக்கித் தமிழ் வரலாற்றின் உண்மையை விளக்கும் பொருட்டு இவரியற்றிய நூல் திருஞான சம்பந்தர் கால நிச்சயமென்னும் ஆங்கிலக் கட்டுரையாகும்' என்று அறிஞர் கா.சு.பிள்ளை தனது இலக்கிய வரலாறு இரண்டாம் பகுதியில் குறிப்பிட்டுச் சொல்வது ஈண்டு நோக்கற்குரியது.

'இவர் எழுதிய ஆராய்ச்சி நூல்கள் ஒன்றில் திருஞான சம்பந்தர் காலம் சுமார் இந்த ஆண்டிற்குள்தான் இருக்க வேண்டுமென்று பல அரிய பெரிய ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டியுள்ளார். அது தமிழ் ஆராய்ச்சிக்காரர்களுக்கு மிகவும் பயன்பட்டு வருகிறது என்ற பம்மல் சம்பந்த முதலியாரின் கருத்து மேற்கூறிய கா.சு. பிள்ளையின் கருத்தை அரண் செய்வது காணலாம்

தமிழ் இலக்கியச் சுவையை ஆராய்ந்து அனுபவித்தது போலவே, இலக்கியச் சரித்திர ஆராய்ச்சியிலும் சுந்தரம்பிள்ளையின் மனம் ஈடுபட்டது. இலக்கியச் சரிதம் அக்காலத்தில் புராண சரிதமயமாகவே இருந்தது. நூறாண்டு, ஆயிரம் ஆண்டு முதலிய கால அளவு இலக்கியத்தைக் குறித்து எழுதி வந்தவர்களுக்கு ஒரு பொருட்டாகவே தோன்றவில்லை. யுகக் கணக்கிலே ஈடுபட்ட நம்மவர்க்கு இவ்வளவு ஆண்டுகள் அற்பமாகவே தோன்றின. ஆகவே, சரித்திர உணர்ச்சி மிகவும் குன்றிய நிலையில் இருந்து வந்தது வழியும் துறையும் இல்லாமல் இலக்கியச் சரிதங்கள் எழுதப்பட்டு வந்தன. இதனை கண்டு வருந்திய சுந்தரம்பிள்ளை இத்துறையிலும் நூல் எழுதுவதற்கு முன் வந்தார். இந்த முயற்சியின் விளைவாகவே 'திருஞான சம்பந்த சுவாமிகளின் காலம்' என்ற அரிய, சிறந்த, வரலாற்று ஆராய்ச்சி உரை தோன்றியது 'இந்த ஆராய்ச்சியுரையிலே கண்ட முடிவுகள் பிற்காலத்துக் கண்டுபிடிக்கப்பட்ட சிலா - சாசனங்களால் (கல்வெட்டுக் களால்) உறுதியடைந்தன. இன்றுவரை இந்த நூல் இலக்கிய வரலாற்றாராய்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும் என்பார் பேராசிரியர் எஸ் வையாபுரிப் பிள்ளை.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய ஆதிசங்கரர் தமது 'சௌந்தர்யலகரி' (அழகின் அலைகள்) என்ற நூலில் 'திராவிடச் சிசு' என்று குறிப்பிட்டது ஞான சம்பந்தரைத்தான் என முதன் முதலில் வெளியிட்டார் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை

ஆதிசங்கரர் கூற்றின் அடிப்படையிலும், பண்டைய இலக்கிய வரலாற்றின் அடிப்படையிலும் திருஞானசம்பந்தர் கி. பி. ஏழாம் நூற்றாண்டினர் என்று திட்டவட்டமாக அவரது காலத்தை அறுதியிட்டுக் கூறினார்.

இந்த முடிவுக்கு, என்ன அடிப்படை, எந்த அணுகுமுறையைக் கையாண்டார் என்பதை இனிக்காண வேண்டும்.

கூன்பாண்டியன் காலமும், திருஞான சம்பந்தர் காலமும் ஒன்று என்பதை முடிவு செய்ய நாம் நேரடியாகச் சுந்தரனார் ஆய்வுக்குள் புகும்முன்பே, தமிழில் முதன் முதலாகக் கலைக் களஞ்சியம் (அபிதான சிந்தாமணி) எழுதிய, சென்னை பச்சையப்பன் கல்லூரியின் முன்னாள் தமிழாசிரியர் ஆ. சிங்காரவேலு முதலியார் அவர்கள், திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் எனும் தலைப்பில், ஞானசம்பந்தரைப் பற்றிய முழு விவரங்களையும் குறிப்பிட்டுக் கொண்டு வருகையில் சமணர்களுக்கும் சம்பந்தருக்கும், பாண்டிய மன்னன் முன்னிலையில் வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றதைக் குறிப்பிடுகிறார்.

அரசனும், மந்திரி முதலோரும், சமண முனிவரும் சூழ்ந்துவரப் பிள்ளையார் வைகை நதியடைந்தனர். முதலில் சமணர் தங்கள் சமய உண்மைகள் எழுதிய அத்திநாத்தி என்னும் ஏட்டை ஆற்றில் இட்டனர். அது கடலை நோக்கிச் சென்றது. சமணர் நூறுவிற் கடை தூரம் அதன்பின் சென்று பின் செல்லக்கூடாமல் மீண்டனர் இதையறிந்த அரசன் பிள்ளையாரை நோக்கினன். பிள்ளையார் அரசன் குறிப்பறிந்து.

''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக'' எனும் திருப்பதிகமோதி ஆற்றில் இட்டனர். அவ்வேடு ஆற்று நீரைப் பிளந்து எதிர் ஏறியது. (இத்திருப்பதிகத்தில் ''வேந்தனுமோங்குக'' என்று அருளிச் செய்ததால் அரசனுக்கிருந்த கூனும் நிமிர்ந்தது) மந்திரியார் குதிரை மீதேறி ஏட்டைத் தொடர்ந்து செல்லவும் நிற்காமை கண்டு பிள்ளையார் 'வன்னியும் மத்தமும்' என்னும் திருப்பதிகம் அருளிச் செய்தனர். ஏடு திரு ஏடகத்தில் நிலைபெற்றது. குலச்சிறையார் ஏட்டினைத் தொழுது சிரமேல் தாங்கி வந்து பாண்டியனுக்குக் காட்டினர். பாண்டியன் முதலானோர் மெய்பூரித்தனர். சமணர்கள் தாங்கள் கூறியபடி கழுவேறினர்

இது, கூன்பாண்டியனும், காழிப் பிள்ளையும் சம காலத்தவர்களே என்பதற்குச் சான்றாகும்.

இனி, இன்னொரு தகவலையும் அபிதான சிந்தாமணி வழிக் காணக் கிடக்கிறது.

நம்பியாண்டார் நம்பி விதிப்படி தமது குமரியைத் திருஞான சம்பந்த மூர்த்திகளுக்குக் கொடுத்தேனென்று கோத்திர சூத்திரங்களைக் கூறிப் பிள்ளையார் திருக்கரத்தில் நீர் வார்த்தனர். பின் பாணிக்கிரகண முகூர்த்தம் வந்த அளவின் மணமகளைப் பிள்ளையாரின் வலப்பக்கம் சேர்த்தனர். பிள்ளையார் திருக்கடி சூத்திரம் புனைந்து மந்திரத் தீவலஞ் செய்து இவ்வில்லொழுக்கம் வந்தமையால், இவருடன் எம்பெருமான்

திருஅருட்கழல் சேர்வனாக என்று திருவுளங்கொண்டு சிவமூர்த்தி எழுந்தருளியிருக்கும் பெரு மணக்கோவில் அடைந்து அடியேனை ஆண்ட பெருங்கருணை இன்று பிரிவறக் கூட்டும் என்னும் தோற்றத்தால் 'நல்லூர்ப் பெருமணம்' எனும் திருப்பாசுரத்தால் உமது திருவடி அடையும் தருணம் ஈது என்று விண்ணப்பித்தனர். எல்லாமுடைய நாயகன் "ஐய" நீயும் இந்த மாதரும் இத்திருமணம் காணவந்தாரும் இச்சோதியுட் தோன்றும் பெருவழியிற் சேர்க என்று அருட்சோதி உருவாயிருந்தனர்.

பிள்ளையாரும், திருநீலநக்கர், நம்பியாண்டார் நம்பி, திரு நீலகண்ட யாழ்ப்பாணர், திருமணம் காணவந்த திருக்கூட்டத்தவரும் அருட்சோதியுட் கலந்தனர். பின் திருவருட் சோதி மறைந்தது.

இந்த நிகழ்ச்சி, நம்பியாண்டார் நம்பியும் ஞானசம்பந்தரும் ஒரே காலத்தவர் என்பதற்கு ஆதாரமாகும்.

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் காலத்தில் (1855-1897) கால ஆராய்ச்சியில் சில அறிஞர்கள் மிகத் தீவிரமாக ஈடுபட்டு ஆய்வுக் கட்டுரைகளை எழுதியும் வெளியிட்டும் இருந்தனர். சுந்தரனாரின் நண்பர்களான சேஷ அய்யர், மணிவாசகரின் காலம் கி. பி. 4ஆம் நூற்றாண்டு என்ற கருத்தைக் கூற, வெங்கையா (Tamilian Aracheological Society)- 9-ஆம் நூற்றாண்டு எனக் குறிப்பிட்டு, மறுத்துரைத்தார். இந்நிலையில் சுந்தரனாருக்கு உண்மை கண்டுபிடிக்க கால ஆராய்ச்சியில் ஈடுபடலாம் என்று ஆவல் வந்திருக்கக் கூடும்.

டாக்டர் பர்னல் (Burnell)- வீரசோழியம் பற்றிய குறிப்பில் இந்நூல் 11ஆம் நூற்றாண்டின் வழக்கில் உள்ள பல நூல்களைக் குறிப்பிடுவதால் வரலாற்று ரீதியாக இன்றியமையாமை வாய்ந்தது எனவும், தமிழ் இலக்கியங்களின் காலத்தைக் கணிப்பதற்கும் உதவும் என்று கருத்துரைத்துள்ளார்.

வீரசோழியம் வீரசோழனுக்குக் (1064-1113) காணிக்கையாக்கப் பட்டது. கி.பி.1070இல் இம்மன்னனுக்கு முடிசூட்டு விழா நடை பெற்றது. இக்கருத்துக்கள் எல்லாம் டாக்டர் பர்னல் கருத்துகளாகும்.

ஆங்கிலக் கலைக் களஞ்சியத்தில் (Encyclopaedia Britanica) உள்ள தமிழ் குறித்த கட்டுரையில் கருத்தாழம் இல்லை. இங்குச் சுட்டிக்காட்டிய ஐந்து காரணங்கள் தாம் பேராசிரியருக்குத் தமிழ் இலக்கிய வரலாற்றையும், காலத்தையும் பற்றிச் சிந்திக்கத் தூண்டிற்று. இதன் விளைவே திருஞான சம்பந்தர் கால ஆராய்ச்சி. மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் கருத்துப்படி, சம்பந்தர் கால ஆய்வு பழைய, தற்காலத் தமிழ் இலக்கிய வரலாற்றை அறிவதற்குப் பயன்படும் என்பதாகும். எனவே இதுபற்றிய ஆய்வு செய்வது தமிழ் இலக்கிய

வரலாற்றை நன்கறியவும், திராவிட நாகரிகத்தைப் பொதுவாக அறியவும் உதவும் என்று கருதினார்.

கால ஆராய்ச்சியின் பயனாகச் சைவத் தமிழ் இலக்கியங்களின் சிறப்பு நிலையை உணரலாம்.

தென்னிந்தியாவில் முதன் முதலாகச் சமண சமயத்தை எதிர்த்த வரும் சிறந்த இசைப்பாடல்கள் பலவும் யாத்தவருமான சம்பந்தர் கால நிலையை அறிய ஆவல்கொண்டார். டாக்டர் பர்னலின் தவறான கருத்துக்களை மறுத்துரைத்து சரியான உண்மையினைக் காண்பதன் மூலம் தமிழ் இலக்கியத்தின் பழமையையும் சிறப்பையும் உணர ஏதுவாகும் எனக் கருதினார். டாக்டர் கால்டுவெல், நெல்சன் போன்றோர் சமபந்தர் காலம்பற்றி உண்மைக்குப் புறம்பாகக் கூறிய கருத்துக்களை மறுத்து உண்மையைக் காணத் தலைப்பட்டார். மேலும், தென்னிந்திய சமய வரலாற்றை அறியவும், சம்பந்தர், சங்கரர், இராமானுஜர், மத்துவாச்சாரியார் ஆகியோர் காலத்தை அறியவும் முயற்சி மேற்கொண்டார்.

கல்வெட்டாய்வு மூலம் உண்மைகளைக் கண்டறிந்து அதனடிப் படையில் சம்பந்தர் காலத்தை வரையறை செய்ய விரும்பினார். மேலும், சுந்தரம்பிள்ளை நூலின் முன்னுரையில் தான் கண்ட முடிவுகளை அவ்வாறே கொள்ளாமல் தமிழறிவும், வரலாற்றறிவும் உடையோர் மேலும் ஆய்வு செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளமையும் ஈண்டு நோக்கத்தக்கது.

இங்குச் சுட்டிக்காட்டிய பல காரணங்கள் தவிர வேறு காரணங் களும் காலம் பற்றிய ஆய்வில் சுந்தரம்பிள்ளையை ஈடுபாடு கொள்ளத் தூண்டியிருக்கலாம். சுந்தரம்பிள்ளையின் இளமைக் காலக் கல்வி சமய இலக்கிய நாட்டம், தத்துவப் படிப்பு, கோடக நல்லூர் சுந்தரசுவாமிகளின் தொடர்பால் ஏற்பட்ட பக்குவநிலை, அக்காலச் சமுதாய நிலை ஆகியவற்றையும் கருத்தில்கொள்ள வேண்டும்.

சம்பந்தரின் பெருமை, இறைக்கோட்பாடு, உயிர்க் கோட்பாடு, சைவத்தின் மேன்மை, புறச்சமயங்களின் நிலை, அன்று உரம் பெற்று வந்த சமயச்செல்வாக்கு, இதன் எதிர்நிலை, பிராமணர் எதிர்ப்பு, தனித் தமிழ் இயக்கம், திராவிட நாட்டுணர்வு ஆகியவற்றையும் கணக்கிலெடுத்துக் கொள்ளலாம். ஞானசம்பந்தர் பெருமையை- 'தமிழ்ரிஷி' என்று குறிப்பிடுகிறார் சுந்தரம்பிள்ளை. தமிழ்ச் சைவர் களுக்குக் குறிப்பாகப் பிராமணர் அல்லாதோருக்குச் சம்பந்தர் பாடல் வேதாந்தத்திற்கு இணையானவை என்ற கருத்தில் 'தமிழ்வேதம்' என்றும், பிறதேவாரப்பாடல்களுக்கு இல்லாத சிறப்பு என்றவாறு குறிப்பிட்டுள்ளார் பட்டினத்தடிகள் திருக்கழுமல மும்மணிக்

கோவையிலும், நம்பியாண்டார் நம்பி பல இடங்களிலும், சுந்தரர் 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன், எனவும், பாக்கிழாரான சேக்கிழார், ஞானசம்பந்தர் வரலாற்றைப் பல பாடல்களில் ஆராய்ச்சி வல்லமையுடன்பாடி அருளியமையும், இடைக்காலப் புலவர்கள் நால்வரையும் ''சமய குரவர்கள்'' என்று போற்றியதையும், அவர்களது திருப்பதிகங்களைத் தமிழ்மறை எனச் சிறப்பித்ததையும், அவருள் ஞானசம்பந்தரைத் திருஞானம்பெற்ற ஆளுடைப்பிள்ளை என்பது பற்றி அவர் திருப்பதிபங்களை மட்டும் திருஞானம் எனப் போற்றியமை முதலிய பல காரணங்களைக் கூறலாம்.

மேலும், சைவத்தின் மேன்மையாக வினைகள் உருவாவதற்குக் காரணம் உயிர்களைப் பற்றி நிற்கும் 'மலம்' என்பது சைவ சமய அறிவு நூல் முடிபு. மலத்தின் தொடர்பு அறுவதே வினைக்கட்டுக்களினின்றும், வீடு பெறுவதற்குரிய வழியாகும். இம்மலத்தின் மறைப்பு இறை வழிபாட்டால் நீங்கும் என்று அறிவுறுத்தியிருப்பவர் சம்பந்தர்.

புறச் சமயங்களின் (பௌத்தம், சமணம், மீமாம்சை) முடிந்த முடிபாகிய கொள்கைகளுள் ஒன்று, வினையாகிய பகையை வெல்லும் பொருள்யாதும் இல்லை என்பதாகும். மேலும் புறச் சமயத்தாரின் நடை, உடை, ஒழுக்கம், பாவனை முதலியவற்றில் அருவருப்புற்று அவற்றை மறுத்தும் வெறுத்தும், வெகுண்டும் கடிந்தும், எள்ளியும் இகழ்ந்தும் தம்பதிகங்களில் பாடியுள்ளார். இப்புறச் சமயங்களும் சைவ சமயம் போன்று அருளையே விதந்து பேசுகின்றன எனினும் அருள் நெறி யினரான சம்பந்தர் இவற்றைப் பழிக்கக் காரணம் என்ன? இத்தேடலின் விளைவே சம்பந்தர் கால ஆராய்ச்சி எனலாம்.

சுந்தரம்பிள்ளையின் கருத்துப்படி 'அக்காலச் சமய வரலாற்றினைத் தெளிவாக அறிந்துகொள்ள இயலாத நிலையில் தெளிவும் மெய்ம்மையும் நிறைந்த சான்றுகளால் அக்கால நிலை விளங்கப் புலப்படுமாயின் அதன்மூலம் உண்மைகளைத் தெரிந்து நாம் மகிழ்ச்சியடையலாம்' என்பதும் ஒரு காரணமாகலாம்.

மதுரையை ஆண்ட கூன்பாண்டியன் காலமே சம்பந்தர் காலம் என்பதில் மாறாத உறுதி கொண்டவர் சுந்தரம்பிள்ளை. இம்மன்னன் காலத்தை டெய்லர் (Taylor)- என்பார் கி. பி. 1320 எனவும், கால்டுவெல், நெல்சன், டாக்டர் இ. லேவேந்தல் ஆகியோர் கி. பி. 12ஆம் நூற்றாண்டு என்றும் குறிப்பிட்டுள்ளனர். மேலும் நெல்சன் கூன்பாண்டியனின் மனைவி மங்கயர்க்கரசி கரிகால் சோழனின் தமக்கையார் எனவும், கூன்பாண்டியன் தஞ்சை, உறையூர் ஆகிய பகுதிகளை அழித்தவன் என்றும் குறிப்பிடுகின்றார்.

சுந்தரம்பிள்ளை, முற்கூறிய கருத்துக்களையெல்லாம் மறுத்து, கூன்

பாண்டியன் காலத்தில் தஞ்சாவூர் இல்லை, மூவர் தேவாரத்திலும் இல்லை சுந்தரர் குறிப்பிடும் தஞ்சை நாகப்பட்டிணத்திற்கு அருகில் உள்ள தஞ்சாவூரே இது ''பொத்தைத் தஞ்சாவூர்'' என்று அழைக்கப் பட்டது. இன்றைய தஞ்சாவூர் 'மருக நாட்டுத் தஞ்சை' என்ற பெயரில் முதன் முதலில் கருவூர்த் தேரின் திருவிசைப்பா பாடல்களில் இடம்பெற்றுள்ளது என்றும் நிறுவுகிறார்.

சி. வை. தாமோதரம் பிள்ளை, கூன் பாண்டியன் 2000 ஆண்டு களுக்கு முன் வாழ்ந்தவன். எனவே சம்பந்தர் காலமும் அதுவேயாம் என்றார். சுந்தரம்பிள்ளை இதனை மறுத்து, தாமோதரம் பிள்ளை கூற்று மிகைபடக் கூறுவதாகும் மதுரையிலிருந்த திருஞான சம்பந்தர் மடத்துத்தலைமை (மடாதிபதி) கால வரிசையைக் கவனித்தால் 1500 ஆண்டுகளுக்கு இடைப்பட்டதே. ஆகவே, சம்பந்தர் காலம் ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டே என்ற முடிவைத் தருகிறார்

'தமிழ் புளுடார்க்' சைமன் காசிச் செட்டி என்பவர் - சேரமான் பெருமாள், சுந்தரர் ஆகியோர் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு என்பர். சோழன் பூர்வ பட்டையம் தரும் செய்தியை அடிப்படையாகக் கொண்ட கருத்தின்படி சம்பந்தர் காலம் அதற்கும் முன்பு என்பதால் பேராசிரியர் இக்கருத்துக்களையும் மறுத்துரைக்கின்றார்.

இலங்கையைச் சேர்ந்த பி குமாரசுவாமி என்பவர் விடம் தீண்டிய வணிகனைச் சம்பந்தர் உயிர்ப்பித்தது, வன்னிமரக்கதை ஆகியன திருவிளையாடல் புராணம், சிலப்பதிகாரம் ஆகியவற்றில் காணப் படுவதால், சிலம்பின் காலம் கயவாகு மன்னனின் காலம் என்று கொண்டு அதற்கு முன்பே சம்பந்தர் வாழ்ந்தார் என்பார். சுந்தரம் பிள்ளை இதனையும் மறுக்கின்றார்.

மேனாட்டுப் பயணி வரலாற்றாய்வாளர் சிலர் கருத்துக்களையும் காட்டி அவற்றையும் தக்க முறையில் மறுக்கின்றார்.

கூன்பாண்டியனின் இயற்பெயர் சுந்தரபாண்டியன் என்பது கால்டுவெல் கருத்து. மார்கோபோலோ, சுந்தரபாண்டியனைச் 'செந்திர்பெண்டி' எனவும், இவன் கி. பி. 1292இல் ஆட்சி செய்தான் எனவும் குறிப்பிடுகிறார்.

கால்டுவெல் கருத்தை ஏற்பது போல ரஜீதின் (Rashidudin)என்ற இஸ்லாமிய வரலாற்றாய்வாளர் செந்திர்பெண்டி (Sender Bendi) மலபார் பகுதியை ஆண்டதாகவும், அவரது அமைச்சர் சேக் ஜமாலுதீன் என்றார். 1293இல் இம்மன்னன் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வாஸப் என்ற வரலாற்றாய்வாளனும் சுந்தர்பெண்டி 1293இல் இருந்ததாகக் குறிப்பிட்டள்ளார்.

சுந்தரம்பிள்ளை மேற்கூறப்பட்ட மூன்று கருத்துக்களையும் மறுத்துள்ளார். சம்பந்தர் காலக் கூன்பாண்டியன் சுந்தர பாண்டியனா? எனும் வினாவை எழுப்பி, கூன் பாண்டியனது அமைச்சர் குலச் சிறையாரே எனவும், அம்மன்னனது ஆட்சி திருச்சிக்கு அப்பால் செல்ல வில்லை என்றும் கூறியுள்ளார் -

முடிவாக, கூன்பாண்டியன் என்பவன் நின்றசீர் நெடுமாறனே என்றும், இப்பெயர் மாற்றம் சமஸ்கிருத மொழிச் செல்வாக்கால் ஏற்பட்டது என்று கீழ்க்காணுமாறு பெயர் மாற்றங்களைத் தெரிவித் துள்ளார்:

| | |
|---|---|
| கூன் பாண்டியன் | - குப்ஜபாண்டியன் |
| நின்றசீர் நெடுமாறன் | - சுந்தரபாண்டியன் |
| மங்கையர்க்கரசி | - வனிதேஸ்வரி |
| குலச்சிறையார் | - குலபந்தனா |

டாக்டர் கூல்ஸ் (Hultzch)- கருத்துப்படி, சுந்தரன் என்பது பாண்டியர்களின் பொதுப் பெயரே என்பதை டாக்டர் லோவேந்தல் என்பவர் நெல்லையிலும், மதுரையிலும் கிடைத்துள்ள நாணயங்களால் தெரிவு செய்துள்ளார் இக்கருத்துக்களைப் பேராசிரியர் தனக்கு ஆதாரங் களாகக் கொண்டார்.

இனி, சுந்தரம்பிள்ளை தன் கருத்திற்கு வலிவு தேடி அதற்கு ஏற்ற வண்ணம் மேனாட்டாரின் கருத்தக்களையும் கல்வெட்டுச் செய்தி களையும் எடுத்தாண்டமையைக் காண்போம்.

i) சம்பந்தர் குறிப்பிடுகின்ற சிவந்த கண்ணுடைய சோழ மன்னன் கோச்செங்கணான் (களவழி நாற்பதின் தலைவன்) கும்பகோணத் திற்கருகில் வைகல் எனுமிடத்தில் கட்டிய கோயில் பற்றிச் சம்பந்தர் குறிப்பிட்டுள்ளார். எனவே சம்பந்தர் காலத்தை உணர்த்தும் உயர்ந்த பட்ச கால எல்லை இதுவே.

சோழ அரசு சிதறுண்ட காலகட்டமே சம்பந்தர் காலம். டாக்டர் கூல்ஸ், தமிழிலக்கியம் பலவும் கரிகாலன் காலத்தும், கோச்செங்கனான் காலத்தும் இயற்றப்பட்டன. ஆகவே தேவார ஆசிரியர்களை இவ்விரு வேந்தர்களின் காலத்தவர்களாகக் கொள்வதில் தடையில்லை என்றார். சுந்தரம்பிள்ளை இக்கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்.

ii) சிறுத்தொண்டர் (பரஞ்சோதி) என்ற அமைச்சர் குந்தள நாட்டுடன் போர்புரிந்து இரண்டாம் புலிகேசியை வென்று வாதாபியை கி.பி.642 இல் அழித்தார். சிறுத்தொண்டரின் வேண்டுகோளுக்கிணங்க சம்பந்தர்'செங்காட்டங்குடித் திருப்பதிகம்' பாடினார் என்பதை,

*'....செங்காட்டங்குடிமேய*
*வெந்த நீறணி மார்பன் சிறுத்தொண்டனவன் வேண்ட'*

என்ற அடிகளால் உணரலாம் சம்பந்தர் சிறுத்தொண்டரின் சொந்த ஊராகிய திருச்செங்காட்டங்குடிக்கு வந்தது கி.பி 640-649 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பகுதி யாகும். சுந்தரம்பிள்ளையின் நூலுக்கு மிக நீண்ட முன்னுரை வழங்கிய 'வெங்கையா' அவர்களும், சிறுத்தொண்டர் காலமே சம்பந்தர் காலம்; ஏழாம் நூற்றாண்டின் நடுப்பகுதி என்று குறிப்பிட்டுள்ளார்.

மேற்கூறிய கருத்துக்களைக் கல்வெட்டிலும் காணலாம் என்பர் சுந்தரனார் சம்பந்தர் பதினாறாவது அகவையில் இவ்வுலக வாழ்வை நீத்தார் என்ற கருத்தை தஞ்சை சீனிவாச பிள்ளை தம் 'தமிழர் வரலாறு' நூலில் குறிப்பிட்டுள்ளார். 'திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி' என்ற தமது நூலில் கா.சு பிள்ளையவர்களும், சம்பந்தர் 609-642 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கால அளவில் பதினாறாம் ஆண்டில் புகழுடம்பை நிறுவிப் பூதவுடலை நீத்தமையைக் குறித்துச் செல்கிறார்

நிறைவாக, சங்கரர் காலமே சம்பந்தர் காலத்தை உணர்த்தும் குறைந்தகால அளவு என்று சுந்தரம்பிள்ளை கருதினார். சங்கரர் காலத்தை டெலங்,பிளீட், பதக் ஆகியோர் முறையே 6,7,8 ஆம் நூற்றாண்டு என்றனர் சங்கரர், சிவாபுஜங்க சிவானந்த லகரியில் சமய குரவர்களான சுந்தரர், சிறுத்தொண்டர், சண்டேஸ்வரர், கண்ணப்பர் ஆகியோரைக் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் எல்லாம் சம்பந்தர் காலத்தைச் சேர்ந்தோரும் அதற்கு முற்பட்டோரும் என்பது சுந்தரம்பிள்ளையின் கருத்து. சௌந்தர்ய லகரியில் சங்கரர் சம்பந்தரைத் 'திராவிடச்சிசு' என்றும், அவர் ஞானப்பால் உண்டதையும் குறிப்பிடு கின்றார். சமஸ்கிருத மத்த விலாசம் எனும் நூலும், சம்பந்தர் வரலாறு பேசுகிறது. மேலும் சங்கரர் காலத்தில் சம்பந்தர் எல்லோராலும் அறியத்தக்க சைவப் புலவராய் இருந்தார்.

சங்கரர் வாழ்ந்த கால அளவு, அதையொட்டிய முன்னைய காலப் பகுதியே சம்பந்தர் காலம் தென்னிந்திய சமய வரலாறும் இதற்குத் துணை செய்யும். சம்பந்தர் காலத்தை ஏழாம் நூற்றாண்டு எனப் பொருத்தமான காரண-காரியங்களுடன், தருக்க (Logic)-முறையில், விளக்கமுறையில், ஒப்பிட்டு முறையில் எனப் பல்வேறு அனுகு முறையின் அடிப்படையில் ஆராய்ந்துள்ளார் எனத் தெளியலாம்.

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் ஆய்வுநெறி முறைகளைப் பின்பற்றிய தன்மையிலேயே பின்வந்த ஆராய்ச்சியாளர் 'கால ஆராய்ச்சியில்' ஈடுபட்டனர் எனத் தெரிந்து தெளியலாம்.

ஓர் இலக்கியம் அல்லது ஓர் இலக்கிய ஆசிரியர் வரலாற்று உருவாக்கத்தின் முதல் கூறு என்பது இலக்கியங்களின் காலமும் மூலமும் கண்டறிந்து அவற்றின் தோற்றத்தையும், தொன்மையையும்

வரையறை செய்வதேயாகும்.

வரலாற்று மதிப்பும், இலக்கிய மதிப்பும், சமய மதிப்பும் உடைய நூலின் காலத்தை அறிய முற்பட்டமை தமிழர் பண்பாட்டில் கால ஆராய்ச்சி மிகத் தேவையான ஒன்று என்று பேராசிரியர் சுந்தரம்பிள்ளை கருதியிருக்கக் கூடும் தம் வாழ்நாளில் தமிழர் பண்பாட்டில் நிலவிய பூசலை முடிவுக்குக் கொண்டு வர முயன்றமையே இந்த ஆராய்ச்சியின் நோக்கமாக இருந்திருக்க வேண்டும் என்பதும் கருதத்தக்கது.

அவரது ஆய்வுக்களமாகக் கீழ்க்காணும் காரணங்களைச் சுட்டலாம்.

அன்றைய சமுதாயச் சூழலில்(Social Situation)பிராமணர் அல்லாத தமிழர்வஞ்சிக்கப்பட்டனர். இதற்குச் சாத்திரங்களும் துணை நின்றன. பண்பாட்டுப் பூசலையொட்டிய சமுதாய நெருக்கடி நிலவிய காலகட்டத்தில்தான் (Social Crisis and Cultural Conflict)இலக்கிய வரலாறு எழுத முற்பட்டிருக்க வேண்டும். தேவாரங்களுக்கு ஏற்பட்ட புறக்கணிப்பு சம்பந்தர் கால ஆராய்ச்சியை எழுதத் தூண்டிற்று எனலாம்.

சுந்தரம்பிள்ளையின் காலத்திற்கு முற்பட்ட கால ஆராய்ச்சிகள் கதைகளை மட்டுமே அடித்தளமாகக் கொண்டிருந்தன. இலக்கிய வரலாறு என்பது காலந்தோறும் தோன்றி இலக்கியங்களின் தொகுப் புரையாக மட்டும் அமையாமல், அவற்றில் கால ஆராய்ச்சியும் இடம் பெற வேண்டும் என விரும்பினார் என்றால் அது பிழையில்லை

நூலாசிரியரின் காலத்தை வரையறைப்படுத்துவதன் மூலம் இலக்கியங்களின் நம்பகத்தன்மையையும், ஏற்புடைமையையும் (Reliability and Validity) உறுதி செய்தல் இயலும், இதன் வாயிலாக இலக்கியங்களைத் தக்கதொரு வரலாற்றுச் சான்றாதாரங்களாகக் கொள்ளவும், மதிப்பிடவும் செய்யலாம். இலக்கியக் கல்விப் பயிற்சிக்கு இலக்கிய வரலாற்றறிவு மிகுதியும் பயன்படும் என்பதாலும் கால ஆராய்ச்சியைச் சுந்தரனார் மேற்கொண்டார் எனலாம்

சுந்தரம்பிள்ளையின் ஆய்வுப் பரப்பில் சமயம், இலக்கியம், வரலாறு, தத்துவம், கல்வெட்டு, மேனாட்டார் கருத்து உள்ளிட்ட சமுதாய வியல் சார்ந்ததாக இருந்தது. இளமை முதல் பெற்ற சமய அறிவு, ஈடுபாடு, கல்வித்தேர்ச்சி வழிப்பெற்ற நூலறிவு, வரலாற்றுணர்வு, சமுதாயவியல் உணர்வு, பலமொழி அறிவு ஆகியவையும் பயன்பட்டன.

அவர்தம் சமய உணர்வையும், வரலாற்று உள்ளுணர்வையும் கொண்டு அணுகிய ஆய்வு, செயல்முறை கருதிய பயன் ஆய்வு(Applied Research)-எனலாம். இதை அவர் திறந்தவெளித் திறனாய்வாய்(Free

and Open Criticism) நிகழ்த்தியுள்ளார்.

திருஞான சம்பந்தர் கால ஆராய்ச்சியைப் பொருத்தவகையில் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் ஆய்வுத்திறன்-

1. தருக்கமுறையிலான ஒப்பிட்டாய்வு
2. இலக்கிய மரபு தழுவிய நிலையில் பொருள்கோள் காணுதல்
3 ஐயத்திற்கிடமான இடங்களைச் சுட்டுதல்.
4 பிறமொழி, பிற நாட்டார் கருத்துக்களை ஏற்றல்-மறுத்தல்
5 பல்துறை அறிவாற்றலைப் பயன்படுத்துதல்

ஆகிய கூறுகளைக் கொண்டிருத்தல் ஒருதலை.

திருஞான சம்பந்தர் கால ஆராய்ச்சியைப் பிற்காலத்தில் வந்த பலர் ஆய்வு செய்தபோதிலும் சுந்தரம் பிள்ளையின் கருத்துக்களே வலுப்பெற்றன என்பதைத் தவிர புதிய முடிவுகள் எவற்றையும் அவர்களால் வெளியிட இயலவில்லை. இது ஒன்றே அவரின் புதிய நெறி ஆய்வுத் திறனுக்கு வெற்றியாகும்.

*தாலம் புகழும் திருஞான*
*சம்பந்தப் பேர்முனி வாழ்ந்த*
*கால மதனை ஆராய்ந்து*
*கற்றோர் மெச்சக்கணித் திட்டோன்*
*ஆலப் புழை மாநகருடைய*
*அறிஞன் பெருமாள் அரும்புதல்வன்,*
*சீலஞ் சிறந்த சுந்தரனைச்*
*சிந்தை மகிழ்ந்து போற்றுவமே.*

எனும் கவிமணியின் பாடலைப் படித்தால் மேலும் மகிழ்ச்சி யடையலாமன்றோ!

# 5
# நூற்றொகை விளக்கம்

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை, 'மனோன்மணீயம்' நாடகம் படைப்பதற்கு மூன்றாண்டுகளுக்கு முன்பே இயற்றிய நூல், 'சாத்திர சங்கிரகம்' என்னும் 'நூற்றொகை விளக்கம்'

நூற்றொகை விளக்கம், சுந்தரம்பிள்ளையால் திருவனந்தபுரத்தில் மே,1888-இல் வெளியிடப்பெற்றது இதே நூல் எவ்வித மாற்றமும் இன்றி இரண்டாம் பதிப்பாக எண்பத்தேழு பக்கங்கள் கொண்டதாக டிசம்பர் 1936- இல் திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப் பெற்றது

நூலின் முதற்பதிப்பு முகவுரையில் நூலாசிரியர் பி.சுந்தரம்பிள்ளை நூலின் நோக்கம் மற்றும் ஆக்கம் பற்றிக் கீழ்க்காணுமாறு குறிப் பிட்டுள்ளார்.

தற்கால நிலைமைக்கேற்ப சாஸ்திரங்களை எத்தனை வகுப்பாய் வகுக்கலாம் என்பதும் அவற்றின் முக்கிய முறைமையும் விஷயமும் என்ன என்பதும் அதை வகை எடுத்து விளக்குவதே, கீழ்வரும் நூற்தொகை விளக்கம் பொதுவியலின் தலைமையான உத்தேசம். இது திருவிதாங்கோட்டுக் கவர்ன்மென்றாருடைய நூதன பிரசங்க ஏற்பாட்டின்படி ஓர் உபந்நியாசமாக எழுதப்பட்டு, திருவனந்தபுரம் சர்வகலா சாலையில் வாசிக்கப்பட்டது. வேறுபல வேலைகளிடையில் அவசரமாய் எழுதப்பட்டமையால், சொற்குற்றம் முறை வழு இவை இப்பொதுவியலில் இல்லாதன ஆக; ஆயினும் ஆன்றோர் அவற்றை ஒழித்து இச்சிறு நூலைப் பொதுவாக அங்கீகரிப்பாராயின், இதிற் குறிக்கப்படும் சில தலைமையான சாஸ்திரங்களின் முக்கிய முடிவுகளை இவ்வாறே விளக்கி இந்நூற்றொகை விளக்கத்தின் ஒவ்வொரு இயலாக இயற்ற வேண்டுமென்னும் கருத்துடன் இது வெளியிடப்படுகிறது.''

சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தினர் தந்திருக்கும் பதிப்புரையில், நூற்றொகை விளக்கத்தின் மதநூல், பொது நூல், கலைநூல் என்ற முப்பாகுபாடும், அவற்றில் முதல் நூல், வழிநூல், சார்புநூல் பொதுக்கலை, யோக கலை ஆகிய பிரிவுகளும், பிறகு அவற்றில் தத்துவ நூல் முதல் ஞானயோகம் வரை பல நூல்களின் முறை, பொருள் முதலியன சிலவகை எமக்கில் கிட்டபங்ட்பஞ் செறிந்த சூத்திர

யாப்பில் முப்பத்தெட்டு சூத்திரங்களில் அமைத்து விளக்கப் பெற்றுள்ளன. இச்சூத்திரங்களின் விளக்க நடை, தத்துவ நூல் முதலிய நூல்களில் அமைந்து சங்கேத மொழிகளின் (Technical Terms) விரிவுரையாக விளங்குகின்ற காரணத்தால் தூய தனித்தமிழ்ப் பற்று மிகுந்தவர் விரும்பும் நடையில் அமைந்திலவென்பது தெளிவு' என்று குறிப்பிட்டுள்ளது.

முதற்பதிப்பில் சூத்திர மூலம் தனியே தொகுத்து அச்சிடப் பெற வில்லை. இரண்டாம் பதிப்பில் அச்சிடப்பட்டுள்ளது. பொருளடக்கம் முதற்பதிப்பில் சேர்க்கப்படவில்லை. இரண்டாம் பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது

**நூலின் உள்ளுறையாக-**

i) நூற்பொருள் விளக்கம்-மேற்கோள் நூலகராதி

ii) நூற்றொகை விளக்கம்-பொருள் அட்டவணை

iii) நூற்றொகை விளக்கம்- சூத்திரம்

iv) நூல்

v) அநுபந்தம் I

vi) அநுபந்தம் II

என்றவாறு உள்ளது.

இனி, நூற்றொகை விளக்கம் மேற்கோள் நூலகராதியில் கீழ்காணும் இருபத்து ஒன்பது நூல்கள் எடுத்தாளப்பட்டிருப்பது தெளிவாகிறது. அவையாவன

அஞ்ஞவதைப் பரணி, அமிர்தசாகரம், அருட்பிரகாசம், அவிரோத வுந்தியார், இராமாயணம், ஈசுரகீதை, ஒழிவிலொடுக்கம், கந்த ரலங்காரம், குமாரதேவர், விஞ்ஞான சாரம், சசிவரனபோதம், சிவானந்தமாலை, ஞானவசிட்டம், தத்துவராயர்-பாடுதுறை, தாயுமானவர், திருக்குறள், திருமந்திரம். திருவம்மானை, திருவாசகம், திருவாய்மொழி, நன்னூல், பகவற் கீதை, பட்டினத்துப் பிள்ளையார், பாடுதுறை, பிரபுலிங்க லீலை, பிரபோத சந்திரோதயம், முண்டகோபநிடதம் (பிரம கீதை), மோகவதைப் பரணி, வீராகமம் Mind. Vol.IX.

நூற்றொகை விளக்கம் பொருள் அட்டவணையில்-

அகேவலம் என்பதனிலக்கணம், அனுவினிலக்கணமும் அதன் பிரிவுகளும், அணுவினியக்கமும் அதன் விளைவும் அந்தக்கரண சதுஷ்டயம், அறிவும் நூலும் மும்மூன்று வகையெனல், இடப் பெயரிலக்கணமும் அதன் பிரிவுகளும், இயக்கமும் ஆகாயமும், இயக்கத்திற்குச் சக்தியே காரணமெனல், இயக்க நூல், சத்தி நூலெனப்

பெயர்பெறல், இரசாயன நூலின் இயல்பும், அதன் பிரிவுகளும், உண்ணல் என்பது உயிரின் முதற்றொழில், உயிர், தாவரம் சரமென இருவகை உயிரிலக்கணம் மூன்று என்பதற்குள்ள காரணம் உயிர் நூலினிலக்கணம், உளத்தினிலக்கணம், உளநூல், உறுப்பும் உடலும். உற்பாதனம் என்பது உயிரின் இரண்டாவது தொழில், எண்ணுக்கும் அளவுக்கும் உள்ள வேற்றுமை, ஐக்கியமுயக்கம், கணிதமும், அதன் விளக்கமும், கலையினிலக்கணமும் அதன் பிரிவுகளும் கேவலம் பசுத்தன்மை, கேவலத்தன்மையினியல்பும், அதன் விளக்கமும், சரப்பொருளினிலக்கணம், சாங்க இயக்கமும் அதன் பிரிவுகளும், சார்பு நூலின் இலக்கணம், சார்பு நூல்களின் பிரிவுகள், தத்துவமும், அதன் விளக்கமும், தாவரம் என்பது மரங்கள் மட்டுமன்று, நற்கலைகளிவை யெனல், நூலறிவு மூன்று வகைப்படுமெனல்

மேலும் - நூலென்பது அறிவினையுணர்த்தும் கருவி, நூலொழுங்கின் முதல் விதியினியல்பு இவைஎனல், நூலொழுங்கின் இரண்டாவது விதியிலக்கணமும் அதன் பிரிவுகளும், நூலொழுங்கின் மூனறாவது இலக்கணம், நூலுக்குப் பொதுவொழுங்கும் அதன் பிரிவுகளும், புலன்-புலால் விளக்கம், பேரறிவு என்பது இரண்டற அறிதல், பேரறிவு-ஞானம்-பொதுக்கலை, பொது நூலினிலக்கணம், பொது நூல் முதல் வழி சார்பென மூவகைப்படும், மதநூல் ஆத்திகர் விதி கூறுவது எனல், முதனூல் அறுவகைப்படும் எனல், முத நூலினிலக்கணம், யோக கலையும், அதன் சாதனங்களும், யோக நற்கலையும் அதன் பயனும், வழிநூலினிலக்கணம், வழிநூற்குதாரணம், வியாகரணமும் ஒருவழி நூலேயாம், வெம்மை, ஒளி, மின்மய முதலான கணங்கள் அணுவின் இயக்கமே, வெறுங்கலவை ஆகிய தலைப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

நூற்றொகை விளக்கம் - பொதுவியலில் மொத்தம் முப்பத்தெட்டு நூற்பாக்களும் 'தெய்வ வணக்கம்' என்ற தலைப்பில் உள்ள

*''திருவருளன்றித் தெரிவுறற்கரிய*
*வொருவனை வணங்கியுங்கோதுவன்*
*விரிவுறு நூற்றொகை விளங்கு நல்லியல்பே''*

என்ற நூற்பாவையும், முடிவுரைபோல் அமைந்துள்ள

*'தொடர்புறு மிந்நூற்றொகைச் சுடர் மண்டல*
*மெப்பரம் பருக்கர்க் கியைய பரிவேட*
*மப்பொருட் கனுதினமகில மங்களமே'*

என்ற நூற்பாவையும் சேர்த்து மொத்தம் நாற்பது நூற்பாக்கள் (சூத்திரங்கள்) பொதிந்துள்ளன.

நூலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள அநுபந்தம் ஐ இல், சங்கேத மொழிகளும், அதற்கெதிரே - அதற்கேற்ற ஆங்கிலேயே

பிரதிபதமும், பக்க எண்களோடு அச்சிட்டிருப்பதும் புரிந்துகொள்ள ஏற்ற வகையில் அமைந்திருத்தல் கண்கூடு - எடுத்துக்காட்டாக ஓரிரு சொற்களைக் காண்போம்.

| பக்கம் | சங்கேத மொழி | ஆங்கிலேய பிரதிபதம் |
|---|---|---|
| 5 | மதநூல் | Theology as a study of the absolute. |
| 6 | பொதுநூல் | Departments of Human knowledge. Organized knowledge of phenomena. |
| 7 | பொதுமை | The Generalized |
| 11 | கேவலம் | Abstract |

சங்கேதமொழி என்பதை நாம் கலைச் சொற்கள் என்று அழகாகப் புரிந்துகொள்ளுதல் வேண்டும். சங்கேத மொழியை இங்குக் குழூக் குறியாகக் கொள்ளுதல் பொருந்தாது. நாற்பது நூற்பாக்களையும், அவற்றிற்கான விரிவான விளக்கங்களையும் கொண்டிருப்பது நூற்றொகை விளக்கப் பொதுவியலாகும். இது சாத்திர சங்கிரகம் என்றும் அழைக்கப்படுவதால், சாத்திரங்களின் சுருக்கம் என்று பொருள்படும்.

நூல்கள் அறிவை வழங்குவதால், அந்நூல்கள் அறிவின் அடிப் படையில் பேரறிவு, சிற்றறிவு, புலனறிவு என்ற மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நுட்பமான பரம்பொருளைப் பற்றிய அறிவு பேரறிவு என்பதன் பாற்பட்டது. இவ்வறிவு முயற்சியுடையோரும் எய்தற்கரியதாகவும், சிலருக்கு எளிதில் அடையும் நிலையிலும் அமைவதால் இதனைப் பற்றி பேராசிரியர் சுந்தரம்பிள்ளை விளக்க வில்லை எனத் தெரிகிறது.

எல்லா மனிதரும் இயல்பான முயற்சியில் பெறுவதற்குரிய அறிவு சிற்றறிவு. இதைப்பற்றிக் கூறும் நூல் பொது நூலாகும். இப்பொது நூல் உண்மை, பொதுமை, ஒழுங்கெனும் மூன்று இலக்கணங்களுக்கு உட்பட்டு இயலும். இப்பொது நூல் தன் இயல்புக்கேற்ப முதல், வழி, சார்பு எனும் மூன்று நிலைகளையுடையதாகத் திகழ்கின்றது. தத்துவம் (மெய்ப்பொருள்). கணிதம், இயக்கம், ரசாயனம், உயிர், உளநூல் என்பன முதல் நூல்களாகும். முதல் நூலின் சார்பினால் தோன்றுவன வழி நூல்கள். சோதிடம், பௌமியம் (பூமி சாஸ்திரம் எனும் புவி அமைப்பியல்), தொல்வியாகரணம் (தத்துவம்) இதில் அடங்கும். முதல் வழி நூல்களை அடிப்படையாகக் கொண்டு திகழ்வன சார்பு நூல்களாகும்.

*"போத வறிவோடு சிலகாலம் பழகிய*
*வாசனாவை பவத்தால் விளையும் தொழில்யாவும் கலை"*

என்பார் சுந்தரம்பிள்ளை புலனறிவின் அடிப்படையில் எழுவன கலைகளாகும். பொதுக் கலையோகக் கலை எனும் இரு வகையில் இயலும். இக்கலைகளின் சிறப்புப் பிரிவாக, நற்கலை எனும் வகை ஒன்றும் வருகிறது. தச்சு, தையல் எனும் கைத்தொழில்கள் பொதுக் கலைகளாகவும், கருமயோகம், பொதுயோகக் கலையாகவும் அமைய; கீதம், சித்திரம் போல்வன பொது நற்கலைகளாகவும், ஞானயோகம் யோக நற்கலையாகவும் அமைகின்றது.

மேலே குறிப்பிட்டவை எல்லாம் 'நூற்றொகை விளக்க' நூலின் புறவடிவமாகும். இலக்கிய வரலாற்றறிஞர் கா சு. பிள்ளையவர்கள் இந்நூலைப் பற்றிக் கூறும்போது, ''இவர் (பெ. சுந்தரம்பிள்ளை) செய்த 'நூற்றொகை விளக்கம்' எனும் ஓரரிய நூல் ஆங்கிலத்திலும் தமிழிலும் உள்ள நுண்ணூல்களைத் தொகுத்து வகுத்துக் காட்டுவது'' என்று தொட்டுக் காட்டிச் செல்வது குறிப்பிடத்தக்கதாகும்

நமது அருமைத் தாய்மொழிக்குப் பற்பல வகையில் பணிபுரிந்த புலவர் மணிகள் இருபத்து மூவரின் வரலாறுகளையுள்ளடக்கிய 'தமிழ்ச்சுடர் மணிகள்' என்னும் மணிமாலையைத் தன் முதற்பதிப்பாக ஜனவரி 1949-இல் கொண்டு வந்தவர் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை, பி ஏ., பி எல்., அவர்கள். அவர் குயிற்றிய மணிகளில் ஒருவரே ஆசிரியர் சுந்தரம்பிள்ளை. அத்தகைய சுந்தரம்பிள்ளை யவர்கள் யாத்த 'நூற்றொகை விளக்கம்' எனும் நூல் பற்றி விதந்தோது வதைக் காண்மின்! காண்மின்!

'சரித்திர உணர்ச்சியைக் காட்டிலும், உண்மையான விஞ்ஞான உணர்ச்சி மிகப் பெரிதும் குன்றியிருப்பதை அனுபவ வாயிலாகத் தெரிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்புச் சுந்தரம்பிள்ளைக்குக் கிடைத்தது. தமது கலாசாலையில் தத்துவப் போதகாசிரியராக இருந்த டாக்டர் ஹார்வி இங்கிலாந்துக்குச் சென்றுவிட்டார். உடன் பிள்ளையவர்கள் தாமே தத்துவ ஆசிரியராக நியமனம் பெற்று, தத்துவ நூலைப் பேரார்வத்துடன் கற்பித்து வந்தனர்.

இந்தச் சாஸ்திரத்தை நன்குணர வேண்டுமாயின் மேலைநாட்டு விஞ்ஞான அறிவும், நமது நாட்டுத் தத்துவ ஞானத்தில் நல்ல பயிற்சியும் வேண்டுமென்பது விரைவிற் புலப்பட்டது இவ்விருவகை அறிவும் பொது மக்களிடையே நன்கு பரவ வேண்டும் என்பதையும் சுந்தரம் பிள்ளை எளிதிற் கண்டார். அறிவு வளர்ச்சியின் பொருட்டுத் திருவிதாங்கூர் அரசாங்கத்தினரைப் பொதுப் பிரசங்க ஸ்தாபனம் ஒன்று நிறுவச் செய்து அதில் தாம் அடிக்கடி சாஸ்திரப் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்தி வந்தனர். தத்துவ சாஸ்திரத்தில் விஞ்ஞான சாஸ்திரப் பாகுபாடு **(Classification of Sciences)** என்ற பொருள் பற்றி

அரிய நூலொன்று 'நூற்றொகை விளக்கம்' என்ற பெயருடன் வெளிவருவதற்கு இந்த விரிவுரைகள்தாம் முதற்காரணமாயிருந்தன. அயலிடங்களிலிருந்தும், அறிவிற் சிறந்த பிரமுகர்களைக் கொண்டு பல அரிய விரிவுரைகள் நிகழ்த்தி வந்தனர் இவரது ஊக்கத்தால் உண்மையான விஞ்ஞான உணர்ச்சியும், தத்துவ நூல் உணர்ச்சியும் நமது தமிழ்நாட்டில் தோன்றத் தொடங்கின.

தத்துவ நுட்பப் பொருள்களை எவ்வளவு ஆர்வத்துடன் போதித்து வந்தனரோ, அவ்வளவு ஆர்வத்துடன் கற்றும் வந்தனர். இப்பேராசிரியர் ஒரு குருவையடுத்துக் கற்பதை இழிவெனக் கருதவில்லை. 'கல்வி கரையில' என்பதை உள்ளபடி உணர்ந்தவரல்லவா? கோடகநல்லூர் ஸ்ரீசுந்தரசுவாமிகளைக் குருவாகக் கொண்டு வேதாந்த ரகசியங்களை அறிந்து வந்தனர். இந்தப் பெரியாரை மிகவும் அந்தரங்க பக்தியுடன் போற்றியுள்ளார்

நூற்றொகை விளக்கத்தில் உள்ள முக்கியமான ஒரு பகுதியைக் குறித்து இங்கே குறிப்பிட வேண்டுவது அவசியம். 'கலைச் சொல்லாக்கம்' என்ற ஒரு தொடர் இப்போது எங்கும் முழங்குகிறது மகாநாடுகள் கூட்டப்படுகின்றன சாதிச் சச்சரவுகளை விளைத்துத் தமது ஆத்திரங்களைத் தீர்த்துக் கொள்ள இதுவே தக்க தருணம் என்று பலரும் இதில் சேர்ந்துள்ளார்கள்; பலவகை முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் சுந்தரம்பிள்ளை கைக்கொண்டுள்ள சிறந்த முறையே வழிகாட்டி ஊக்கம் அளிக்கிறது

நூற்றொகை விளக்கத்திலே ஆங்கிலத்திலுள்ள பல விஞ்ஞானச் சொற்களுக்குரிய தமிழ் மொழிபெயர்ப்புக்களை இப்பேராசிரியர் தந்திருக்கின்றார் வடசொற்களை விலக்கும் எண்ணமே இவரிடம் கிடையாது அறிவுப் பெருக்கம் ஒன்றே தக்க குறிக்கோளாகக் கொள்ளப் பட்டது. இதற்கு இடையூறு விளைப்பனவெல்லாம் தற்கொலை யாகுமென்பது நன்கு கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. தமிழின் வளர்ச் சிக்கும், தமிழ் மக்களது அறிவின் வளர்ச்சிக்கும் வேண்டுவன செய்தவர் களில் சுந்தரம்பிள்ளை தலைசிறந்தவராவர். இவர் காட்டிய முறை கைக்கொள்ளத்தக்கதென்பது கூறவும் வேண்டுமோ?'

நூற்றொகை விளக்கத்தின் சாறை இதைவிடப் பிழிந்து யாராலும் தர இயலாது. அந்த வகையில் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர் களை நாம் போற்றக் கடப்பாடுடையோம்.

உயிர் நூலின் முதற்பிரிவான தாவரம் பற்றி வரைந்துள்ள மூன்று கட்டுரைகள் 'நூற்றொகை விளக்கச் சிறப்பியல்' பகுதியில் வருகின்றன. நூற்றொகை விளக்கம் பொதுவியலில் உயிர் நூலினைக் குறித்த செய்திகளின் விரிவிளக்கங்களாகவே சீவராசிகளின் இலக்கணமும்

பிரிவும் என்ற கட்டுரை அமைந்துள்ளது. நுண்ணோக்காடி (Microscope) வழி மரங்களின் குணவியல்பைச் சொல்வது 'மரங்களின் வளர்ச்சி'யாகும். நாரத்தம்பூவின் அமைப்பினை விளக்குவதன் மூலம், பொதுவாய்ப் பூவின் உள்ளமைப்பு நிலையினைக் கூறும் நிலையில் 'புஷ்பங்களும் அவற்றின் தொழில்களும்' என்ற கட்டுரை அமைந்துள்ளது.

'நூற்றொகை விளக்கம்' காலத்தின் தேவை என்கிறார் ஆய்வாளர் எம். ஷீலா

மேனாட்டில் எழுந்த அறிவுப்புரட்சி ஆங்கிலேய ஆதிக்கம், ஆங்கிலக் கல்வி, போக்குவரத்து வசதி பரவலாக்கப்படுதல், அச்சு எந்திரப் பெருக்கம் போன்றவை இந்தியாவிலும் அறிமுகப்படுத்தப் பட்டு வளர்ந்து வந்தது. இந்நிலையில் மேனாட்டறிவின் புதுமையும் நுண்மையும் ஆங்கிலக் கல்வி பெற்ற இந்தியர்களை ஈர்த்தது.

ஞானத்தால் நுண்ணறிவு வளரப்பெற்ற இந்தியரைப் போன்று அல்லாமல், மேனாட்டினர் நேரடி அனுபவம் வழி நுண்ணறிவுக் கூறுகளைப் பல முறைகளினாலும் வளர்த்துக் கொண்டனர்.

"கேவலம் மதிநுட்பத்தால் மாத்திரமன்றித் தூரதேச சஞ்சாரத்தாலும், கருவி விசேஷத்தாலும் விளைகின்ற அனுபவப் பெருக்கால் அறியத்தக்கவை" என்பது பெ. சுந்தரம்பிள்ளையின் கூற்று. கீழை நாட்டினரிடம் இருந்து மாறுபட்ட இவ்வறிவுணர்வின் நிலைகளை அறிமுகப்படுத்துவனவாக மட்டும் அமையாமல், இவை பற்றிக் கீழை நாட்டினர் உணர்ந்திருந்த முறைமைகளையும் இந்நூலில் அவர் விளக்குகிறார்

அரசியலார் ஏற்பாட்டின்படி சுந்தரம்பிள்ளையால் நிகழ்த்தப் பெற்ற நூதனப் பிரசங்கமே நூற்றொகை விளக்கம். இது, கருத்துத் தெளிவினை முதன்மை நோக்கமாகக் கொண்டு இயல்கின்ற காரணத்தாலும், கருத்தின் பிழிவினைத்தரும் நூற்பாக்கள், விளங்க வுரைக்கும் விளக்கங்கள், ஒப்பிடல், சான்று காட்டல், தொடர்பு சுட்டல், போன்ற பல நிலைகளால் பாடுபொருளை விளக்கம் தோன்ற உரைப்பதாலும் அவை ஆய்வுத் திறன்களாக மிளிர்கின்றன எனலாம்.

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் இந்நூலில் வரும் நூற்பா, உரைநடை வழிவெளிப்படும் பாங்கைக் காண முடிகிறது. வெளிப் படுத்தக் கருதும் கருத்தில் நுட்பமும், தெளிவும் அமைய வேண்டிய சூழல்களில் நூற்பாக்கள் 'கருத்து விளக்கல்' நிலையில் சிறப்பிடம் பெறுகின்றன. நூல்களின் இலக்கணங்களை வரையறுத்து ஒழுங்கு படுத்தும் நூலாதலின் நூற்பாக்கள் இங்கு இயல்பாக அமைந்து பொருள் செறிவினை முழுமைப்படுத்துகின்றன. சொற்பொழிவாகப் படைக்கப்

பட்ட பொருளாதலினாலும், பாடுபொருளின் புதுமை புரிதற்கெளிமை நிலைகளுக்காக உரைநடை விளக்கங்களும் அமைந்துள்ளன. நூலாசிரியரின் வடமொழியறிவு, தத்துவச் சார்புக்கேற்ற வடமொழி நடை போல்வன உரைநடையில் கலந்து வருவது காணக் கிடக்கிறது.

நூற்பாக்களுக்குப் பொருள் விளக்கம் தருவதை ஓரெடுத்துக் காட்டின் வழிக்காணலாம்.

''*அறிவினை விளக்கும் கருவி நூலென்ப*'' எனும் நூற்பாவிற்கு, நூல் என்பது, அறிய வேண்டியவற்றை அறிவிக்கும் ஒரு கருவி. சதுர்வேதம் முதல் பல்லியின் குரல் முதலியவற்றால் நேரிடுகிறவைகளைத் தெரிவிக்கும் பல்லி சாஸ்திரம் வரை, கற்கக் கூடிய எல்லாவற்றிற்கும் நூல் என்னும் தமிழ்ப்பெயர் பொருத்தம் உடையதாக இருக்கிறது. இவ்வழக்கத்தை அனுசரித்துப் பார்க்கும்போது நூல் என்பது யாதேனும் ஒன்றை வரன்முறை அறிவிக்கும் கருவியெனக் கூறலாகும். ஆதலால், நூலின் முதற்பிரயோசனம் அறிவே,'' என நூற்பாவின் கருத்து சான்றுடன் விளக்கம், பொருளின் இலக்கணத்தை வரையறுத்துக் கூறுதல், எனும் பல நிலைகளில் பொருள் விளக்கம் தரும் நிலையினைக் காட்டலாம் ஒப்பிட்டுக் காட்டுதலையும் சுந்தரம்பிள்ளை இந்த நூலில் செம்மையாகச் செய்திருக்கிறார் எனலாம்.

மேலைக் கருப்பொருள் அடிப்படையில் நூல் இயற்றப் பட்டமையால், எளிமை, தெளிவு கருதி அனைத்து இடங்களிலும் முன் கூறப்பட்ட விளக்கங்களுடன் ஒப்பிட்டுக் காட்டல் முறையை நூலாசிரியர் கையாண்டுள்ளார் பொருள் விளக்க நிலையில் புரிபடாத கருத்தின் கூறுகளைத் தெளிவாக்க வேண்டி ஒப்பிட்டுக் காட்டுகிறார். சார்பு நூலின் இலக்கணம் கூறுகையில், முதனூல் வழிநூல் ஆகிய இரண்டும் நிஷ்காமியமாய் உண்மையை மாத்திரம் விளக்க வேண்டுமென்ற ஒரே கருத்துடையன. உண்மையை அறிதல் போதுமான ஆனந்தம் தருவதேனும், அவ்வானந்தம் தக்கோர்க்கன்றியாவர்க்கும் அனுபவிக்கக் கூடியதன்றாயும், மனிதர்களுடைய சுகவாழ்விற்குப் பற்பல சௌகரியங்கள் ஆவசியப்பட்டனவாயும் இருப்பதால், முன்சென்ற இருவகை நூல்களின் முடிவுகளைத் திரட்டி அவை மனிதர் செய்து வரும் யாதேனும் ஒருவகைத் தொழிலுக்கு உபயோகப் படும்படியாக விதிவிலக்கு வாக்கியங்களாக ஏற்படுத்தி, பயன்படும் ஒன்றையே பிரவர்த்திக்கும் நூல்களும் உள. அவற்றிற்குச் சார்பு நூல் என்று பெயர்,'' என முதல், வழி நூல்களின் பயன் இது. இதனின்றும் வேறுபடும் கூறால் சார்பு நூலின் இயல்பு, பயன் இதுவென்று எல்லாம் கூறும் பகுதி 'ஒப்பிட்டுக்காட்டல்' ஆகும். நூற்றொகை விளக்கம் நூற்பாவில் தொடர்புசுட்டல் என்ற கூறையும் ஆற்றல் துலங்க

அமைத்துக் காட்டியுள்ளார் சுந்தரம்பிள்ளை. அதற்கும் ஓர் எடுத்துக் காட்டுக் காட்டலாம்.

புரிதற்கு எளிமைகருதி கையாளப்படும் வெளிப்பாட்டு உத்திகளில் தொடர்பு சுட்டல் உத்தியும் ஒன்றாகும் நூல்கள் பற்றிய பகுதியில் தரும் விளக்கங்களுடன், தொடர்புடைய பிற பகுதிகளையும், அவற்றின் பொருளை எளிமைப்படுத்திக் கூறல் தொடர்பு சுட்டல் நிலையாகும். நூற்றொகைகளில் மண்டலச் சந்திகளை ஆங்காங்கு கூறல், நூல்களின் முறைவைப்பினைப் பேசுதல் போன்றவை இதில் அடங்கும்.

நூற்றொகைகளின் வகைமைகள் பற்றிய வரையறுக்கப்பட்ட தெளிவையும், ஒழுங்கையும் உறுதிப்படுத்தும் அகச்சான்றாக இந்நூல் 'மண்டலிப்பு' நிலை வருகினறது. இறைவனிடம் தோன்றும் யாவும் அவனிடமே சென்று ஒடுங்குகின்றன என்று சமயவாதிகள் கூறுவது போல் நூல் மண்டலமும் பல்வகைச் சந்திகளால் இணைந்து தம்முள் ஒத்தியல்கின்றன.

எதிலேயும் 'தொகுத்துக்கூறல்' முறை இன்றியமையா இடம் பெறுவதாகும். இந்நூலிலும் இது சிறப்புடன் விளங்குகிறது எனலாம்

பாடுபொருளின் புதுமை உணர்வால் உண்டான கடின நிலையை நீக்கும் நிலையில் சுந்தரம்பிள்ளை கையாண்ட கூறு, தொகுத்துக் கூறல் ஆகும். கூறியது கூறல் போல் அமைந்து கிடக்கும் இக்கூறு, பாடு பொருளை எளிமைப்படுத்தும் நோக்கத்திற்காகக் கையாளப்பட்ட ஒரு கூறு ஆதலின் இங்கு இயல்பாக அமைகிறது பாடுபொருளின் வரையறுக்கப்பட்ட தொடர்பிற்கும், பொருளுணரும் வாசகர்களின் புரிதல் நிலைக்கும் துணை புரியும் நிலையில் தொகுத்துக் கூறல் எனும் இக்கூறு பெ சுந்தரம்பிள்ளையால் கையாளப்பட்டது.

நூலின் உண்மை, பொது, ஒழுங்கு ஆகிய மூன்று கூறுகள் பற்றிக் கூறுகையில், முதலில் இவற்றின் விளக்கம், இயல்பு கூறியவர் ''ஆனதினால் ஒழுங்கான நூல் விவகாரம், அவ்விவகாரத்தில் நேரத்தக்க மொழிகளையும், அம்மொழிகளால் குறிக்கப்படும் பொருள்களையும் இலக்கண வகையால் நிர்ணயிப்பதும் அந்த விவகாரத்திற்குட் படாததாயும், அந்த விவகாரம் நன்கு முடிதற்கு.. '' என மீண்டும் யாவற்றையும் தொகுத்துக் கூறும் நிலையினைச் சான்றாகக் காட்டலாம்

மேலும், வடமொழி தெய்வமொழியெனக் கருதப்பட்டு வந்தமை யின் பல வகையான சமய தத்துவ இலக்கிய நூல்கள் யாவும் அதில் ஆக்கப்பட்டிருந்தன. தமிழின் பழமையான நூல்கள் அச்சேறிய காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டு எனவே, மேலைக் கருப்பொருளுடன் ஒத்த இயல்புடைய கூறுகளென வடமொழியில் காணப்பட்டனவற்றைச்

சுட்டி நம்மனோர் நிலையாது எனக் காட்டும் வெளிப்பாட்டு உத்தியை நூலாசிரியரிடம் காண்கிறோம். நூலுக்கு அடிப்படைப் பொருள்கள் பற்றிக் கூறுகையில், ''ஆதலால் பொருளெனத் தோற்றுமேயாகில், கேவலம் இருக்குகை என்னும் குணம்'' அதனுடன் இருக்கவே வேண்டும் இக்குணத்தை வடமொழியார் கேவலம் சன்மாத்திர மென்றும், கேவலசித்தென்றும், வஸ்துத்தன்மை என்றும், அஸ்தித்துவ மென்றும், பலமொழியால் விவகரிப்பார்...'' என வரும் வடமொழி நூற்தொடர்பு சுட்டல் நிலையை இங்குச் சுட்டிக்காட்டலாம். முன்னோர் தொடர்புகாட்டல் கூறினை தத்துவநூலின் இயல்பு விளக்கும் நிலையில், ''இந்நூலில் நம்முன்னோர் மிகவும், 'தேர்ச்சியடைந்தோர் என்பது இந்நூலோடு கலப்புண்டிருக்கின்ற மத நூற்கொள்கைகளை முற்றிலும் மறுப்போர்க்கும் சம்மதம்'' எனவரும் பகுதியாலும் உணரலாம்.

மேலும், பழந்தமிழ்ச் சொற்களுக்குப் பொருத்தமான புதுப் பொருள்களும் ஆசிரியரால் இந்நூலுள்ள பெய்யப்பட்டுள்ளது.

நூல் இலக்கணத்தின்படி, சொற்களின் பொருள் வரையறை இன்றியமையாதது என்று பேராசிரியர் வரையறுத்ததுபோல், தம் நூல்களில் கையாளும் மொழிகளின் பொருட்களையும் வரையறை செய்கையில் பழைய சொற்களுக்குப் புதியபொருள் வழங்கும் நிலையைக் கையாண்டுள்ளார். தொல்காப்பியர் நூல் வகைமை கூறுகையில் முதல், வழி நூல்கள் பற்றிப் பேசுகிறார் தொல்காப்பியர் சொல்லாட்சியினைக் கையாளும் சுந்தரம்பிள்ளை, தாம் எடுத்துக் கொண்ட பொருள்களுக்கேற்பப் புதுப்பொருள் வழங்குகிறார்

*''வினையின் நீங்கிய விளங்கிய அறிவின்*
*முனைவன்கண்டது முதனூ லாகும்''*
*''வழியெனப்படுவது அதன்வழித்தாகும்''*
*''வழியின் நெறியே நால்வகைத்தாகும்''*
*''தொகுத்தல் விளித்தல் தொகைவிரிமொழி பெயர்த்*
*ததர்ப்பட யாத்தலோடனை மரபின வே''*

(தொல்.பொருள். 640-643)

எனத் தொல்காப்பியர் முற்றுணர்ந்த முனிவன் செய்யும் நூலை அடித்தளமாகக் கொண்ட, முதல் வழி நூற்களை வகைமை செய்ய, சுந்தரம்பிள்ளையோ பொருளின் இயல்பான உண்மை, பொதுமை, ஒழுங்கெனும் மூன்று கூறுகளின் அடிப்படையில் பொதுமை, ஒழுங்கெனும் இரண்டு கூறுகளில் படிப்படியாகக் குறையும் நூற்கள் வழி, சார்பு என்னும் வகையினவாம் என்கிறார். பழஞ்சொற்களுக்குப் புதுப்பொருள் வழங்கும் இக்கூறு கலைச்சொல்லாக்க நிலையாகும்.

இனிச் சான்று காட்டலுக்கு ஒரு எடுத்துக்காட்டு காட்ட முனைவோம்.

கடினமான தத்துவச் சான்று முதல், குழந்தைகளின் செயல் எனும் எளிய சான்று வரை பல நிலைகளில் சுந்தரம்பிள்ளை இக்கூறினைக் கையாளுகிறார் அறிவு யாவருக்கும் பொதுவானது. இழிவன்று என்பதை விளக்க ''குழந்தைகள் தங்களுக்கு எட்டாத உயரமான ஒருபொருளைச் சுட்டி அது அண்ணனுக்கு எட்டும், அப்பாவுக்கு எட்டும், எட்டாதென்ற வாக்குவாதத்தில் இராஜாவுக்குக் கூட எட்டாது, எட்டும் என்ற மழலைமொழியோ உண்மையான ராஜபக்தியை விளக்கும்?''எனக் குழந்தையின் பேதைமை நம்பிக்கையினைச் சான்றாகக் காட்டுகின்றார்

இனி, மேற்கோள்களையும் திறமையாகக் கையாண்டிருத்தலைக் காண முடிகிறது. தெளிவின் பொருட்டும் கருத்தை உறுதிப்படுத்தல் பொருட்டும் சுந்தரம்பிள்ளை மேற்கோள்களைப் பரவலாகக் கையாண்டுள்ளார். சுந்தரம்பிள்ளையின் விரிந்த கல்வியறிவினை விளக்கும் சான்றுகளாகவும், இவை அமைந்துள்ளன எனில் மிகையன்று. அறிவின் இயல்பு, பயனை விளக்குகையில் முன்னோரின் நூற்பயனாய நாற்பொருள் நிலை கூறுதல், தாம் கூறவந்த கருத்தை உறுதிப்படுத்துதல் பொருட்டு வந்த மேற்கோளாம், ''ஆதலால் நூலின் முதற்பிரயோசனம் அறிவே, 'அறம் பொருள் இன்பம் வீட்டைதல் நூற்பயனே' என்பதை இதனால் மறுத்ததன்று அவைகளுக்குப் பரம்பராசாதனமாவதன்றி, நூல்கற்றவுடன் பயப்பது அறிவே அவ்வறிவினைத் தக்க வழி செலுத்தின் அடையக்கூடியவை இந்நான்கும் என்கின்றார்.

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் முதல் நூல் என்ற வகையிலும், மெய்ப்பொருளும், அறிவியலும் தமிழில் தழைத்தோங்க அடித்தளமிட்ட நூல் என்ற வகையிலும் நூற்றொகை விளக்கம், சிறந்த விளக்கம் பெற்றது தமிழ்நாட்டில்.

அறிவுப் பெருக்கம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு ஆங்கிலத்தில் உள்ள பல அறிவியற் சொற்களுக்கும் வடமொழி கலந்த தமிழ் மொழிபெயர்ப்புச் சொற்கள் நூற்றொகை விளக்கத்தில் தரப் பட்டிருக்கின்றன. இன்றைய கலைச் சொல்லாக்க முயற்சிக்கு, சுந்தரம் பிள்ளையின் அன்றைய பணி ஆக்கமும், ஊக்கமும் அளிப்பதோடு முன்னோடியாகவும் அமைந்தது எனலாமன்றோ!

நூற்றொகை விளக்கத்தில் உள்ள பதினோராவது நூற்பா,

''முதல்வழி சார்பென மூவகை பொது நூல்'' என்பது, இதற்கு விளக்கம்தரும் சுந்தரம்பிள்ளை, நூல், நூல் என வழங்கும் அநேக புஸ்தகங்கள் இவ்வகுப்பினின்றும் விலக்கப்படும். முதலாவதி லக்கணமாகிய திட்டப்படுத்திய மெய்மையை உடையதெனக் கூறத் தகாதவைகளாகப் பல நூற்போலிகள் பொது நூலாக எந்நாட்டிலும்

நடிப்பதுண்டு. அஷரமே தெரியாத சிலர் சாஸ்திரி என்ற பெயர் வகிப்பது போல் நூலிலக்கணம் அமையாதவை வழக்கத்தில் நூலெனை நடிப்பது உண்டெனவும், நூல் இனங்களை வகுக்கப்புகுவோர் அவைகளை ஒழித்து உண்மையான நூல்களைக் கவனித்தல் உசித மெனவும் கூறுதல் மாத்திரமே அவசியம்'' என்ற விளக்கத்தில், ஒரு புதிய கருத்தை - நல்ல நூல்களுக்கிடையில் போலி நூல்கள் - நெல்லுக்குள் பதராக இருப்பதை - ''நடிப்பு நூல்கள்'' என்று நளினமாகவும், அதேசமயம் ''நறுக்'' கென்றும் நையாண்டி செய் திருப்பதும் ஈண்டு நோக்கத்தக்கது.

*'தேவரனையர் கயவர் அவரும் தாம்*
*மேவன செய்தொழுகலான்'*

என்ற வள்ளுவமே நம்முன் பளிச்சிடுகிறது!

பத்தொன்பதாவது நூற்பாவான,

*'ஆனுமானீகமணுவினியக்கம்*
*வெம்மை யொளிமின்மயமதன் பயனே'*

என்பதற்கு விளக்கம் தரும் சுந்தரம்பிள்ளை, ''ஒரு பொருள் சுருங்கும் போது அதன் அணுக்கள் தங்களுக்குள் நெருங்கி இடைஇடையேயுள்ள வெளிகுறைகிறதென்றும், விரியும்போது அணுக்கள் அகன்று அவ் வெளிமிகுகின்றதென்றும் நிர்ணயிக்கப்படுமாயின், ஒருபொருள் இடம் பெயராது இருந்தபடியே இருக்க அதன் அணுக்கள் சலனமுறலா மென்பது புலப்படுகின்றது. இவ்விதமாய் யூகிக்கப்படும் சலனத்திற்கே 'அணுஇயக்கம்' என்று பெயர்'' என்ற விளக்கம் இருபத்தியோராவது நூற்றாண்டு விஞ்ஞானியின் விளக்கம்போல் துல்லியமாக இருப்பது உணரத்தக்கதாகும்.

இருபத்து நான்காவது நூற்பா, பின்னும் நம்மை வியக்க வைக்கிறது அல்ல, அல்ல அதனுடைய விளக்கம் நம்மை விளக்க வைக்கிறது

*''உண்ணல் என்பது தன்மயப்படுத்தல்''*

உயிர்செய்கின்ற தொழில் பொதுவாக இரண்டெனக் கூறப்படும். அவற்றில் முதலாவது 'உண்ணுதல்'. இதோ நிற்கும் மரமானது அதன் வேரால் மண்ணிலுள்ள சில பௌதிகங்களையும் இலை முதலிய வற்றால் காற்றிலுள்ள சில பௌதிகங்களையும், எல்லாப் பாகங் களாலும் விசேடமாய் வேராலும், ஜலத்தையும் உட்கொண்டு, உட்கொண்டு அவ்விதம் தனக்குக் கிடைத்த அந்தந்தப் பொருளை, தனக்கு வேண்டிய பாகங்களாக மாற்றி, தன் மயமாகச் செய்து வளர்ச்சி யடைகின்றது இப்படித் தன்மயப்படுத்தற்கே 'உண்ணல்' என்று பெயர். ஆனதினால் உண்ணல் என்பது உயிரின் முதல் தொழிலாம், என்று

கூறியுள்ளார் நூலாசிரியர் தாவர நூல் அல்லது உயிர் நூலாசிரியர் கூட இவ்வாறு தாவரங்களின் இயல்பைச் சொல்வது கடினம் இனி, இதன் இருபத்தைந்தாவது நூற்பாவும் இன்றியமையாதது ஆகும்.

*'தனைப் போற் பிரதி சமைத்தலுற்பாதனம்'*

என்பது நூற்பா. இதற்கு, பொதுவாக உயிர்கள் யாவும் செய்கின்ற தொழிலில் இரண்டாவது செய்கை உற்பாதனம். உறுப்புக்களோடு கூடிய உடம்பிலிருந்து அதுபோலவே எல்லா உறுப்புக்களும் கூடிய மற்றோர் உடம்பை உண்டுபண்ணும் சக்திக்கு 'உற்பாதன சக்தி' என்று பெயர் இங்ஙனம் தனக்குப் பிரதிப் பொருள்களாகத் தன்னிடத்தில் உற்பத்தி யாக்கும் பிரத்தியுற்பாதன சக்தி' உயிருள்ளவற்றிற்கே உள்ளது என்பது இதன்பொருள் எனவே, உற்பாதனம் (உற்பத்தி செய்வது) உயிரின் இரண்டாவது தொழில் என்பது பெறப்படுகிறது.

அடுத்து, சில சொல்லிப் பல நினைக்கத் தூண்டு வகையில் அமைந்துள்ள முப்பத்தொன்றாவது நூற்பாவைக் காண்பது வியப் பூட்டுவதாக அமைகிறது.

*''சோதிடம் பௌமியந் தொல்வியாகரண*
*மெனவழி நூற்குதாரணம் பலவுளவே''.*

இதற்குரிய விளக்கமாக மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை, வானில் தோன்றும் நட்சத்திரம், கிரகம், சூரியசந்திரர், தூமகேது ஆகிய இவை யார்க்கும் வியப்புண்டுபண்ணும் பதார்த்தங்களாக இருக் கின்றன. இவை என்னவென்றும், இவை செய்யும் தொழில் என்ன வென்றும் மற்றும் அரிய மனிதர் ஆதிகாலம் முதல் முயலுவதுண்டு. அவைகள் பூமியில் நாம் காண்கிற மற்றப்பொருள்போல் ஒன்றும் அன்று என எதுகாறும் நினைக்கின்றோமோ அதுவரையும் அவைகளைப் புறம்பாக நிறுத்தி அவைகளின் குணங்களை ஆராயும் நூலையும் ஒரு முதனூலாக அங்கீகரிக்க வேண்டியதாம் என்று விளக்குவதோடு இந்நாட்டிலுள்ள இக்கால சோதிட நூலோரில் பெரும்பான்மையர் சூரிய, சந்திரர் இருவரை, ஒழிய மற்றவான் பொருள்களைப் பஞ்சாங்கத் தின்றி அறியாதிருக்கும்படி நேரிட்டிருக்கிற நமது தேச நிலைமை மிகவும் விசனகரமானதாக இருக்கின்றது என்று தம் கவலையையும் வெளியிட்டிருப்பது நோக்கத்தக்கது.

*''இயற்கையும் பயிற்சியுமியைந்திடக் கரணம்*
*வியப்புறச் சில்வழி விரிந்து மற்றொடுங்கல்*
*சொலற்கரும் யோக மென்றுரைக்கவும் படுமே''*

என்ற முப்பத்தாறாவது நூற்பாவுக்கு விரிந்த அளவில் விளக்கம் அளித்துள்ளார் ஆசிரியர். அதைச் சுருங்கிய அளவில் நம்மால் புரிந்துகொள்ள இயலும்.

மேற்கூற வேண்டிய யோக கலைகளின் இயற்கை முற்கூறியவை போல எடுத்துக் காட்டச் சற்றும் எளிதன்று. அவை உளவோ இலவோ வென யாவராலும் சந்தேகிக்கத்தக்க அருமையை உடையன. யாதாவ தொரு விருந்தாந்தத்தில் சிற்சில பொய் மேற்படத் தோற்றுவதால் அஃது ஆதியந்தம் பொய்யென மதித்தல் பாசிபடர்ந்திருக்கும் ஏரியில் நீர் இல்லையென மதித்தலையொக்கும்.

அன்றியும் யாதாவதொரு தோற்றம் நமது விஷய ஞானபிவிருத்திக்கு ஏக காரணமாயிருக்கும் அனுபவ வழியை அடைக்கும் கல்லாக முடியும்' என்ற விளக்கத்தின் மூலம் எதையும் நன்கு ஆராய்ந்த பின்னரே, முடிவெடுக்க வேண்டும்.

வாய்புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று, அவசரக் கோலத்தில், பொய் என்றும் மூட நம்பிக்கை என்றும் முடிவுகட்டி விடக்கூடாது என்று விளக்குகிறார் சுந்தரம்பிள்ளை அப்படிச் செய்தால், அது ''தாடிகொண்டு வீடுகட்டுவது போல்'' நாமாகச் சங்கற்பித்துக் கொள்ளும் ஒன்றாக மாறிவிடும் என்று அற்புதமாகக் கூறியுள்ளார்.

யோகமென்பது, பொதுவாய் 'ஒன்றுதல்' என்னும் பொருளுடை யதாய், ஞானயோகம், கருமயோகம் எனும் இரு கூறுடையதாய் இருக்கிறதென்றும், மனோநாசத்திற்கு ஞானயோகம் எனவும், சிற்சில புருஷப் பிரயத்தினத்தால் சாதிக்கத்தக்க மற்றெல்லாவகை மனோல யத்திற்கும் கருமயோகம் என்று பொருள் தருகின்றார்.

இந்நூல் அறிவியல் துறையில் வியக்கத்தக்க முன் நுழைவாகத் தமிழ் உரைநடைக்கு முன்மாதிரியாக அமைந்து ஒளிர்கிறது இது இன்னும் பரப்பப்பட்டு துய்க்கப்பட வேண்டிய ஒன்றாம் என அறிஞர் டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம் அவர்கள் தன்னுடைய 'மனோன்மணீயம் சுந்தரனாரின் புரட்சி-திறன் என்ற நூலில், 'யார் இந்தச் சுந்தரனார்?' என்ற அத்தியாயத்தில் குறிப்பிட்டிருப்பது முற்றும் ஏற்புடைத்தேயாகும்.

*ஊக்கம் குன்றி உரம் குன்றி*
*ஓய்ந்த தமிழர்க் குணர்வூட்டி*
*ஆக்கம் பெருக, அறிவோங்க*
*ஆண்மை வளரச்செய்து - உலகில்*
*மீக்கொள் புகழைப் பெற்றெழுந்த*
*வாரலோன் நமது சுந்தரனைப்*
*பாக்கள் புனைந்து மகிழ்ந்து நிதம்*
*பாடி இனிது போற்றுவமே''*

என்று பாடிய கவிமணியின் நயம் உய்த்துணரக்கூடியதாகும்.

# 6
# திருவிதாங்கூர் மன்னர் வரலாறு

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை ஒன்றேகால் நூற்றாண்டிற்கு முன்பே வரலாற்று வரைவில் வரலாறு படைத்தவர் என்பது வியப்பாக இருப்பினும் அதுவே உண்மை. அறிவியல் ஆய்வு முறையை வரலாற்றில் கையாண்டு வெற்றி கண்டவர். வெளிநாட்டவரும் பாராட்டும் வண்ணம் வரலாற்று ஆராய்ச்சியை நடத்தியவர்.

பொதுவாக, ஐந்து வகையான மூல ஆதாரங்களைக் கொண்டே வரலாறு எழுதப்படுகின்றது. கல்வெட்டுக்கள், நாணயங்கள், புதை பொருள்கள், இலக்கியங்கள் வெளிநாட்டவர் குறிப்புகள் என்பனவே அவைகள். இவற்றில் கல்வெட்டுக்கள் முதலிடம் பெற்றிருப்பதை ஊன்றிக் கவனிக்கவேண்டும்.

மேலும், வரலாறும், இலக்கியமும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையன. வரலாற்றைப் போலவே இலக்கியங்களும் ஆதாரங்களோடு எழுதப்படுவதால், பதிவேடுகளை (Records)-க் காட்டிலும், கல்வெட்டுக்களைக் காட்டிலும் வரலாற்று ஆராய்ச்சிக்குப் பயன்படுவதைப் பல்வேறு வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக் கொண்டாலும், வரலாறும் இலக்கியமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்திருப்பதைக் காண முடியும். வரலாறு இன்றி இலக்கியமில்லை; இலக்கியமின்றி வரலாறு இல்லை என்பதை உண்மை நிலை என்பர்.

சங்க கால வரலாற்றை எழுதுவதற்குச் சங்க இலக்கியங்களும் சிறந்த ஆதாரங்களாகும் இதை,

என். கிருஷ்ணசாமி ஐயங்கார் எனும் வரலாற்று ஆசிரியர்- 'புதைபொருள், கல்வெட்டு ஆகிய சான்றுகளைக் காட்டிலும் இலக்கியமே இந்திய வரலாற்றை ஆராய்வதற்குப் பெரிதும் துணை செய்கிறது ' என்று குறிப்பிட்டிருப்பதில், கல்வெட்டுகளின் கணிசமான பங்கை உணர முடிகிறது.

வின்சென்ட் ஸ்மித் போன்ற வரலாற்று ஆசிரியர்களும், புதினங்களும் வரலாற்று நாவல்களும் வாழ்க்கை முறைகளையும் பழக்க வழக்கங்களையும் பூளோகக் குறிப்புகளையும், விவரங்களையும் அந்தரங்க சமய சமுதாய வாழ்க்கை விளக்கங்களையும் தருகின்றன என்று குறிப்பிடுவதிலிருந்து, வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள்

எல்லாம் கல் ஆவணங்கள்(**Stone Documents**)எனும் கல்வெட்டு களில்தான் தெளிவாக உள்ளன என்பது கல்வெட்டாராய்ச்சி தரும் உண்மையாகும் இவற்றோடு செப்பேடுகளையும் சேர்த்துக் கொள்ளலாம். சின்னமனூர்ச்செப்பேடுகளின் பயன்பாட்டை யாரே மறுக்க முடியும்!

இவ்வாறு, பழங்காலத்தைப் பற்றி, முற்காலத்தைப் பற்றி அறிந்து கொள்ள உதவ இருக்கும் ஒருதுறைதான்(Department)தொல்லியல் துறை, தொலலியலை ஆங்கிலத்தில் 'Archaeology' எனக் கூறுவர் இச்சொல் 'Archaious-Logos' என்ற இரண்டு கிரேக்கச் சொற்களால் ஆனதாகும். ''ஆதிகாலத்தைப் பற்றிய அறிவியல்'' என்பது இத் தொடரின் பொருளாகும்.

பண்டைய வரலாற்றை வெளிப்படுத்திக் காட்டும் இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள், பிற ஆவணங்கள் ஆகியவை தோன்றும் முன்னர் வாழ்ந்த மக்களின் வாழ்ககை முறை, பண்பாடு, பழக்கவழக்கம், நாகரிம், நம்பிக்கைகள் ஆகியவை பற்றி அறிய, இத்தொல்லியல் ஆய்வே நமக்குத் துணை செய்கிறது. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட கால நிலையை வெளிப்படுத்தும் திறன் தொல்லியலுக்கே உண்டு. இத்தகு தொல்லியல்துறையின் ஓர் இன்றியமையா அங்கம்தான் கல்வெட்டியல்.

திருவிதாங்கூர் அரசு, கல்வெட்டுத் துறையைத் தொடங்கிய ஆண்டு 1896. அதற்கு ஐந்தாண்டுகளுக்கு முன்பே மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை கல்வெட்டுக்களை ஆராய்ந்து ஆய்வுக் கட்டுரைகள் எழுதத் தொடங்கிவிட்டார் என்பது உவப்பூட்டும் செய்தியாகும்.

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையைப் பொருத்தவரை, பூர்வ சரித்திர ஆசிரியராகவே இவர் தொடக்கத்தில் நியமனம் பெற்றார். அச்சரித்திரங்களைப் பயிற்றுவித்து வரும்போது, தமது நாட்டின் பூர்வ சரித்திரத்தையும் ஆராய வேண்டும் என்ற ஓர் அவா இவருக்கு உண்டாயிற்று. திருவிதாங்கூர்ப் பூர்வீக அரசியல் வரலாறுகளைப் பற்றி நன்றாக ஆராய்ந்து ஒரு நூல் எழுதினார். இது இந்நாட்டுச் சரித்திரத்திற்கு முக்கிய ஆதாரங்களுள் ஒன்றாக இன்றும் விளங்கு கிறது. இந்நூலின் பொருட்டு, திருவிதாங்கூர் மகாராஜா அவர்கள் இவர் குடும்பத்தினர்க்குப் பரம்பரையாக மாதந்தோறும் ஒரு நன்கொடைத் தொகை அளித்து வர ஏற்பாடு செய்துள்ளார்கள். இது இச்சரித்திர நூலின் பெருமையை ஒருவாறு விளக்கும்.

இந்நூலை இயற்றி வருங்காலத்துத் திருவிதாங்கூரிலுள்ள சிலாசாசனங்களை நன்கு பரிசோதிக்க வேண்டுவது அவசியமாய் முடிந்தது ஆனால், அச்சாசனங்கள் படிஎடுக்கப் பெறாமை

யினாலேயும், அச்சில் வெளியிடப் பெறாமையினாலேயும், இவர் பெரிதும் வருந்தி உழைக்க வேண்டியதாயிற்று. தாமே பல இடங்களுக்குச் சென்று சிலாசாசனங்களைக் கண்டுபிடித்துப் படி எடுக்கும்படி நேர்ந்தது. இவ்விடர்ப்பாடுகளையெல்லாம் திருவிதாங்கூர் அரசாங்கத்தினர்க்கு அறிவித்து அந்நாட்டின் ஒரு சிலாசாசன இலாகா நிறுவி, அதில் தாமே கௌரவத் தலைவராக விளங்கி, பல அரிய சாசனங்களை வெளியிட்டுச் சரித்திர உணர்ச்சி பெருகும்படிச் செய்தார் என்ற எஸ் வையாபுரிப் பிள்ளையின் தகவல் இங்கே உணரற்பாலதாகும்

வேணாட்டு மன்னர்களான சர்வாங்கநாத ஆதித்தவர்மன், கீழப் பேரூர் ஸ்ரீவீரகேரள மார்த்தாண்ட திருவடி, ஸ்ரீ வீரராம மார்த்தாண்ட வர்மா, கேரளவர்மா குலசேகரப் பெருமாள் ஆகியோர் பற்றிய வரலாற்றுத் தகவல்களையும், அவர்களது காலத்தையும், கல்வெட்டுக்கள் மூலம் வெளியே கொண்டு வந்த பெருமை, மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையைச் சாரும் இந்நூல் வெளியிடப் பட்டு சுமார் முப்பதாண்டுகளுக்குப் பின்னரே திருவிதாங்கூர் தொல் பொருள் ஆய்வுத்துறையினர் இரண்டு நூற்றாண்டுகள் திருவிதாங்கூரை ஆண்டு வந்த மன்னர்களின் பட்டியலை வெளியிட்டனர் இப்பட்டியல் தயாராக, மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை வெளியிட்ட திருவிதாங்கூர் பழைய மன்னர் வரலாறு(Some Early Sovereigns of Travancore)-மிகவும் உதவியாக இருந்தது என்ற குறிப்பை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்வது இங்குத் தேவையாகிறது

இனி, திருவிதாங்கூர் பழைய மன்னர் வரலாறு என்ற நூலிற் புகுவது பொருத்தமானதாகும்.

திருவிதாங்கூர் பழைய மன்னர் வரலாறு என்ற நூல் சுமார் நூற்று நாற்பது பக்கங்கள் கொண்ட ஆங்கில நூலாகும். நூல் பதிப்பாளர் குறிப்பை, நூலாசிரியர் பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளையின் அருமை மகன் பி.எஸ் நடராஜ பிள்ளை 14-08-1943 ஆம் ஆண்டில் வரைந்துள்ளார். இந்நூலிற்கு முன்னுரை(Foreword)-எழுதியவர், திருவனந்தபுரம் மாமன்னர் கல்லூரி வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் கே.வி.ரங்கசுவாமி ஐயங்கார். அவர் அதில், தொல்லியல் துறையில் திருவிதாங்கூர் ராச்சியத்தில் மட்டும் அல்ல; தென்னிந்தியாவிலேயே முன்னோடியாகத் திகழ்பவர் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை யென்று குறித்திருப்பது நோக்கத்தக்கது

நூலின் ஆசிரியர்முன்னுரையை (Preface) மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை, ஜூன் 1894-இல் எழுதியுள்ளார். அதில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகளே இந்த நூல் என்பது போதருகின்றது. அந்த முன்னுரையில் அவர்,1894 ஆம் ஆண்டு, மார்ச் 24, மார்ச் 31,

மற்றும் ஏப்ரல்7, ஆகிய நாட்களில் தன் தொல்லியல் ஆய்வு பற்றிச் சொற்பொழிவாற்ற அனுமதி தந்த அரசு சொற்பொழிவுக் குழுவினருக்குத் தன் நன்றியைத் தெரிவிப்பதோடு, இவரது ஆய்வில் மிகவும் அக்கறை காட்டிவந்தும், நூல் மற்றும் கட்டுரைகளின் மெய்ப்புக்களைத் (Proofs) திருத்தியும் உதவிய தன் நண்பர் கே ஜி.சேஷ அய்யருக்கும் நன்றி தெரிவித்திருப்பது, (My thanks are also due to the Travancore Government Lecture Committee for having permitted these Lectures to be delivered under their auspices on three successive Saturday evenings, March 24th and 31st, and April 7th, 1894. I should also thank my friend Mr. K.G.Sesha Aiyar for the intelligent sympathy he has always evinced in my work and for his kindness in reading the proofs).

அது மட்டும் அன்று, கல்வெட்டியல் என்பது நடைமுறை அறிவியலுக்கு ஓர் இன்றியமையாத துனணவனாக இருக்கிறது என்ற உண்மையையும் புலப்படுத்தியுள்ளார். மேற்கூறப்பட்ட உரைகளோடு, நான்கு இயல்களும், மூன்று பின்னிணைப்புகளும் கொண்டதாக இந்நூல் உருப்பெற்றுள்ளது.

அவைகளாவன:-

1.திருவிதாங்கூர் மன்னர்களின் சில பண்டைய வரலாறுகள்(Some Early Sovereigns of Travancore).

2.நான்கு மற்றும் ஐந்தாம் மலபார் நூற்றாண்டுகளில் பண்டைய திருவிதாங்கூர் மன்னர் வரலாறு(The Sovereigns of Travancore in the 4th and 5th Centuries M.E.)

3.ஆறாம் மலபார் நூற்றாண்டில் பண்டைய திருவிதாங்கூர் வரலாறு(Some Sovereigns of Travancore in the Sixth Centuries M.E.)

4.பலவித்மான திருவிதாங்கூர்க் கல்வெட்டுகள்(Miscellaneous Travancore Inscriptions).

மேலும் பின்னிணைப்புகளாக(Appendixes)

கல்வெட்டுகளின் மூலவாக்கியம்

(Text of the Inscriptions)

திருவிதாங்கூர் பண்டை மன்னர்களின் வரலாறு ஒரு பார்வை-

டாக்டர் ராபர்ட் ஹார்வி(Some Early Sovereigns of Travancore - A Review by Dr. Robert Harvey).

நூலாசிரியரின் வாழ்க்கைச் சுருக்கம் - டாக்டர் ராபர்ட் ஹார்வி (*A Life sketch of the Author* by Dr.Robert Harvey) ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய் நூல், மேதகு ஸ்ரீ.பத்மனாபதாச வஞ்சிபால சர் ராமவர்ம திருவடிக்கு அர்ப்பணிப்பு(Dedicated)- செய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது

திருவிதாங்கூர் மன்னர்களின் சில பண்டை வரலாறுகள் என்னும் முதல் அத்தியாயத் தலைப்பையொட்டியே கீழ்க்கண்டவாறு நூலாசிரியரால் குறிக்கப்பட்டுள்ளது.

"முதன் முறையாகக் கல்வெட்டுகள் மூலம் மன்னர்களின் காலம் முடிவு செய்யப்பட்டுக் கவனத்திற்குக்கொண்டு வரப்படுகிறது"(For the First Time Brought to Notice with their Dates determined by Inscriptions)என்ற குறிப்பு படிப்போர் உள்ளங்களில் பசுமரத்தாணிபோல் பதியத்தக்கனவாகும்.

இரு இன்றியமையாத நாகரிகங்களாக ஆரிய நாகரிகம், ஆரியருக்கு முற்பட்ட நாகரிகம் ஆகியவை இணைந்த ஒவ்வொரு நிலையையும் திருவிதாங்கூரிலே காண முடிகிறது. பல்வேறு திருமண முறைகள் தோன்றியதையும் காண முடிகிறது. இந்நாட்டில் நிறைய மொழிமாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. தூய தமிழ், தூய மலையாளம்- இவற்றினிடையேயுள்ள வெவ்வேறு மாறுதல் நிலைகளைக் கன்னியாகுமரி முதல் பரவூர் (Paravur) வரை செல்லும் ஒருவரின் பழக்கப்பட்ட காதுகள் நன்கறியும். சமயம், பழக்க வழக்கம், பண்பாடு ஆகியவற்றில் ஏராளமான மாறுபாடுகள் காணப்படுகின்றன.

பிற இடங்களில் நெடுங்காலத்திற்கு முன்னர் அழிந்த பொருள்கள் வியக்கத்தக்கவகையில் இங்கே இன்னும் இருப்பதற்கு அன்றாட, தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்க்கையிலிருந்து முடிவற்ற விவரங்களைத் தரலாம். மானிடவியலில் திருவிதாங்கூர் சேதமடையாத எலும்புப் படிவங்கள் கொண்டதாகச் சிறந்ததோர் பங்கு வகிக்கிறது

உள்நாட்டுப் புரட்சிகள் சமூக நடைமுறைகளை மாற்றவில்லை. நாட்டிற்கு வெளியில் ஏற்பட்ட மாற்றங்கள், இந்நாட்டை வந்து அடையவில்லை.

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை, 1894-இல் திருவிதாங்கூர் வெளியிட்ட பஞ்சாங்கத்தை ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தியுள்ளார். அந்த அரசு பஞ்சாங்கத்தில் முப்பத்தைந்து மன்னர்களின் பெயர்கள் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளனவே தவிர, துல்லியமான விவரங்கள் இல்லை.

உவாநாடு, வேணாடு, என்பவை, திருவிதாங்கூரைச் சுட்டுகின்றன.

மூத்த ராஜா அல்லது மூத்த தம்பிரான் அரசு குடும்பத்தில் உள்ள வயதில் மூத்தவரைக் குறிப்பதாகும்.

கல்வி பரவுவதால், தொன்மையான, பாரம்பரிய நம்பிக்கைகள், முறைகள், பழக்க வழக்கங்கள், மாறுபடுகின்றன. எனவே இனியும் நம் நாட்டின் வரலாற்றைச் சரியாக எழுதவில்லையென்றால் தொன்மை யான சான்றுகள் அனைத்தும் அழிந்துவிடக் கூடும் என ஆதங்கப் படுகிறார் ஆசிரியர்.

பிற நோக்கில் மாற்றங்கள் எவ்வளவு தேவையானவையாயினும் தொல்பொருள் ஆய்வாளருக்கு அவை மயக்கத்தையே தரும்.

சிலப்பதிகாரத் தலைவியைப் பெருமைப்படுத்த நடத்திய கிராமப்புற விருந்தான 'ஊருட்டு' நடத்துவதைவிட அம்மை வராமல் தடுக்கும் ஊசியைப் புறக்கணிப்பதே விரும்பத்தக்கது. பயிற்சிக்காக நடத்தப்பட்ட போலிப் போரான 'படையணி' சமாதானத்தை விரும்பும் தற்காலத்திற்குத் தேவையில்லை. அவை அழிந்தது நல்லது எனினும் வரலாற்று அறிஞர்கள் அதற்கு இணையான நல்ல, தெளிவான ஆதாரங்களைக் குறிப்பிட்ட பகுதியின் வரலாற்றிற்காக வீணாகத் தேடுவர்.

(இங்கு ஊராட்டு என்று குறிப்பிடும் போது, மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை, உ.வே.சா. அவர்களின் சிலப்பதிகாரப் பதிப்பைக் குறிப்பிடுகின்றார். அப்பதிப்பு 1892 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. நூல் வெளிவந்ததும், அதை ஆர்வத்துடன் வாங்கிப் படித்து இந்த வரலாற்று ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தியுள்ளார் என்பது முதல் அத்தியாய ஆய்விலிருந்து தெளிவாகிறது)

தென்னிந்திய வரலாற்றுணர்வைக் கூர்ந்து நோக்கும்போது, தமிழ் இலக்கியத்தில்தான் இவ்வுணர்வு சற்று மிகையாக உள்ளது. ஏனைய திராவிட இலக்கியங்களின் பங்கு மிகக் குறைவாகக் காணப்படுவதால், கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றின் பங்கு குறிப்பிடத் தகுந்த இடத்தைப் பெற்றிருப்பதை அறிய முடிகிறது.

நான்கு மற்றும் ஐந்தாம் மலபார் நூற்றாண்டுகளில் திருவிதாங்கூர் மன்னர்கள் நிலையை நோக்குவோம்.

கி. பி. 1335-ஆம் ஆண்டு பற்றிய அரசின் மன்னர்களின் பட்டியல் வரன்முறைப்படுத்தப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் எழுந்ததன்று. ஆதாரங்கள் இல்லாததால், வரன்முறைப்படுத்தப்படாத நிலையில் மலபாரின் முதல் ஐந்து நூற்றாண்டுகள் உள்ளன. முதல் நூற்றாண்டு களைப் பற்றிய சான்றுகள் கிடைக்காமையால் நான்கு மற்றும் ஐந்து மலபார் நூற்றாண்டுகளை ஆய்வின் பாடுபொருளாகச் சுந்தரம்பிள்ளை வரையறை செய்துள்ளார்.

பதினைந்து கல்வெட்டாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு மலபாரின் நான்கு, ஐந்து நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஒன்பது மன்னர்கள் பற்றி இங்குக் கூறுகிறார்.

வீரகேரள வர்மா (301 - 319)
வீரரவிவர்மா (336 - 342)
வீரஉதயமார்த்தாண்டவர்மா (348)
ஆதித்யராம வர்மா (365)
வீரராமவர்மா (371)
வீரராமன் கேரள வர்மா (384 - 389)
வீரரவி கேரள வர்மன் (410)
வீரபத்மநாப மார்த்தாண்ட வர்மா (427)
இரண்டாம் உதய மார்த்தாண்ட வர்மா
(அல்லது) வீரபாண்டிய தேவா (491)

என்றவாறுள்ள ஒன்பது பேர்களே அந்த மன்னர்கள்.

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் ஆய்வு முயற்சிகளை, வழிகாட்டியாகக் கொண்டு எழுந்ததே திருவிதாங்கூரின் தொல் பொருளியல்துறை ஆய்வாகும் என்பதை முன்னரே கண்டோம். குறைந்த ஆதாரங்களின் அடிப்படையில் சுந்தரம்பிள்ளை வரையறுத்த பண்டைத் திருவிதாங்கூரின் மன்னர் பட்டியலும், முழுமையான இத்துறையின் ஆய்வு முடிவுகளும் சற்றேறத்தாழ ஒன்றாக உள்ளன.

தொல்பொருளியல்துறை இக்காலத்தில் பத்து மன்னர்கள் வாழ்ந்தனர் எனத் தெரிவிக்கிறது. வீரகேரள வர்மா (301 - 319), வீரரவிவர்மா (336 - 342) எனும் இம்மன்னர்களுக்கிடையேயுள்ள காலத்தில் கோதை கேரளவர்மன் (320 - 326) என்பவரும், வீரபத்மநாப மார்த்தாண்ட வர்மா (427), உதய மார்த்தாண்டவர்மா எனும் மன்னர்களுக்கிடையில் இரவிவர்மன் குலசேகரன் (474) என்பவனும் ஆட்சிபுரிந்தனர் என்று தொல்பொருளியல்துறை ஆய்வுகள் கூறுகின்றன.

427-ஆம் மலபார் ஆண்டின் மன்னன் வீரபத்மநாப மார்த்தாண்ட வர்மா என சுந்தரம்பிள்ளையும், இரவிஉதயமார்த்தாண்ட வர்ம திருவடியெனத் தொல்பொருள் ஆய்வுத் துறையின்ரும் மாறுபட மொழிகின்றனர். வீர உதய மார்த்தாண்ட வர்மா (348), வீரராம வர்மா (371) எனும் மன்னர்களுக்கிடைப்பட்ட காலத்தின் மன்னரான, ஆதித்யராம வர்மா பற்றித் தொல்பொருளியல் துறையினர் எதுவும் குறிப்பிடவில்லை.

இனி, ஆறாம் மலபார் நூற்றாண்டின் மன்னர்களைப் பற்றி நோக்கும்போது, அரச குலத்துடன் தொடர்புடைய நான்கு

கல்வெடடுக்கள் பற்றி சுந்தரம்பிள்ளை விளக்குகிறார். திருவனந்தபுரத்திலிருந்து கிடைத்த ஆதித்யவர்மா பற்றிய இரு கல்வெட்டுகளும், பத்மநாபபுரத்திலிருந்து கிடைத்த வீரகேரள மார்த்தாண்ட வர்மா பற்றிய கல்வெட்டுகளும் இதற்குத் துணை நிற்கின்றன.

அடுத்து, பல திறப்பட்ட திருவிதாங்கூர் கல்வெட்டுகள் பற்றி அறியும்போது, திருவிதாங்கூர் பற்றிய தம் ஆய்வின் பொருட்டுத் திரட்டப்பட்ட கல்வெட்டுக்களே பலதிறப்பட்ட கல்வெட்டுகள் என்று இங்கு அலசப்படுகின்றன.

கோயில் மக்கள் பற்றிய செய்திகள் இதிலடங்கும். மலபார் ஆண்டாகிய கொல்லம் ஆண்டு பற்றி ஆராய்ச்சி இதில் குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். கொல்லம் என்னும் சொல்லாட்சி, இவ்வாண்டின் தொடக்கம் பற்றிய செய்திகள் இங்கு இன்றியமையாமை பெறுகின்றன. கொல்லம் எனும் சொல்லை 'கொல் கை' எனப் பிரித்து, 'கொலை செய்யும் படைகளை உடைய இடம்' எனச் சில அறிஞர் குறிப்பிடுவர். ஆனால் 'கொல்' என்னும் சொல் பல பொருள் களையுடையதாய்த் தோன்றுகிறது. கொல்லம் எனும் சொல்லினைக் கொல்லம், கொற்கை முதலான சொல்லாட்சிகளின் அடிப்படையில் நோக்கினால் ஆற்றல், பகட்டு அல்லது அரசன் இருப்பிடம் என்பதன் தொடர்புடையதாகவே பொருள் தருகின்றது, என்று கூறும் சுந்தரம்பிள்ளை மேற்குறிப்பிட்ட அறிஞர் கருத்தினை மறுக்கின்றார்.

கொல்லம் ஆண்டு மலபார், திருவிதாங்கூர் பகுதிகளில் வெவ்வேறு கால அளவுகளில் தொடங்குகின்றன. கொல்லம் ஆண்டின் இந்நிலைப்பாடு பற்றியும் சுந்தரம்பிள்ளை ஆராய்ந்துள்ளார். கொல்லம் ஆண்டு பரசுராமனின் சுழற்சியே என்பது பிரின்சப்பின் கருத்து. இது ஒரு சுழற்சியன்று என, இத்தவறைத் திருத்தும் பர்னல் (Burnel)824 செப்டம்பரில் இது தொடங்குவதால் தென் தமிழ்நாடு, திருவிதாங்கூர்ப் பகுதிகளில் மட்டும் வழக்கில் உள்ளதாகப் பிழையான கருத்தொன்றையும் கூறுகிறார். ஆனால் இந்த ஆண்டு, திருநெல்வேலியிலும் வழக்கில் உள்ளது. அப்பகுதியில் இந்த ஆண்டு ஆகஸ்ட் திங்களிலேயே தொடங்குகிறது. மலபாரில் இவ்வாண்டு வழக்கில் உள்ள நிலைபற்றி பர்னல் எதுவும் கூறவில்லை. சிவன் கோயில் தோற்றத்துடனும், கேரளாவின் இறுதிப் பெருமாளின் மறைவுடனும், சங்கரருடன் வேறு சில அறிஞர்கள் இந்த ஆண்டினைத் தொடர்புபடுத்துவர். ஆயின், ஓராண்டு தொடங்கும் அளவு சிறப்புடைய கோயில் மலபாரில் இருந்ததாகக் குறிப்பெதுவும் இல்லை. மதம் மாறிய பெருமான், அதனால் துண்டுபட்ட மலபார் என வீழ்ந்த காலத்தில் புதிய காலம் தொடங்கப்பட இயலாது; சங்கரர் தொடர்புபற்றிய செய்திகள்,

ஆதாரங்கள் எதுவும் இல்லையென சுந்தரம்பிள்ளை இக்கருத்துக்களை மறுக்கிறார்.

இந்தியாவில் வழக்கத்திலிருந்த சப்தர்ஷீயுடன் தொடர்புடையதே இக்கொல்லம் ஆண்டு; இதனை வழக்கில் கொண்டு வருகையில் வால்நட்சத்திரம் தோன்றியது. அக்காலத்தில் வானவியலில் தோன்றிய மாறுதல்களே இக்காலத் தொடக்கத்தைப் பற்றிய மாறுபட்ட காலத்திற்குக் காரணமென சுந்தரம்பிள்ளை கொல்லம் ஆண்டு பற்றி வரையறுக்கின்றார்.

முதன் முதலில் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு சுந்தரம்பிள்ளை செய்துள்ள இவ்வாராய்ச்சிகள் அவருடைய அயர்வு சோர்வு அற்ற உழைப்பினை, முனைப்பினைக் காட்ட வல்லனவாகும். சான்றுகளை வரன்முறைப்படுத்தி ஆராய்தல்; தகவல்களின் அடிப்படையினை, இயல்பினை அவை உணர்த்தும்.

வரலாற்றின் உண்மை நிலையினைப் படிநிலைகளில் ஆய்விற்குட்படுத்துதல் தகவல்களை நுண்மையாய், அகலமாய் ஆய்விற்குட்படுத்தி முடிவினை வெளிக்கொணர்தல்; பிறர் கருத்துக்களின் தரத்தினையும், இயல்பையும் ஆய்விற்கு உட்படுத்தி தன் ஆய்வின் பொருளுக்கு வளம் சேர்த்தல், முரண்படும் கருத்துக்களின் முரண்மை நிலையினைப் பட்டியலிட்டு விளக்கல்; தொடர்புடைய சான்றுகளைத் தொகுத்தும், வகுத்தும் காட்டித் தன் கருத்துக்கு வலிவூட்டல்; சான்றுகள் கிடைக்கப் பெறாத நிலையில் கிடைத்துள்ள ஆதாரங்களின் வழி வெற்றிடத்தை யூகிக்கும் ஆய்வின் யூகத்திறன் என்னும் நிலைகளில் சுந்தரம்பிள்ளையின் ஆய்வுக் கூறுகள் வெளிப்படுகின்றன எனலாம்.

இனி, பண்டைய திருவிதாங்கூர் மன்னர் வரலாற்றில் பாடு பொருளாக விளங்கிய தொல்லியலின் ஒரு கூறாகிய கல்வெட்டுகளே யாகும். மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை கடுமையான காலப் பற்றாக்குறைகளுக்கிடையில் அரிதின் முயன்று தாமே தேடிக் கண்டுபிடித்துப் படியெடுத்த கல்வெட்டுகள் சிலவற்றை இங்குக் காண்பது பொருத்தமானதாகும்.

முதற்கண் வட்டெழுத்தில் அமைந்துள்ள ஒரு கல்வெட்டைக் காண்போம்.

ஒழுகிணசேரிக்கடுத்த இராஜேந்திரசோழீசுவரர் கோயில் மேற்குச் சுவரிலுள்ள சிலாலிகிதம்:

*"வ. த. கொல்லம் தோன்றி ஙாக மாண்டினெ திராமாண்டு சிங்கநாயிற்று வேணாடு வாழ்ந்தருளுகின்றஸ்ரீ வீர கேரள*

*பன்மர்க்கு அமைஞ்ச அதிகாரிகள் வருக்கைப்பள்ளித்தனஞ் செயற்கண்டனும் மண்ணூர் வாழ்கின்ற ஸ்ரீ, சக்கிராயுதனா கின்ற ஸ்ரீ தொங்கப்பல்ல ஸ்ரீ, சையனும் எழுத்துச் சிறுவரிபண் கண்ணங்கோவிந்தனும் உள்ளிருப்பு குன்றின் மேல் விக்கிரமன்குன்றனான கேரள, சிங்கப் பல்லவரையனும், காரியமாக கோட்டாறான மும்முடி சோழநல்லூர் இராஜேந்தர சோழஈவரமுடைய மஹா தேவர்க்கு மந்திர போனகம் அமுதுசெய்தருள் நித்தம் அரிசிநாழியும் கறியமுது நெய்யமுதுந் தயிரமுது, அடைக்காயமுது இலையமுதுக்கும் திருநொந்தாவிளக்கு ஒன்றுக்கும் மும் முடிசோழ நல்லூறப்பால் வடசேரியில் இத்தேவர் தேவதானம் கொள்ளுங்கடமை நெல்லுங்காசும் துங் கொண்டு இத்தேவற்கு இந்நிமந்தம் சந்திராதித்தவற் செல்வதாகப் பெலிக் கல்லினில் நீர்வார்த்து கல் வெட்டுவித்துக்குடுத்தோம்.*

No. 2/47 Vatteluttu (பக்கம் 116-117)

இனி, புரவரவில் ஆழ்வார் கோயில் தென்புறச் சுவரில் அமைந்த ஒரு கல்வெட்டு. இது கடுந்தமிழ்நடை(Old Tamil Style)யில் உள்ளது நோக்கத்தக்கது.

*''வதஸ்ரீ, கொல்லந்தோன்றி ங ஙயகா மாண்டைக் கெதிராமாண்டு இடபநாயிறு சா சென்ற சனிமகயி ரத்து நாள் செய்ததான ஓலைக்கரணமாவது வேணாடு வாழ்ந்தருளுகின்ற ஸ்ரீ, வீர இரவி வர்ம்ம திரு வடிக்கமைந்த அதிகாரர் புரவரச் சதுவெஷி மங்கலத்துப் புரவர்விலாழ்வார்க்கு நித்தல் நிமந்தத்தினும் ஒரு திருநந்தா விளக்கினும் திருவிடையாட்டமாக ஆசந்திரதாரஞ் செல்வதாகவிட்ட (நிலம்) தாழைக் குடிச்சாரார் காலாலும் சாரவயற்குளம் செய்யா நேரியாலும் நீர் பாஞ்சு நெய்விளைவது உன்னந் திட்டை (நிலம்காலலே பிரண்டுமா முந்திரிகை)யும் புதுவூரார் மூலையில் (நிலம் மூன்றுமா)ம் (ஆக) பத்து மா முந்திரிகையும் இக்காலம் முதல் ஊரோடொத்த கடமைமாத்தால், இவ்வாழ்வார் கன்மின்கள் தரவெழுதிக்குடுத்து புரவரியானாலே ஸ்ரீ, பண்டார அறை வாசலிலே அளப்பித்துக்கொண்டு இச்சிலவு முட்டாமல் செல்வதாகவும், இ(ந்நில)த்துக்கு நான்கெல்லையிலுந் திருவாழிக் கல்லு இம் மார்க்கம் கற்பிச்சமைக்கு கல்லிலுஞ் செம்பிலும் எழுத்து வெட்டிவித்து இச்சிலவு முட்டாமல் செல்வதாக*

*கற்பிச்சமைக்கு இவை புல்லானையய்யன் எழுத்து சிங்கன் ரங்கன் எழுத்து நாராயணன் சங்கரன் எழுத்து கோதைதேவன் எழுத்து திருவெழுத்து உ*

No. 4/44 Old Tamil (பக்கம் 118 & 119)

அடுத்து, திருவாட்டாற்று ஆதிகேசவப் பெருமாள் கோயில் தென்புறச் சுவரில் அமைந்த ஓர் கல்வெட்டைக் காணலாம். பழைய மலையாளத்தில் அமைந்த கல்வெட்டு

*"கொல்லம் ஙா ச யஅ டாமாண்டை கர்க்கடகத்தில் வியாழந்நின்ற மீனஞாயிறு(ய)ச் சென்றவியாழம் அனுழம் இந்நாளால் வேணாட்டு கோளிடை கூறுவாண்ணருகின்ற ஸ்ரீவீர உதைய மார்த்தாண்ட வர்ம திருவடி திருவட்டாற்று பள்ளி கொண்டருளின்ற பெருமாள்கு நியதிப்படி முட்டாச்சிலவரி ஆதிச்சனுதைய்யன்னனுந் தம்பிமாற்கும்வுள்ள நிலம் செரியகறைக் கூட்டிய பெறை(நில)ம்வும் மாத்தறை நில(ம்)கூட னால்(நிலம்) மேலும்வுள்ள மூன்று சலாகையும் அழகச்சு ஙயதின்னும் நேலியால் கோதைநல்லூர் கீழ்ச்சேரித் திருக்கோயில்க்கல்கொண்டு வந்து*

*பூவழி*

No. 7/86 Old Malayalam (பக்கம் 121)

மேற்கூறியவை போன்ற கல்வெட்டுக்கள் இருக்குமிடங்களைக் கண்டுபிடித்து, அவற்றைப்படியெடுத்து அவற்றைப் படித்து - எழுத்துகள் விடுபட்டிருக்கும் சிலவற்றில் சொற்களே விடுபட்டிருக்கும், இருப்பினும் அவற்றைக் கொண்டுகூட்டி, ஊகித்துப் பொருள்கண்டு படித்து, சான்றுகளைத் திரட்டி ஒரு கருத்திற்குவர வேண்டும்.

பிறகு மாற்றுக் கருத்துக்கொண்ட வரலாற்றறிஞர்களின் கருத்துக்கு ஏற்ப வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டே மறுப்புரை கூறிவிட்டுப் பின்னரே நம் கருத்தை நிலைநாட்ட வேண்டும். இந்தக் கல்வெட்டாய்விலும், வேறு பல கால ஆராய்ச்சியிலும் சுந்தரம்பிள்ளை, தான் நிறுவிய கருத்தை, அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என எவ்விடத்தும் குறிப்பிடவில்லை

இது எனக்குப்பட்ட முடிவு. இதை மற்றவர்கள் மேலும் ஆராய்ந்தால் அப்போது புது முடிவுகளும் வரக்கூடும். அதை அப்போது இருப்பவர்கள் ஆராய்ந்து பார்க்கட்டும் என்று திறந்த மனத்தோடு குறிப்பிட்டுச் சென்றுள்ளார். இதுவே ஓர் அறிவியல் முறை ஆய்வாளருக்கு இருக்கும் பண்பு; தெளிவு ஆகும். அது அவரிடம் இருந்தது.

ஆராய்ச்சி என்பது ஒரு தொடர் ஓட்டம் (Relay Race)என்பது இதிலிருந்து புலனாகிறதன்றோ?

முடிவாக, நாம் பார்த்தோமெனில், அந்தாதி முறையில் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை கால ஆராய்ச்சியை நிகழ்த்தி யுள்ளார் என்பதற்குப்பத்துப்பாட்டு முதலிய ஆராய்ச்சிகள் சான்றுகளாகும்.

திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி எனும் மூன்று பத்துப்பாட்டு நூல்களின் அடிப்படையில் அவற்றின் விளக்கம், விமர்சனங்கள் எனும் நிலையில் இக்கட்டுரை அமைந்திருந்தாலும், கால ஆராய்ச்சியே இதன் உட்பொருளாம்.

பத்துப்பாட்டின் ஒரு தலைவனாகிய கரிகாலன் காலம் அறியும் முயற்சியில் எழுந்த இவ்வாய்வு நக்கீரர், சம்பந்தர், நம்பியாண்டார் நம்பி என்றவாறு விரிந்து செல்கிறது

இதன் விரிவான ஆய்வுகளாகவே தமிழ் இலக்கிய வரலாற்றின் மைல் கல்லாய் திருஞான சம்பந்தர் காலம், நம்பியாண்டார் நம்பி காலம் என்னும் ஆராய்ச்சிகள் அமைந்துள்ளன.

ஹாப்ஸ், பெந்தம் பற்றிய மேலை மெய்ப்பொருளியலார் பற்றிய கட்டுரைகளும், அறிவு நிலையில் நூல்களைப் பாகுபாடு செய்யும் 'நூற்றொகை விளக்கமும்' அமைந்துள்ளன.

சுந்தரம்பிள்ளையின் வரலாற்றாய்வின் பிழிவாக அமைந்திருப்பது திருவிதாங்கூர் மன்னர் வரலாற்றாராய்ச்சி எனின் அது முழுமையான உண்மையாகும்.

*வையம் புகழும் திருவஞ்சி*
*வளநாட தனை முடிசூடிச்*
*செய்யமுறை செய்தர சாண்ட*
*சேர மன்னர் சரிதமெலாம்*
*ஐயம் இன்றிச் சிலையிலெழுத்து*
*ஆய்ந்து சொன்ன பேரறிஞன்*
*துய்ய சீலன் சுந்தரன்பேர்*
*சொல்லி நாளும் போற்றுவமே!*

என்ற சுந்தரனார் பற்றிய கவிமணி தேசிக விநாயகத்தின் கவிப்பெருமை போற்றற்குரியதாகும்.

# சைவப் பிரகாச சபை

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை தனி ஒரு மனிதரல்லர் அவர் ஓர் இயக்கம். அவர் பேராசிரியர். பேராசிரியர் மட்டுமல்லர்; அவர் ஒரு படைப்பாளி. அவர் படைப்பாளி மட்டும் அல்லர் அவர் ஒரு நிர்வாகி. அவர் நிர்வாகி மட்டுமல்லர்; அவர் ஓர் ஆராய்ச்சியாளர்; அவர் ஆராய்ச்சியாளர் மட்டுமல்லர்; அவர் ஒரு இரக்கமுள்ள நன்கொடையாளர்(Philanthropist)

அவர் இரக்கமுள்ள நன்கொடையாளர் மட்டுமல்லர்; அவர் ஒரு *பத்திரிக்கையாளர் (பீப்பிள்ஸ் ஒப்பினியன், People's Opinion)*என்ற ஆங்கிலப் பத்திரிக்கையை நடத்தியவர்) அவர் ஒரு பத்திரிக்கையாளர் மட்டுமல்லர்; கோடகநல்லூர் சுந்தரசுவாமிகள், சுவாமி விவேகானந்தர் போன்ற ஞானாசிரியர் குழாமைச் சேர்ந்தவர் அவர் ஒரு ஞானாசிரியர் மட்டுமல்லர்; தன்னிடம் துலங்கும் சிவதத்துவச் சுடரொளிமூலம் *அனைவரையும் தம்பால் ஈர்த்தவர்*

இத்தகையை அரும்பெரும் ஆற்றல் நிறைந்தவர், தன்னிடமிருந்த பொருட்செல்வம், அருட்செல்வம், செல்வாக்கு ஆகியவற்றால் என்றும் பயனோடு நின்று நிலைக்கும் வகையில் ஒரு சீர்சால் நிறுவனத்தை நிறுவியவர். அந்த நிறுவனத்தின் பெயர்தான் என்ன? தமிழும் சைவமும் தழைத்தோங்க கேரள மாநிலத் தலைநகராம் திருவனந்தபுரத்தில் நின்று நிலவுகின்ற சைவப் பிரகாச சபைதான் அது! காந்தம்போன்ற சுந்தரம்பிள்ளை, இரும்பனைய பல புரவலர்களை, நடுநாயகமாக நின்று ஈர்த்து அந்த நிறுவனத்தை உருவாக்கினார்

அவர் பூதவுடலால் வாழ்ந்தபோதும், 1897, ஏப்ரல் 26ஆம் நாள், 42வது நல்ல நடுப்பருவத்தில் அப்பூதவுடலை நீத்துப் புகழுடம்பு எய்திய பின்னும், சைவப் பிரகாச சபை எனில் சுந்தரம்பிள்ளை நினைவுக்கு வருவார்.சுந்தரம்பிள்ளை என்றால் சைவப் பிரகாச சபை நினைவுக்கு வரும்.

அத்தகைய பெருஞ்சிறப்பிற்குரிய சைவப் பிரகாச சபையின் தோற்றம், வளர்ச்சி, தொடரும் தொண்டுகள், தொடர்பு கொண்ட சான்றோர்கள் ஆகிய அனைத்தையும் கொண்டிலங்குமாறு குறிப்பிடுவது இங்கு மிகப் பொருத்தமான ஒன்றாகும்.

தமிழின வரலாற்றில் புகழ்பூத்து விளங்கிய சேர நாடே, பின் கேரள மாநிலமாயிற்று. கேரள நாகரிகம் தமிழ் தழுவிய நாகரிகமேயாகும். திருவஞ்சைக் களத்தைத் தலைமையிடமாகக் கொண்ட சேரமான் பெருமாள் நாயனார் ஆண்டார். அத்தகு புண்ணிய பூமியில் தோற்றுவிக்கப்பட்டதுதான் சைவப்பிரகாச சபை.

சைவநெறி தமிழினத்தின் தலைமையான நெறி, இணையற்ற இன்ப நெறி, சைவர்கள் இறைவனைச் சிவமெனவும், சோதி எனவும் போற்றித் துதிப்பர். ஞாலம் உய்ய, சைவநன்னெறியின் சீலம் உய்ய, சமயக்குரவர்கள் தோன்றினார்கள். சைவம் வளர, தமிழ் வளர, தருமம் ஓங்கித்தழைக்க, திருவனந்தபுரத்தில் 1885இல் தோன்றியது இச்சபை.

கேரளமாய், இன்று விளங்கும் மாநிலத்தின் ஒரு பகுதியே முன்னைத் திருவிதாங்கூர் சமஸ்தானம் அதன் தலைநகராக விளங்கிய திருவனந்தபுரம் தொடர்ந்து கேரளத்தின் கோநகராகத் திகழ்கிறது. இப்பெருநகரில் வழிவழியாக வாழ்ந்துவரும் தமிழ்ப்பெருங் குடியினரின் தாய்மொழியும், அவர் கொண்டொழுகும் சைவத் திருநெறியும், கலை கலாச்சாரத்துறைகளும் நிலைத்து நிற்கவும் வளர்ந் தோங்கவும் துணைநின்று தொண்டாற்றும் ஒரே நிறுவனம் திருவனந்த புரம் சைவப்பிரகாசசபை எனில் மிகையல்ல.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இப்பெருநகரில் வாழ்ந்த சைவ நெறிவந்த செந்தமிழ்ச் சான்றோரின் எண்ணத்தில் எழுந்து புரவலர் பெருமக்கள் பலர் தம் துணையால் வண்ணம் பெற்று வளர்ந்தோங்கி நிற்கும் இச்சபையின் தொடக்கநாள் கி பி 1885 (கொல்லம் ஆண்டு 1060) சித்திரைத் திங்கள் முதல் நாள் - தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்க நாள் என்பது குறிப்பிடத் தக்கது.

திருவிதாங்கூரை ஆட்சிபுரிந்த மன்னர் பரம்பரையினரின் நல்லாசியும் ஆதரவும் இச்சபையின் தொடக்க காலம் முதல் வளர்ச்சிக்குப் பலவகைகளிலும் பயனூட்டி நின்றமை எண்ணிப் போற்றத்தக்கது. தமிழார்வம் மிக்க வள்ளல் தன்மை மிக்கவர்கள் துணையுடன் தோன்றிய நாளிலிருந்து ஓராண்டிற்குள் சபைக்குரிய மண்டபம் ஒன்று நிறுவதற்கான மனை வாங்கப் பெற்று, அம் மனையிலேயே மண்டபத் திருப்பணியும் தொடங்கப் பெற்றது. 1886-ஆம் ஆண்டு தைத் திங்களில் மண்டபத் திறப்பு விழா நிகழ்ச்சியும் இனிதே நிகழ்ந்தது.

அப்போது நிறுவனப்பட்டுத் திறக்கப்பட்ட கல்வெட்டு சிறப்பிடம் பெறுகிறது. அந்தக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருப்பன, மேல் இடப்புறம் சைவசமயக்குரவர்கள் நால்வரும் நின்றிருக்க, வலப்புறம் நந்தியிருக்க நடுநாயகமாகச் சிவலிங்கம் வீற்றிருக்க அதற்கு கீழே

கீழ்க்காணும் வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

*" உ ஓம் பரசிவமயம் திருவனந்தபுரம் "*
*சைவப் பிரகாச சபை*
*கலியப்தம் - ச சா அ சா க்குக் கொல்லமாண்டு -சOசாOல்*
*நிகழாநின்ற பார்த்திப வருஷம் சித்திரை விஷுபுண்ணிய*
*காலத்தன னுஸ்தாபனையாகி திருவருள் முன்னிலையில்*
*பிரசங்கம், புராண படனம் நூலாராய்ச்சி இவைகள்*
*நடத்தும் பொருட்டு மேற்படி சபையாரால் -கOசாக*
*மாண்டு மகா மாசத்தில் இந்தக் கட்டிடம்*
*நிர்மாணஞ் செய்யப்பெற்றது."*

இச்சபையின் நிறுவனர்களாக, விளங்கிய பெருமக்களில், 'வலியமே லெழுத்து (மாநிலக் கணக்காய்வுத் தலைவர்) திரவியம்பிள்ளை தலைவராகவும், பேராசிரியர் மனோன்மணீயம்- பி.சுந்தரம் பிள்ளையைத் துணைத் தலைவராகவும் வழக்கறிஞர் சுவாமிநாத பிள்ளையைச் செயலாளராகவும் கொண்ட நிருவாகக் குழுவே சபையின் முதல் நிருவாகக் குழுவாகச் செயல்படத்தொடங்கியது.

இச்சபையின் நிறுவனர்களால் உருவாக்கப்பெற்ற சபையின் நோக்கங்கள்.-

1. திருவருள் முன்னிலையில் பிரசங்கம், புராணபடனம், நூலாராய்ச்சி ஆகியன செய்தல்.

2 தமிழ் மொழி, கலை பண்பாடு ஆகியவற்றைப் போற்றி வளர்த்தல்.

3 தமிழ்ச் சமுதாயப் பழக்க வழக்கங்களைச் சீர்திருத்துதல்.

4. தமிழ் மக்களின் பொருளாதார நிலையை மேன்மையுறச் செய்தல்.

5. தமிழ்ச் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

6.தமிழ் மக்களின் உயர்தரக் கல்வி, தொழிற் கல்வி ஆகியவற்றிற்குரிய வசதிகள் அளித்தல்.

இத்தகு சீரிய நோக்கங்களுடன் சபையின் செயல்பாடுகள் தோன்றிய காலந்தொட்டே நிகழத் தொடங்கின. தமிழ் வரலாற்றில் தமக்கெனத் தனியிடம் கண்ட பெருமக்களான பேராசிரியர் மனோன்மணீயம் பெ.சுந்தரம்பிள்ளை, ஆராய்ச்சிப் பேரறிஞர் கே. என்.சிவராஜப்பிள்ளை, ஆராய்ச்சி வல்லுநர் பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை ஆகியோர் இச்சபையின் நிர்வாகிகளாகவும், உறுப்பினர்களாகவும் விளங்கியதோடு நாடோறும் இச்சபை மண்டபத்தில் கூடிச் சமய இலக்கிய நூற்கள் பற்றிப் பல்வேறு ஆய்வு களையும் புரிந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கவரலாறாகும்.

இப்பெரியார்கள் பிற்காலத்தில் தாங்கள் குறிப்பிட்டிருக்கும் செய்திகளில் தங்கள் ஆராய்ச்சித்துறை வளர்ச்சிக்குச் சைவப் பிரகாச சபையில் நடைபெற்ற கலந்துரையாடல்கள் மிகவும் துணை நின்றன எனக் கூறியிருப்பது இச் சபையின் அடிப்படை நோக்கங்களின் வெற்றிப்பாதையைச் சுட்டுகிறது.

சபை மண்டபம் கட்டப் பட்ட நாளிலிருந்து மண்டபத்தினுள் அமைக்கப்பட்டிருக்கும் நடராஜர் சந்நிதியில் வழிபாடுகள் முறையே நடைபெற்று வருகின்றன. சமயத் தொடர்பான சிறப்பு நாட்கள், விழாக்கள் முறையே காலாகாலங்களில் தமிழ் மக்களின் நல்லாதரவுடன் கொண்டாடப் பெற்று வருகின்றன

பல்வேறு துறைகளில் மேம்பட்டு விளங்கிய தமிழ்ப் பெரியார்களும், அரசியல் தலைவர்களும் அறிஞர் பெருமக்களும் இச்சபைக்கு வருகைதந்து பெருமை சேர்த்த வரலாறு குறிப்பிடத் தக்கதாகும்.

திருவிதாங்கூர் பொது நிறுவனங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் 1929ஆம் ஆண்டு சைவப் பிரகாச சபை பதிவு செய்யப்பெற்றது. அக்காலத்தில் சபையின் நிர்வாகப் பொறுப்பை இசைச் செல்வர் தி.இலக்குமணப் பிள்ளை தலைவராகவும், வி. சுப்பிரமணியப் பிள்ளை செயலாளராகவும், ஏ. விஸ்வலிங்கம் பிள்ளை பொருளாளராகவும் இருந்து நடத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

சபையின் ஐம்பத்தைந்தாம் ஆண்டு நிறைவு பெற்ற காலை 1940ஆம் ஆண்டு, புதிய நிருவாகக் குழு பதவி ஏற்றது. அக்குழுவின் தலைவராக, ஓய்வுபெற்ற திவான் பேஷ்கார் ஆர். வைத்தியலிங்கம் பிள்ளை பதவி ஏற்றார். செயலாளராக எஸ். பிறவிப் பெருமாள் பிள்ளையும், பொருளாளராக கே. விஸ்வநாத பிள்ளையும் பொறுப்பேற்றனர். 1954ஆம் ஆண்டு அரசியலறிஞர் பி. எஸ். நடராஜ பிள்ளை (பெ. சுந்தரம்பிள்ளையின் புதல்வர்) சபையின், துணைத் தலைவராக (தந்தையைப் போன்றே) பொறுப்பேற்றார்.

இச்சபையின் ஆதரவுடன் 1955ஆம் ஆண்டு முதல் 1962ஆம் வரை திருவாவடுதுறை ஆதீனத்தார் திருவனந்தபுரத்தில் சைவ சித்தாந்த மாநாடுகளை சமய - இலக்கிய - கலை நிகழ்ச்சி பலவற்றுடன் ஆண்டுதோறும் சிறப்புற நடத்தி வந்தனர். 1957ஆம் ஆண்டு முதல் மார்கழித் திங்களில் திருப்பாவை, திருவெம்பாவை விழாக்கள் சபையின் சார்பில் நடைபெற்று வந்தன.

இவ்வாறு அவ்வப்போது சபையில் நடைபெறும் விழாக்கள் பற்பல வாயினும் 1952ஆம் ஆண்டு முதல் சபையில் நிகழத் தொடங்கிய கந்த சஷ்டி விழா ஆண்டு தோறும் புதுமையும் பொலிவும்

பெற்றுத் தமிழ்மொழி, சைவத் திருநெறி, கலை ஆகியவற்றின் பெருமைக்குரிய சிறப்பு நிகழ்ச்சிகள் பலவற்றையும் உள்ளடக்கிய பெருவிழாவாக வளர்ந்தோங்கி வருகின்றமை சிறப்புக்குறிப்பிற் குரியதாகும் திருப்பதிகள் நீங்கலாக, முருகன் கோயில் கொண்டிருக்கும் சபைகளில், பிற இடங்களில் நடைபெறும் கந்த சஷ்டி விழாக்களில் திருவனந்தபுரம் சைவப் பிரகாச சபையில் நடைபெறும் சஷ்டி விழாவே முதன்மையும் பெருமையும் உடையது என்னும் வரலாறு படைத்தது இவ்விழா எனில் அது மிகையே அன்று

1960ஆம் ஆண்டு, சபையின் எழுபத்தைந்தாவது ஆண்டு விழா நிகழ்ந்தபோது, சபை மண்டபத்தோடு இணைத்துத் திறந்த வெளியரங்கு ஒன்று அமைக்கப்பட்டு பொருளாதாரப் பேரறிஞர் டாக்டர் ப நடராஜன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. சபையிலிருந்து ''குகாவதார ரகஸ்யம்'', ''பக்தர்பாடிய பாமாலை'' என்னும் பெயரிய நூற்கள் இலவச வெளியீடுகளாக வெளியிடப் பெற்றன.

1961ஆம் ஆண்டு, நவம்பர் திங்களில் சபையின் துணைத் தலைவராக இருந்த அரசியல் அறிஞர் பி. எஸ் நடராஜ பிள்ளையின் திருவுருவப்படம் சபை மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாம்

1961ஆம் ஆண்டு பேராசிரியர் என். சுந்தரம் (பெ. சுந்தரம் பிள்ளையின் பேரன், பி எஸ். நடராஜபிள்ளையின் மகன்) செயலாளராகவும் ஏ. சண்முகசுந்தரம்பிள்ளை இணைச் செயலாள ராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1963ஆம் ஆண்டு எம். ஆர். கிருஷ்ணன் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவ்வாண்டில் நடைபெற்ற கந்த சஷ்டி விழாவின்போது தமிழ்ப் பெரியார்களும், சபை வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்களுமான 'வலிய மேலெழுத்து' (மாநிலக் கணக்காய்வுத் தலைவர்) திரவியம் பிள்ளை, தி. இலக்குமணப் பிள்ளை, எஸ். பிறவிப்பெருமாள் பிள்ளை, டி. எஸ். பத்மனாப பிள்ளை, பி. முத்துகிருஷ்ண பிள்ளை ஆகியோரின் திருவுருவப் படங்கள் சபை மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டன.

1962-ஆம் ஆண்டு முதல் சபை மண்டபத்தில் வார வழிபாட்டுக் கூட்டங்கள் நடைபெற்று வந்தன

1966-ஆம் ஆண்டு நடைபெற்ற சபைப் பொதுக் குழுவில் பழுது அடைந்திருக்கும் சபை மண்டபத்தை அகற்றிவிட்டு, திறந்தவெளி அரங்கையும் இணைத்துப் புதிய கட்டடம் கட்ட வேண்டும் என்னும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அதன்படி யூனியன் வங்கியின் கடனுதவியுடன் கட்டடப் பணிக்கான ஆயத்த வேலைகள்

நடைபெற்றன. 1970-ஆம் ஆண்டு ஜனவரி 19-ஆம் நாள் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில், சபைத் தலைவர் ஆர். வைத்தியலிங்கம் பிள்ளை, சபையின் புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். புதிய கட்டடப் பணிகளை முறைப்படி நிறைவேற்று வதற்காகப் பொறியியல் நிபுணர் எஸ். இராமநாத பிள்ளை, சபையின் பொருளாளரும், பொறி இயல் ஒப்பந்தக்காரருமான பி இரத்தினசுவாமி, சபைச் செயலாளர் எம். ஆர். கிருஷ்ணன் ஆகி யோரைக் கொண்ட மூவர் குழு அமைக்கப் பெற்றது. விரைவிலேயே கட்டடப் பணிகள் நடைபெற்றன.

இன்று எழிலுடன் விளங்கும் மூன்று நிலைக் கட்டடத்தை 1971-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 19-ஆம் நாள் கேரள மாநில ஆளுநராக இருந்த வி. விஸ்வநாதம் திறந்து வைத்தார். மூன்றாவது நிலையில் சபையின் அலுவலகமும், நடராஜர் சந்நிதியும், கலையரங்கமும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

1978-ஆம் ஆண்டு முதல் இலவசத் தமிழ்ப் பயிற்சி வகுப்பு, சபையின் ஆதரவில் தொடங்கப்பெற்றது. இவ்வகுப்பின் மூலம் மலயாளத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர் பலர் தமிழ் கற்கும் வாய்ப்பினைப் பெற்றுப் பயனடைந்தனர் என்பது பெருமகிழ்வு அளிக்கும் தகவலாகும்.

மேலும், சபையின் சார்பில் ஆண்டுதோறும் தொடக்கப் பள்ளி முதல், கல்லூரி ஈறாகப் பயின்றுவரும் மாணவ, மாணவியர்க்கென முறையே பாராயணம், சொற்பொழிவு, இசை ஆகிய போட்டிகள் நடத்தப்பெற்று வெற்றிபெற்றோருக்குத் தனித்தனியே பரிசுகளும் சிறப்புப் பரிசுகளாகக் கல்வி நிறுவனங்களுக்குச் சுழற்கோப்பைகள், கேடயங்கள் வழங்கி வருவதுடன், 1983-ஆம் ஆண்டு முதல் மாநிலத்தில் நடைபெறும் உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வு, பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புக் தேர்வு, இளங்கலை, முதுகலைப் பட்டப்படிப்புத் தேர்வுகள் ஆகியவற்றில் தமிழ்ப் பாடத்தில் முதல் மதிப்பெண் பெறுபவர்க்குப் பரிசு நிதி வழங்கப் பெற்று வருகிறது என்பது தமிழ் கூறு நல்லுலகை இறும்பூதெய்தச் செய்வதாக உள்ளது.

1985-ஆம் ஆண்டு, சபையின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடப் பொதுக்குழு எடுத்த முடிவின்படி, 1985 செப்டம்பர் 20 முதல் 24 வரை ஐந்து நாள் விழாவாக, சைவப் பிரகாச சபையின் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்பட்டது.

நூற்றாண்டு விழாவில், சபையின் சார்பில் கேரளப் பல்கலைக் கழகத்தில் ''பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அறக்கட்டளை'' நிறுவுதற் பொருட்டு ரூபாய் பதினைந்தாயிரம் வழங்கப்பெற்றது. அத்துடன் சபை

நிறுவனர்களான 'வலியமேலெழுத்து' (மாநிலக் கணக்காய்வுத் தலைவர்) மு. திரவியம்பிள்ளை, பேராசிரியர் மனோன்மணியம் பெ. சுந்தரம்பிள்ளை, ஆகியோரின் திருவுருவப் படங்களும், சபையின் வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டவர்களும், தமிழ்ப் பேரறிஞர்களுமான இசைச் செல்வர் தி. இலக்குமணப் பிள்ளை, கவிமணி தேசிக வினாயகம் பிள்ளை, ஆராய்ச்சிப் பேரறிஞர் கே. என். சிவராஜப் பிள்ளை, பேராசிரியர் எஸ் வையாபுரிப் பிள்ளை ஆகியோரின் திருவுருவப் படங்களும் திறந்து வைக்கப்பட்டன.

இன்றைக்கு (15.7.2001) ஒன்றேகால் நூற்றாண்டை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் திருவனந்தை சைவப் பிரகாச சபைத் தூண்களில் சிலரைப் பற்றி மேலும் விதந்தோத வேண்டியதில்லை எனினும், சில குறிப்புக்களைக் கூறுதல் கடமை.

### பெ. சுந்தரம்பிள்ளை

இலக்கிய உலகில் தம் பெயரை நிறுவிய மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை, பொது நலப் பணியிலும், சமய வளர்ச்சியிலும் ஆர்வம் மிக்கார் என்பதற்கு அவரால் உருவாக்கப்பெற்ற திருவனந்தபுரம் சைவப் பிரகாச சபை என்றென்றும் சான்றாகத் திகழும்.

### மு. திரவியம்பிள்ளை

மாண்புறத் திகழ்ந்த திருவிதாங்கூர் அரசின் அமைச்சர் பதவிக்கு ஒப்பாக மதிக்கத்தக்க உயர்பதவியாகும் 'வலியமேலெழுத்து' (Accountant - General)என்னும் மாநிலக் கணக்காய்வுத் தலைவர் பதவி. அப்பதவியை அலங்கரித்து நிர்வகித்த பெருமையும், தமிழர்களையே சாரும் அத்தகைய சிறந்த பதவியில் பரம்பரையாக வீற்றிருந்து புகழ் ஏணியில் நின்ற, நற்குடித்தோன்றலே நாம் போற்றும் 'வலியமேலெழுத்துத் திரவியம்' பிள்ளையவர்கள்.

திறம்படக் கல்வி கற்றுதேர்வுகளிலெல்லாம் மற்றோர் திகைக்கும் படி வெற்றிபெற்றுத் தந்தையார்பணியாற்றிய அலுவலகத்திலேயே பணியாற்றும் பேறுபெற்றார். உழைப்பாலும், ஊக்கத்தாலும், ஒப்பற்ற ஒழுக்கத்தாலும், படிப்படியாக உயர் பதவிகள் பலவற்றிலும் பணிபுரிந்து இறுதியில் வலியமேலெழுத்து எனும் மாண்புமிகு பதவியைப் பெற்றவர் திரவியம் பிள்ளையவர்கள் பிள்ளையவர்களின் திறமையைப் போற்றிப் புகழ்ந்தவர்களில் விசாகந்திருநாள் மாமன்னர் குறிப்பிடத்தக்கவர்.

சீர்கேட்டின் சிகரமாகச் செயலாற்றி வந்த நில வருமானத் துறையைச் சீர்படுத்தி செம்மையாக்கிய செயல்திறன் ஒன்றே போதும், பிள்ளையவர்களின் புகழ் என்றென்றும் நிலைத்துநிற்க. நாட்டின் நலன்கருதி பிள்ளையவர்கள் ஆற்றிய நற்பணிகள் ஏராளம்.

தேவாரப் பாசுரங்கள் தினந்தோறும் பாடி இறைவனை வழிபடும் இயல்பு பெற்று வாழ்ந்து வந்தவர். செந்தூர் முருகனிடம் அளவற்ற பக்தி கொண்டவர்.

## எஸ். வையாபுரிப் பிள்ளை

தமிழ் இலக்கிய ஆராய்ச்சியில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை தொடங்கிய பணியை வளர்த்துத் தமிழ் நூல்களின் காலங்களை வரையறுத்ததற்கு முயன்று வெற்றிகண்டவர் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை இலக்கிய வரலாறு பற்றித் தெளிவான சான்றுகளுடன் தக்க ஏதுக்களை எடுத்துக் காட்டித் தமிழிலும் ஆங்கிலத்திலும் பிள்ளையவர்கள் எழுதிய வரலாற்றுரைகள் தமிழ் இலக்கியங்களின் மதிப்பினை உலகிற்கு உள்ளவாறு உணர்த்த வல்லனவாம் தமிழ் ஓலைச் சுவடிகள் பலவற்றைத் தேடித் தொகுத்துத் தம் ஆய்வுக்குப் பயன் படுத்தியவர் பேராசிரியர். திருவனந்தபுரம் சைவப் பிரகாச சபை அப்பெருமகனாரின் ஆய்வுக்கூடமாகவும் அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது

## கே. என். சிவராஜப் பிள்ளை

இலக்கிய, இலக்கண ஆராய்ச்சியாளராகவும், கவிஞராகவும், தத்துவ மேதையாகவும் திகழ்ந்தவர் கே. என். சிவராஜப் பிள்ளை திருவனந்தபுரம் சைவப் பிரகாச சபையோடு தொடர்புகொண்டு தமிழாராய்ச்சியை நடத்தி வந்த மேதை. தம் பட்டப்படிப்பை முடித்ததும், சுசீந்திரத்தில் திருவிதாங்கூர் அரசின் காவல்துறை ஆய்வாளராகப் பணியாற்றினார். அப்பதவியில் நேர்மையாக இருக்க இயலாததால், தாமே அப்பதவியை விட்டு வெளியே வந்தார் திருவனந்தபுரத்தில் 'நாஞ்சில் நேசன்' என்ற வாரப் பத்திரிகையைத் தொடங்கினார். ''மலபார் குவார்ட்டர்லி ரெவியூ'' என்ற ஆங்கிலத் திங்கள் இதழ் ஒன்றையும் நடத்தினார். தமது பத்திரிகையில் இலக்கண-இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தாமே எழுதி வெளியிட்டு வந்தார். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற பிள்ளையவர்கள், திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையை உருவாக்கப் பெரும் முயற்சி மேற்கொண்டார்.

ஓய்வுபெற்றபின் நாகர்கோயிலிலேயே தங்கி 'ஜனமித்திரன்' என்ற தமிழ்ப் பத்திரிகையை நடத்தி வந்தார்.

தமிழ்நாட்டில் அகத்தியர், பழந்தமிழரின் காலவரிசை என்ற ஆங்கில நூற்களும் ஆராயும் திறனின் அற்புதங்களில் ஒருசிலவாகும்.

பரோடா மன்னர் கெய்க்குவார் அறிவித்த கட்டுரைப் போட்டியில் உலக அறிஞர்களோடு கலந்துகொண்டு பிள்ளையவர்கள் முதற்

பரிசையும் பெற்று உலக அறிஞர்களிடையே தமிழன் புகழை நிலை நிறுத்தினார்.

தமிழ் இலக்கிய இலக்கண ஆராய்ச்சியில் மட்டுமின்றிக் கவிதைத் துறையிலும் தத்துவத் துறையிலும் தன் ஆழ்ந்த புலமையை வெளிப் படுத்தினார். ஆராய்ச்சியை அறிவியல் நோக்குடன் வெளிக் கொணர்ந்தவர் பேராசிரியர் கே. என். சிவராஜப் பிள்ளை.

## இசைச் செல்வர் தி. இலக்குமணப் பிள்ளை

இலக்குமணப் பிள்ளை திருவனந்தபுரம் சைவப் பிரகாச சபையின் ஒளிக்கதிர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் அரசுப்பணியில் படிப்படியாக உயர்ந்து இறுதியாக நிதிச்சாலைத் தலைவராக இருந்து ஓய்வு பெற்றவர். அலுவலக நேரம் போக மீதி நேரத்தில் தமிழ் வளர்ச்சிக்காகவும், இசை வளர்ச்சிக்காகவும் பாடுபட்டார். இவரது 'செய்யுட்கோவை' சைவப் பிரகாச சபையில், அரங்கேற்றப்பட்டது. 'இரவிவர்மன்' என்னும் பெயரிய வரலாற்று நாடகம் எழுதினார் இது மலையாளத்திலும் மொழிபெயர்க்கப் பட்டது

திருநெல்வேலித் தமிழன்பர் மாநாட்டில் இவருக்கு மறைமலை அடிகளால் 'இசைச் செல்வர்' என்ற பட்டமும், திருவனந்தபுரம் அறிஞர் கூட்டத்தில் ''தமிழ்த் தியாகராஜர்'' என்ற பட்டமும் வழங்கப்பெற்றது. தமிழில் கீர்த்தனைகள் எழுதி, அதை வளர்த்தார். ஜீவகாருண்ய சபை நிறுவி உயிர்ப்பலி ஒழிக்கப் பணிபுரிந்தார். ''இசைக்குத் தமிழ் இசைப்பாக்களைத் தமிழில் தந்து வெற்றிக்கொடி நாட்டியவர் தி.இலக்குமணப் பிள்ளை''.

## கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

தமிழ் இலக்கிய வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டு பெருமையுடன் பேசும் கவிவாணருள் சிறப்பிடம் பெறும் கவிமணி திருவனந்தபுரம் சைவப் பிரகாச சபையுடன் பல்லாண்டு தொடர்புடையவர். பள்ளியில் மலையாளமே பாட மொழியாகப் பயின்றாலும் தேரூரை அடுத்திருக்கும் வாணன்திட்டு திருவாவடுதுறை ஆதீன மடத்துத் தம்பிரானிடம் தமிழ் கற்றுச் சிறப்புற்றார். இவர் தமது எழுபத்தொன்பதாம் ஆண்டு வரை வாழ்ந்து தமிழ்கூறு நல்லுலகிற்கு ஒளியூட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகாறும், திருவனந்தபுரம் சைவப் பிரகாச சபையின் தோற்றம், வளர்ச்சி மற்றும் பணிகள் குறித்தும், அதன் புகழுக்கும் நூறாண்டு கடந்து வாழும் அதன் வாழ்வுக்கும் இன்றியமையாக் காரணகர்த்தாக்களான புகழ்பூத்த சான்றோர்களைப் பற்றிய குறிப்புக்களையும் கண்டோம்.

இனி, நூலின் நாயகர் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் சைவ சமயம், சைவப் பிரகாச சபை ஆகியவற்றோடு இழைந்தும் இணைந்தும்

இருந்த காரணத்தினால், விளைந்த நல்விளைவுகள் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டுதல் மிகையன்று.

சமகாலத்தவரான 'தமிழ்த்தாத்தா' உ. வே. சா அவர்களோடு தொடர்புகொண்டு "தமிழுக்கு நீங்கள் ஒரு கண். ஆகவே அந்தக் கண்ணுக்கு ஊறுநேராவண்ணம் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று அன்புக் கட்டளையிட்டதோடு, திருவனந்தபுரம் கல்லூரியில் அவருக்கும் பொருத்தமான பதவி கிடைக்கப் பரிந்துரை செய்யவே மனங்கொண்டிருந்தார். உ.வே.சா. அவர்கள் மறுத்ததால் அந்த முயற்சியைக் கைவிட்டார்.

அடுத்து, கணபதி ஆச்சாரிக்கு இருநூல்கள் அச்சிட நிதி உதவி தர மனம் உவந்து ஒப்புதல் தந்தார்.

பம்மல் சம்பந்த முதலியாரின் சதிசுலோசனை என்ற நாடகத்தில் சுமார் ஐம்பது பக்கங்களைச் சென்னைப் பல்கலைக் கழக எப்.ஏ தேர்வு வகுப்பிற்குப் பாடமாக வைக்கப் (பாடநூற் குழு உறுப்பினராக அப்போது இருந்ததால்) பரிந்துரை செய்திருக்கிறார் இதை சம்பந்த முதலியார் அவர்களே நன்றிப்பெருக்கோடு குறிப்பிட்டுள்ளார். உதவிய இன்னொருவர் சி. வை. தாமோதரம் பிள்ளை ஆவார்.

(-பம்மல் சம்பந்தமுதலியாரின் உரைநடைநூல்கள் தொகுதி 2 பக்கம் 95.)

திருவனந்தபுரத்தில் சுந்தரம்பிள்ளை முதலில், புத்தன்சந்தை வீட்டிலும், பிறகு செங்கோட்டைச் சாலையில் வளமனை அமைத்து வாழ்ந்தார். தன் பேராசிரியருக்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான் 'ஹார்விபங்களா' பகுதிக்கு 'ஹார்விபுரம்' என்று பெயரிட்டதை மறக்க முடியுமா?

தன்னைவிட வயதில் இளைய நாகை சுவாமி வேதாசலத்திற்கு (மறைமலைஅடிகளுக்கு), சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் ஆசிரியர் பணி கிடைக்க பரிந்துரை மடல் கொடுத்துள்ளார். அது, இதோ:

"நாகை திரு. வேதாசலம் பிள்ளையவர்கள் ஒருபோது திருவனந்த புரத்தில் ஒரு வாரந் தங்கியிருந்த ஞான்று அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்ததற்குச் சாலவும் மகிழ்கின்றோம். வருங்காலத் தமிழ் மக்களுக்கு மட்டற்ற தமிழ்ப்புலமை மிகுந்துவரும் என்பதற்குச் சான்றாக இவர் இளமையிலேயே நுண்மாண் நுழைபுலம் உடையவராய் இருப்பது களிப்பூட்டுகிறது. மற்றும் தமிழ்மொழிப் பற்றுக்குறைந்த இக்காலத்தில் இவர் தமது நுண்ணறிவைத் தமிழ் நூல்களில் முற்றும் செலுத்தி நன்காராய்ந்துள்ளது பாராட்டுதற்குரியது. பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவகசிந்தாமணி, முதலிய பழந்தமிழ் நூல்களில் ஆராய்ச்சியுடன் கூடிய இவர்தம் அறிவுடைமையே என்னை இவர்பால்

மதிப்புறுமாறு செய்தது தமிழாசிரியரின் தொகை சுருங்கிவரும் இக்காலத்தில் இவருக்குச் சிறந்த ஊக்கமளித்தால் இவர் ஒரு சிறந்த தமிழாசிரியராவரென்று நாம் உறுதியாக நம்புகிறோம். முன்னரே இரண்டாந்தரக் கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கப் போதுமான அளவு இலக்கண இலக்கியத்திற் சிறந்த தேர்ச்சி பெற்றவராயிருக்கின்றன ரெனக் கருதுகின்றோம். குறைந்த அளவில் எஃப்.ஏ. வகுப்புக்குரிய ஆங்கில அறிவு பெற்றாரானால் மேல்நாட்டு முறைப்படி தமிழ் நூல்களை வரலாற்றுச் சான்றுடன் ஆராயவும், எழுதவும் வல்லுநராவா ரென்பது எம்முடைய சிறந்த எண்ணம்.

/2/12.1895 (ஒப்பம்) பி. சுந்தரம் பிள்ளை.

மேற்காணும் சான்றிதழ் வலிமையால் மறைமலை அடிகள் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் சேர்ந்து 'பல்லாவரத்தார்' என்ற பட்டப் பெயரும் பெற்றாரன்றோ!

வீரத்துறவி விவேகானந்தர் 1892இல் திருவனந்தபுரம் வந்திருந்த போது, பெ. சுந்தரம் பிள்ளைக்கு அவரோடு சந்தித்து உரையாடும் வாய்ப்புக் கிட்டியது ஒன்பது நாட்கள் தங்கியிருந்த விவேகானந்த ருடன், சுந்தரம் பிள்ளை, மதப்பற்று, இனஉணர்வு, தத்துவம் பற்றி வாதப் பிரதிவாதம் புரிந்துள்ளார் உண்மையைத் தேடிடும் ஞானியன்றோ மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை!

விவேகானந்தர் பெ சுந்தரம் பிள்ளையின் விருந்தினராக அவர் இல்லம் வந்தார். அவரின் ஒரே மகன் பி. எஸ் நடராஜ பிள்ளையிடம் பற்றுக் கொண்டிருந்தார். விவேகானந்தருக்கு சுந்தரம்பிள்ளை பற்றி ஒரு கருத்து இருந்தது. ''சுந்தரம்பிள்ளை மிகச் சிறந்த கற்றறிந்த மேதை என்பது உண்மைதான். ஆனால் அவர் இனவேற்றுமைக்கு இடம் அளித்திருக்கிறார். திராவிட இன உணர்வு கொண்டிருக்கிறார்'' என்ற தன் கருத்தை வெளிப்படுத்தி உள்ளார்.

விருந்திற்குப்பின்பு சுவாமி விவேகானந்தரும், சுந்தரம் பிள்ளையும் மகிழ்வோடு உரையாடிக்கொண்டிருந்தபோது, எதிர்பாராத வகையில், விவேகானந்தர் பிள்ளையைப் பார்த்து 'தங்கள் கோத்திரம் என்ன?' என்று கேட்டார் சுந்தரம்பிள்ளை ஒரு நிமிடம் மௌனமானார் பின் நிகழ்ந்தவற்றைத் தன் குறிப்புப் புத்தகத்தில் குறித்துள்ளார்

''உவப்போடு என்னுடன் பேசி மகிழும் உத்தம நண்பர் விவேகானந்தர் தங்கள் கோத்திரம் என்ன என்ற வினா எழுப்பினார் வேறு ஒரு தினமாகில் வினாவினைக்கேட்ட நான் வெகுண்டிருப்பேன் உறவென விருந்துக்கு வந்த அந்த உயர்ந்த நண்பரிடம் நான் மெல்லிய குரலில் எனக்கும் கோத்திரத்திற்கும் சம்பந்தம் ஒன்றும் கிடையாது.

தன்மானம் காக்கும் தென்னாட்டில் பிறந்த திராவிட இனத்தைச் சேர்ந்தவன் நான் என ஆத்திரமின்றிக் கோத்திரக் கேள்விக்கு விடையளித்தேன்'' என்பதே அக்குறிப்பு. திருவனந்தபுரத்திலிருந்து சென்ற விவேகானந்தர், சுந்தரம்பிள்ளைக்குச் சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட கடிதங்களை எழுதியிருக்கிறார். பிறகு, அன்று வாலிப நிலையில் இருந்த, ராஜாஜி, சி. பி. இராமசாமி ஐயர், ரங்காச்சாரியார், சுந்தரமைய்யர் போன்றோரிடம்,

''திருவனந்தபுரம் சுந்தரம்பிள்ளையின் பல தத்துவக் கருத்துக்களும், உணர்வுகளும் தவறற்றவை எனத் தெரிகிறது. அன்னாரின் ஆழ்ந்த அனுபவ அறிவால் ஆணிவேரென அவரது இதயத்தில் அக்கருத்துக்கள் உறைந்தமைக்குக் காரணங்கள் உண்டு.

''தங்களில் நம்பிக்கை கொண்ட மனிதர்களின் சரித்திரம் தான் உலக சரித்திரம். நமபிக்கையானது ஒவ்வொருவருக்குள்ளும் அடங்கியிருக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்துகிறது'' எனறு பின்னர் கூறியிருப்பதும் நோக்கத்தக்கது என்று 'பல்கலைச் செல்வர் சுந்தரனார்' என்னும் 1992இல் எழுதிய நூலில் சுந்தரனாரும்-சுவாமி விவேகானந்தரும் என்ற அத்தியாயத்தில் பி. குமரேசன் குறிப்பிட்டுள்ளார்.

சுந்தரம்பிள்ளையின் மறைவைக் கேள்விப்பட்ட சுவாமி விவேகானந்தர், ''சுந்தரம்பிள்ளை பேரறிவாளர், பேருண்மைகளைக் காதலித்து, அதைப் பிறருக்கு எடுத்துரைக்கும் பேராற்றல் வாய்ந்தவர். அன்பிற்குப் பாத்திரமானவரை ஆண்டவன் அற்ப ஆயுளிலேயே ஆட்கொண்டு விடுவான் என்பதற்குச் சுந்தரம் பிள்ளையின் மறைவே சான்று பகரும்'' என்று குறிப்பிட்ட அவரும், குறுகிய காலத்திலேயே (1863-1902) 39-வது வயதிலேயே மறைந்ததும் ஒரு கொடுமையே

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளைக்கு வாய்த்த ஒரே மகன் பி. எஸ். நடராஜ பிள்ளையும் தம் தந்தைக்கு ஈடான புகழைப் பெற்றார். தன் ஏழு வயதிலேயே தந்தையை இழந்தவர் நடராஜப் பிள்ளை. இருப்பினும், தன் இறப்பிற்கு முன்பே, தன் பிள்ளைக்குத் தமிழையும் சைவத்தையும் அறிமுகம் செய்து வைத்திருந்தார் சுந்தரம்பிள்ளை. சுவாமி விவேகானந்தர், மறைமலை அடிகள் போன்றோர் வந்து தங்கியிருந்த சுந்தரம்பிள்ளையின் ஹார்விபுரம் இல்லத்தை திருவிதாங்கூர் அரசாங்கம் வெறிகொண்டு பறிமுதல் செய்தது. பக்கத்திலேயே ஒரு குடிசையில் வாழ்ந்தார் தீரத்துடன் பி. எஸ். நடராஜப்பிள்ளை. பி. எஸ். நடராஜபிள்ளை நாட்டு விடுதலைப்போராட்டத்தில் தீவரமாக பங்கு கொண்டதாலேயே அரசாங்கம் ஹார்விபுரம் இல்லத்தையும் மற்றும் உடைமைகளையும் பறிமுதல் செய்தது.

1916-இல் பொதுத் தொண்டில் ஈடுபட்டு, 1954-இல் திருவிதாங்கூர் - கொச்சியில் (திரு - கொச்சி) நிதியமைச்சர் ஆனார். வரவு செலவுத் திட்டம் (Budget)- தயாரித்துச் சமர்ப்பித்தபான்மை கண்டு, பண்டிதநேருவே பாராட்டியுள்ளார். இன்று பரவலாகப் பேசப்படும் வளர்ந்திருக்கும் இலவசக் கல்வித்திட்டத்தின் வழிகாட்டி பி.எஸ். நடராஜ பிள்ளையே எனலாம். திருவிதாங்கூரி - கொச்சியில் (திரு - கொச்சி) முதன் முதலில் அது இவரால் நடைமுறைப்படுத்தப்பட்டது நிலச் சீர்திருத்தத்தையும் முதன் முதலில் இவர்நான் கேரளத்தில் நடைமுறைப்படுத்தி வழிகாட்டினார். கேரளப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை அமையப்பெரும் முயற்சி எடுத்தவர் சுந்தரம்பிள்ளையின் அரும்பெரும் செல்வர் நடராஜ பிள்ளையாவர்.

அத்தகைய நடராஜ பிள்ளை, சுந்தரம்பிள்ளையின் ஒரே பிள்ளை. தந்தையைவிடவும் நீண்டநாள் வாழ்ந்து, தந்தையைவிடவும், சமுதாயப் பணியும் அறப்பணியும் புரிந்து நிறைந்த மக்களைப் பெற்று, வாழ் வாங்கு வாழ்ந்து தன் தந்தை புகழைக் காத்ததோடு தன் புகழையும் நிறுவி (1891 மார்ச் திங்கள் 10ஆம் நாள் பிறந்து) 1966, ஜனவரித் திங்கள் 10-ஆம் நாளே மறைந்தது ஒரு வியப்பே!

மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை, பி. எஸ். நடராஜ பிள்ளை ஆகியோரின் வாழ்வும் தொண்டும் நூற்றாண்டு விழாவைக் கண்ட திருவனந்தபுரம் சைவப் பிரகாச சபையோடு இரண்டறக் கலந்தது என்பதை நிறுவுவதற்கே, இவ்வளவும் குறிப்பிட வேண்டியிருந்தது.

*திருமகளும் கலைமகளும் சேர்ந்து வாழும்*
*சேரலத்தில் எழில்கல்விக் குறையுளாகித்*
*திருப்பதிகள் நூற்றெட்டுள் சிறப்புற் றோங்கும்*
*திருவனந்தபுரத்தெம்மான் செங்கண் மாயன்*
*திருவனந்தன் மேற்றுயில்வோன் அருளினாலே*
*தீந்தமிழ்தேர் அறிஞரன்று கழகம் கண்டார்;*
*பெருவனப்போடு ருத்தாங்கி அந்தச்சைவப்*
*பிரகாச சபைஇன்று பிறங்கு மாலோ*

முதுபெரும்புலவர் நாகர்கோயில் செ. சதாசிவம் அவர்களின் இக்கவிதை 'இந்நிறுவனப் புகழை மேலும் பறைசாற்ற வல்லது'.

# 8
# பிற எழுத்தோவியங்கள்

**ம**னோன்மணீயம் சுந்தரம்பிள்ளை தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் படைத்த படைப்புக்களாம் -

1 மனோன்மணீயம்

2 நூற்றொகை விளக்கம்

3 தமிழ் இலக்கிய வரலாற்றில் சில மைல் கற்கள் அல்லது திருஞான சம்பந்தர் கால ஆராய்ச்சி

4. பண்டைய திருவாங்கூர் முடிமன்னர்களின் காலம்

ஆகிய நூல்கள் பற்றி, ஏற்கனவே தனித்தனியாக எழுதப்பட்டு விட்ட நிலையில் இவை தவிர்த்து, அவர்தம் பிறபடைப்புக்களைக் குறிப்பிடுவதே இங்கு இயல்கிறது

அவை சிறுநூல்களாகவோ, ஆய்வுக் கட்டுரைகளாகவோ, கவிதை களாகவோ, கடிதங்களாகவோ இருக்கும். மேலும் அவை தமிழிலும், ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டும் இருக்கும் தன்மையன. அவைகளாவன:-

## தமிழ்

*கவிதை*

1. சிவகாமி சரிதம்
2. ஒரு நற்றாயின் புலம்பல்
3. பொதுப் பள்ளியெழுச்சி
4. அன்பின் அகநிலை

உரைநடை

5 ஜீவராசிகளின் இலக்கணம்

6. மரங்களின் வளர்ச்சி

7. புஷ்பங்களும் அவற்றின் தொழில்களும்

மடல்

8. உரைநடை மடல்

9. கவிதை மடல்

**ஆங்கிலம்**

1. The Ten Tamil Idylls
2. Hobbes, The Father of English Ethics
3. Bentham, The Justic Moralist
4. The Date of Nambi Andar Nambi
5. Miscellaneous Travancore Inscriptions

சிலவற்றைப் பற்றி ஈண்டுக் காண்போம்.

**சிவகாமி சரிதம்**

குறள் வெண்செந்துறைப் பாடல்களால் ஆன கதைப்பா இதுவாகும் 1889ஆம் ஆண்டு நூலாசிரியரால் இது வெளியிடப் பெற்றது அவையடக்கச் செய்யுட்பா ஒன்றையும் கொண்டுள்ளது 1891இல் வெளியான ஆசிரியரின் மனோன்மணீயம் நாடகச் சுவையை மிகுவிக்கும் பொருட்டுச் சிற்சில மாறுதல்களோடு இந்நூல், நாடகத்தோடு இணைக்கப்பெற்றது என்பார் பேராசிரியர் எஸ் வையாபுரிப் பிள்ளை. 1934இல் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக்கழகத்தார், சிவகாமி சரிதத்தினை, மனோன்மணீயத்தினின்றும் பிரித்துத் தனி நூலாக வெளியிட்டிருப்பதும் ஈங்குக் கருதத்தகும். கொ சி இராமலிங்கத் தம்புரான் இதற்கு உரை எழுதியுள்ளார் எனத் தெரிகிறது. நூலாசிரியர் வெளியிட்ட சிவகாமியின் சரிதமும், கழகம் வெளியிட்ட சிவகாமியின் சரிதமும் இன்று கிடைத்தற் கரிதேயாகும்

''சிவகாமி சரிதம்'' என்பது தனி நூல். இது மனோன்மணீயம் நாடகத்தோடு இணைக்கப்பட்டபோது (முதற்பதிப்பில்) சிவகாமி சரிதை என்றே இருந்தது பின்னர் திருத்தப்பட்ட தேர்வுப் பதிப்பில் மீண்டும் 'சிவகாமியின் சரிதம்' என்றே நூலாசிரியர் திருத்தம் மேற் கொண்டுள்ளார் என்ன காரணம் என அறியக்கூடவில்லை

திக்குத்தெரியாத காட்டில் சென்ற இளந்துறவி ஒரு முதிய துறவியின் உதவியை நாடுகிறார். தன்னிருப்பிடத்திற்கு அழைத்துச் சென்ற அந்த முதிய துறவி, இளம் பெண்ணொருத்தியே இளந் துறவியாக வந்துள்ளதை அறிகிறார் முதிய துறவியிடம் மன்னிப்பு வேண்டும் அப்பெண் தன் துயர் நிறைந்த வாழ்க்கையினைச் சொல்லுகிறார் சிவகாமியான தான் செல்வச் செருக்கால் தன்னை விரும்பிய தன் மாமன் மகனைப் புறக்கணித்ததாகவும், பொருளுக்காகத் தன்னை மணக்க விரும்பிய பிறரின் நிலையினையும் மாமன் மகனிடம் தான் கொண்டுள்ள அன்புணர்வையும் காலம்கடந்தே உணர்ந்த மையால், அவரைப் பல இடங்களிலம் தேடியலைந்ததையும் கூறுகிறார் அவரன்றித் தன் வாழ்வு வீணே என்று தீயில் புகமுயற்சி செய்கிறாள். முதிய துறவியோ தன் தவ வேடத்தைக் களைந்து,

*''சிவகாமியானுனது சிதம்பரனே'' என்னச்*
*செப்புமுனம் இருவரும் மற்றோருவம்'' ஆனார்!*
*எவர்தாமுன் அணைந்தன ரென்றிதுகாறும் அறியோம்*
*இருவரு மொன்றாயின ரென்றே யறையும் சுருதி''*

இதுதான் நாடகத்தின் உள்ளடக்கமாகும்

உயிர்கள் உலகப் பொருள்களின் இயல்புணர்ந்து இறைவனை நாடுவது போல் சிவகாமியும், பொருள்வேண்டிப் பிறர் தன்னை மணக்க முயலும் நிலைகள், சிதம்பரனின் அன்புநிலை போன்றவை உணர்ந்து உயிர்கள் இறைவனைத் தேடியலைவது போல் தேடியலைகின்றாள் என்பது தத்துவம்.

## ஒரு நற்றாயின் புலம்பல்

இப்பெயரில் உள்ள பாடல்கள், முதன்முதலாக 1885ஆம் ஆண்டில் விவேக சிந்தாமணி இதழில் அருஞ்சொற் பொருளுடன், பாடல் சூழலை விளக்கும் தமிழ், ஆங்கிலப் பொருட் குறிப்புக்களுடன் வெளியானது. பிறகு 'செந்தமிழ்ச் செல்வி' நிலையாமை பற்றிய முன்னுரை திரண்ட கருத்து, விரிவான சொற்பொருள் விளக்கங்களுடன் 1956இல் வெளியிட்டது அன்பை உயிராகவும், அழகினை உடலாகவும், ஆனந்தத்தைக் குணமாகவும் கொண்டவள் சூடாமணி. இவள் இலக்குமியின் மறுவடிவம் இலக்குமியை மகளாகப் பெற்ற துருபதன் சனகன் போன்றோரும் அழுக்காறு கொள்ளுமளவு தவழ்ந்து விளையாடியவள். இவள் இனிய குரலைக் கொண்டிருப்பதோடு, பியானோ முதலிய இசைக் கருவிகளையும் மீட்டும் திறமுடையவள் சித்திரம் தீட்டக் கூடியவள். பெற்றோரிடம் அன்புடைய இம்மகள் மணநாள் அன்றே மணவாழ்வை நீத்தாள். மகளின் மறைவினைத் தாங்க இயலாத தாய், 'இது செப்படி வித்தையோ? நீ மணமுள்ளதா என முகர்ந்து பார்த்த மலர் இப்போதும் வாடாமல் இருக்க, நீ மறைந்துவிட்டாய் என்பது உண்மையாகுமா?' நீ எங்குச் சென்றாயோ? பிழை செய்தேன் என்றால், அதைச் சுட்டிக் காட்டாமல், இங்ஙனம் மறைந்து செல்வது முறையோ? என்ன, இலக்குமியான சூடாமணியும் விண்ணில் தேவர் புடை சூழக் காட்சியளித்து, 'நீங்கள் செய்த தவத்தாலேயே என்னை மகளாகப் பெற்றீர்கள். கவலை வேண்டாம். உம் துயர்தீர மகவு பிறக்கும்' என்று கூறி மறைந்தாள். தாயின் ஆற்றமைப் புலம்பல்களும், மகள் சூடா மணியின் காட்சியும், அறிவுறுத்தல்களும் எனும் நிலைகளில் இப்பாக் களின் உள்ளடக்கம் அமைந்துள்ளது.

*'பொன்னுலகும் தாமரை நற்பூவிதழும் வீண்கிடக்கப்*
*பூமியினில் எம்மனைநீ புகுந்தருளும் அந்நாளில்*
*கன்னலெனக் கால்குடைந்து கதறியழுங் குரல்கேட்டுக்*
*களித்தவிதம் நீயறியாய் கண்ணே சூடாமணியே'*

என்பது, இந்நூலில் உள்ள இருபத்து நான்கு பாடல்களில் ஒன்று.

மகள் இழப்பின் துயர உணர்வை வெளிப்படுத்தும் அவலச் சுவையே "ஒரு நற்றாயின் புலம்பல்"

## பொதுப் பள்ளியெழுச்சி

பள்ளியெழுச்சிப் பாக்கள் எல்லாம் பொதுவாக இறைவனைத் துயில் எழுப்பும் நிலையிலேயே அமைய, இப்பொதுப் பள்ளியெழுச்சிப் பாக்கள், அறியாமைத் துயிலிலிருந்து நாங்கள் எழுந்து விட்டோம் அந்நிலை, நிலைத்திருக்க எம்முள் எழுந்தருளாய் என அகநோக்கு நிலையில் செல்கிறது. பொதுவான பரம்பொருள் என்று கூறப்பட்டாலும், சிவதத்துவமே இப்பாக்களின் அடிநாதமாக இழையோடக் காணலாம் பத்துப் பாடல்கள் உண்டு.

முதன் முதலில் இவை 1895இல் விவேகசிந்தாமணி இதழில் வெளியாயின பின்பு 'செந்தமிழ்ச் செல்வி'யில், புதுக்கவிகள் (Original Poetry) என்ற குறிப்புடன் விவேக சிந்தாமணியிலிருந்து பெறப்பட்டது என்று தெரிவித்து வெளியிடப் பெற்றது.

கதிரவன் ஒளியில் சிறு துகள்களும் வெளிப்பட்டுத் தோன்றுவது போல இறைவனது அருள் ஒளியில் உயிர்களைச் சூழ்ந்த அறியாமை என்னும் உறக்கம் கலைந்தது. உயிர்களோ, உணவு உண்பதையும், ஆடை அணிமணிகள் புனைவதையுமே கருத்தாகக் கொண்டுள்ளன. நன்மை இது, தீமை இது என நீ எம்மீது கொண்டுள்ள அருளால் வேறுபடுத்திக் காட்டினாலும் நன்மையைச் சென்று சேரும் நிலையறியாது நிற்கின்றோம் வாழ்க்கைக் கடலை, எம் அறியாமையால், உடல் எனும் சிறு தோணியினால் கடக்க முயற்சி செய்கிறோம். "உலகின் இச்சைகள் எம்மை மீண்டும் அடையும் முன் எம்பெருமானே எம்முள் எழுந்தருளுவாயாக" என வேண்டுவதே இப்பாக்களின் உட்பொருள்.

*நல்லது கண்டு மற்றல்லது பற்றும்*
*நாணறு சங்கற்ப நலிபடை சுற்றும்*
*எல்லை யிலாவெளி மானதக் கோட்டை*
*இந்திரியப்படை யிதிற் செயுங் கேட்டைச்*
*சொல்லவோ வாயிலை; சூழிருண் மூலஞ்*
*சுதந்தர மற்றுளஞ் சோர்ந்திடுங் காலம்*
*இல்லையுன் னருளெ னி லெங்ஙன முய்வோம்*
*எம்பெருமா னெம்முள் ளெழுந்த ருளாயோ*

என்பது ஒரு பாடல்.

எம்மைக்காக்க எம்முள் எழுந்தருள வேண்டும் என்பதே பொதுப்பள்ளியெழுச்சிப் பாடல்களின் பாடுபொருளாகும். மெய்ப் பொருள் இதன் இயல்பாகும்.

## அன்பின் அகநிலை

கிறித்தவ சமயத்தின் புனித நூலாம் விவிலியத்தில் வரும் அன்பு என்னும் கருத்துருவம் பற்றிப் புனித பவுல் கூறிய பொருள்களின் அடிப்படையில் சுந்தரம்பிள்ளை இப்பாடல்களை வடித்துள்ளார்.

1891ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 'ஜநாநந்தினி' பத்திரிக்கையில், அன்பைப் பற்றிய பாக்கள் எனும் தலைப்பில் பத்துப் பாடல்கள் வெளி வந்ததாகச் சதாசிவ பண்டாரத்தார் தெரிவிக்கின்றார். சுந்தரம்பிள்ளை வாழ்ந்த 1895ஆம் ஆண்டிலேயே விவேகசிந்தாமணி இதழில் அன்பின் அகநிலை அல்லது தர்ம சிந்தை எனும் பொருளில்பன்னிரண்டு பாடல்கள் வெளிவந்துள்ளன பின்னர் இது செந்தமிழ்ச் செல்வியிலும் வந்துள்ளது.

பிறர் தம் குறைகாணாது, நல்லியல்பினையே காணும் அன்புணர்வு இல்லையாயின் எத்தகு திறமையுடையவராக இருப்பினும் அதனால் பயனில்லை என்பதே இப்பாக்களின் பாடுபொருளாகும். இவ் வன்புணர்வு நிலையினைப் ''பரவனுகூலதிருட்டி'' எனக் கூறுவர்.

*'' கற்றுணர்கல்வி கேள்வி கருதிய பிறவும்பாழா*
*உற்றிடும் பக்குவத்தில் ஒழிவிலாதுறைவ தோர்கில்*
*முற்றிய பக்தியூக்கம் முன்சொன அன்புமாமே*
*மற்றவை மூன்றில்மேலா மன்னுவதன்பே அம்ம!''*

என்பது ஒரு பாட்டு ஆகும்

ஒரு பொருள் தொடர்ந்து வரும் பத்துப் பாக்களைப் பதிகம் என்பர். பத்திற்கு மேற்பட்ட பாடல்களையும் கவிஞர் பாடுதலும் இதனுள் அடங்கும். சுந்தரம்பிள்ளையின் 'அன்பின் பின் அகநிலை அல்லது தர்மசிந்தை' என்னும் பாடல்களும் பதிக வகையைச் சேர்ந்தது எனில் தவறில்லை.

## சீவராசிகளின் இலக்கணமும் பிரிவும்

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை எழுதிய இத்தமிழ்க் கட்டுரை விவேக சிந்தாமணியில் 1892ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள், இலக்கம் - 4இல் வெளிவந்துள்ளது. அதில் ஒரு பகுதியைக் கீழே காணலாம்.

கூறிய மூன்றிலக்கணங்களும் சீவராசிகளைச் சடபதார்த்தங் களிலிருந்து பிரித்தறிந்து கொள்வதற்குப் போதுமாயினும், அச்சீவராசி களின் விசித்திரங்களையும், குணவைபவங்களையும் நன்கறிதல் வேண்டுமானால், அவற்றை வெவ்வேறு பிரிவுகளாய்ப்பகுத்து, ஒவ்வொரு பிரிவுக்குமுள்ளே விசேஷ லஷணங்களைச் சோதித்த லாவசியகம் இதோ நிற்கிற மரமும் இதில் கட்டியிருக்கிற பசுங்கன்றும் உயிருடையவை எனும் தன்மையினால் ஒப்பேயாயினும் மற்றெல்லா விஷயங்களிலும் எவ்வளவு வேறுபாடுடையன' உயிரிலக்கண

மாராய்வோர் முதலில் சீவராசிகளை இருபெரும் பிரிவுகளாப் பிரிக்கிறார்கள்.

*''முதாவது ஸ்தாவரமல்லது மரவர்க்கம்*
*இரண்டாவது சரம் அல்லது மிருக வர்க்கம்''*

என்றவாறு சீவராசிகளை விவரித்துக் கொண்டே செல்கிறார் சுந்தரனார்

பிறகு, இவை பற்றியே 'மரங்களின் வளர்ச்சி' என்று 1892 ஆண்டிலேயே செப்டம்பர் மாதம் இலக்கம் 5-இல் எழுதியுள்ளார். பின்பு, 1892ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இலக்கம் 6-இல் புஷ்பங்களும், அவற்றின் தொழிலும் என்று எழுதியுள்ளார்.

இந்தக் கட்டுரைகளை அவர் சிறுசிறு அழகிய வரைபடங்களுடன் எழுதியிருப்பது சிந்தனைக்குரியது

மேலும் இம்மூன்று கட்டுரைகளுக்கும் முடிவுரைபோல,

''பொழுது விடிந்து கண்துடைத்து எழுந்தது முதல், இரவில் கொட்டாவி விட்டுக் கண்மயங்கிச் சோரும் வரையும், எனக்கு எனக்கு என்று ஓயாது தன்னயமே கருதி, ஒருகணப் பொழுதேனும் உள்ளும் புறமும் ததும்பி விளங்கும் சித்விலாசத்தையெட்டிப் பாராமல், வாணியன் வீட்டுச் செக்கெருதுபோலச் சென்றவழியே சென்று சுற்றிச் சுற்றியுழைத்து நமது அரிய வாழ்நாள் முழுவதும் கழித்துவிட்டால், விவேக சூந்நியமான மிருகங்களுக்கும் நமக்கும் வேற்றுமை யென்னாம்? ஐயோ!

*''செவியிற்சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்*
*அவியினும் வாழினும் என்''- (திருக்குறள்)*

-பி சுந்தரம்பிள்ளை **M.A.**

இவ்வாறு உணர்வு பொங்க எழுதிவிட்டு, பின் குறிப்புப் போல ஒரு சிறுபத்தியையும் எழுதியுள்ளார் அதைப் படித்தபிறகுதான், அந்த ஞானியின் பேருள்ளத்தை மேலும் அனுமானித்து மகிழ முடிகிறது அது கீழ்வருமாறு:-

''சென்ற இரண்டு சஞ்சிகைகளிலும், இதிலும் சொல்லப்பட்ட சங்கதிகளில் உண்மையான சந்தேகங்கள் யாருக்காவது தோற்றினால் அவற்றைத் தெரிவிக்க கூடிய அளவும் சந்தேக நிவர்த்திக்கேற்றவை யெடுத்துக் காட்டி மேற்சங்கதிகளையும் அடுத்த சஞ்சிகையில் விவரிக்க ஆஷேபமிராது''.

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை, செறிவும் பயனும் மிக்கக் குறுகிய வாழ்நாளில் பலருக்கு மடல் எழுதியிருக்கக் கூடும். அவற்றில் இரு மடல்களை மட்டும் பானைக்கு ஒரு சோறாக ஈண்டு எடுத்துக் காட்டப் பெறுகிறது. முதலில் வருவது உரைநடை மடல். 'என் சரித்திரம்'

என்ற தனது தன் வரலாற்று நூலில் மகாகோபாத்தியாயா டாக்டர் உ.வே.சாமி நாதையர் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

1896-ஆம் வருஷ ஆரம்பத்தில் திருவனந்தபுரத்தில் இருந்த புரோபஸர் பி.சுந்தரம்பிள்ளை தாமுள்ள காலேஜில் தமிழாசிரியர் வேலைக்குத் தக்க ஒருவரைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தார். அன்றியும் நான் அந்த வேலையை ஏற்றுக்கொண்டால் ஆரம்பத்தில் ரூபாய் அறுபத்தைந்து கிடைக்குமென்றும் படிப்படியாக உயருமென்றும் எழுதினார். எனக்கு அது சம்மதமாக இல்லை பிறகு ஆங்கிலம் தெரிந்த ஒருவரை அந்த ஸ்தானத்தில் நியமித்து விட்டார்கள்.

அந்தக் காலத்தில் சுந்தரம்பிள்ளை இயற்றிய மனோன்மணீயம் நாடகத்தில் சில பகுதிகள் காலேஜ் வகுப்புக்களுக்குப் பாடமாக இருந்தன. அவற்றை நான் பாடம் சொல்லி வரும்போது பாராட்ட வேண்டிய இடத்திற்குப் பாராட்டி விட்டுப் பிழையாகத் தோன்றிய சிலவற்றைப் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொன்னேன் இவ்விஷயத்தை யார் மூலமாகவோ அறிந்த சுந்தரம்பிள்ளை அக்குற்றங்கள் இன்னவை யென்று தெரிவிக்கும்படி எனக்குக் கடிதம் எழுதினார்.

நான் அங்கங்கே கண்டவற்றைத் தொடுத்து எழுதி அனுப்பவே அவர் உசிதமான திருத்தங்களை ஏற்றுக்கொண்டு தம் நன்றியறிதலைத் தெரிவித்தார். அது முதல் அடிக்கடி அன்போடு எனக்குக் கடிதங்கள் எழுதி வந்தார்.

டாக்டர் உ வே.சா.அவர்களுக்கு, மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை எழுதிய ஒரு மடலை ஈண்டுக் குறிப்பிடுதல் மிகையன்று. இதோ,

**சிவமயம்**

தயவுசெய்து அனுப்பித்த எழுத்தும் திருத்தங்களும் கைசேர்ந்தன. நேற்று, சாயரக்ஷை வரையும் இரண்டு பிரசங்கங்கள் எழுதி வாசிக்க வேண்டிய அவசர அலுவல் வழக்கமானவற்றோடு தொடர்ந்து கொண்டமையால் சற்றும் சாவகாசமில்லாமல் மறுபடிக்கும் வந்தனத் திற்கும் காலம் தாழ்த்தமை மன்னிக்க வேண்டுகிறேன். திருத்தங்களைக் கவனித்து மேலும் யாதேனும் சந்தேகம் தோன்றுகிறவைகளைத் தெரிவித்துக் கொள்வேன் கண் வியாதியோடு இவ்வளவு எனக்காகச் சிரமம் எடுத்துக் கொண்டதற்காக மனப்பூர்வமாக நன்றி பாராட்டு தலன்றி மற்றென்ன உபசாரம் யான் சொல்லத்தக்கது? கண் வியாதிகள் அறிந்த நல்ல வைத்தியரிடம் அன்றிச் சாதாரணமானவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டு யாதும் பிரயோகிக்கத்தக்கதன்றே. இப்போது ஏது தன்மையிலிருக்கிறதென்று அறிய அவாவுகிறேன்.

தாங்கள் தமிழுக்கு ஒரு கண். தங்கள் கண்ணுக்கு வருத்தமென்று கேட்க மனம் சகிக்கிறதில்லை இனியும் தங்களால் ஆக வேண்டுமவை அனந்தம். சகாயத்திற்கு ஒன்றோ, இரண்டோ ஆள் அவசியம். அவ்வகைச் செலவிற்கு என்ன செய்யக் கூடியதாக இருக்கும்? என்னாலியன்றவை செய்ய ஆயத்தம். தஞ்சாவூரில் மகா.எ.எ.ஸ்ரீ கல்யாண சுந்தரமையர் அவர்களை யான் சென்ற ஆண்டு கண்ட காலை இவ்வகையான முயற்சிக்குத்தாம் அனுகூலிக்கும் விருப்பமுடையராகப் பேசினார்

அவர்கள் ஒருவருக்குச் செலவிடுவதானால் மடங்களில் அழியும் பொருளில் எவ்வளவு இதில் கதியடையக் கூடாததாகும்? அவர்களைத் தாங்கள் ஏன் பிரேரிப்பிக்கலாகாது? சாது சேஷய்யர் அவர்கள் மூலமாயினும் இலகுவில் நிறைவேறலாமே. தாங்கள் இனித் தனியே யாவும் பார்க்கலாமென்ற எண்ணத்தைத் தயவு செய்து விட்டுவிட வேணும் சகாயத்திற்கு ஆளின்றி இனியும் முயற்சிக்கில் எங்ஙனம் தங்கள் நேத்திர வியாதி வலுத்துவிடுமோ என்று அஞ்சியிவ்வளவு எழுதலானேன்

நம்மனையர் தேகநிலையைக் கருதும்போது, ‘இருதலைக் கொள்ளியினுள்ளெறும்பு என்றே உண்மையாய் எண்ண வேண்டியதாக இருக்கிறது உழைத்தால் சரீர உபாதி துணிபாக நிற்கிறது. உழைக்காவிட்டால் சரீரமிருந்தென்ன பயனென்ற சோகமும் அப்படியே. ஏது செய்ய? கடவுள் இச்சைபோல் நடக்கட்டும்.

16, கார்த்திகை — தங்கள் அன்பன்

திரு அனந்தை(29 11.1896) — பி. சுந்தரம்பிள்ளை

மனோன்மணீய ஆசிரியரின் இந்தக் கடிதம் எவ்வளவோ செய்திகளைப் படிப்போர்க்குக் கற்பிக்கும் என்பதில் ஐயமில்லை. அந்த இரு ஒத்த கருத்துடைய ஒப்பிலாச் சான்றோரைப் போற்றி அவர் வழியில் நடக்க முயற்சி செய்வதன்றி வேறு என்ன செய்யக்கூடும் நம்மால்?

இனி, கவிதைமடல் ஒன்றைக் காண்போம்.

மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரம்பிள்ளை காலத்தில் கோட்டாற்றில் கணபதி ஆச்சாரி என்னும் பெரியார் வாழ்ந்து வந்தார். இவர் சிறந்த தமிழறிஞர். பாரகாவியம் எனத்தக்க இருபெரு காவியங்கள் படைத்த பெரும்புலவர். இவர் படைப்புக்களுள் ஒன்று 4500 பாடல்கள் கொண்ட ‘சாணக்கிய சூத்திரம்'.

இன்னொன்று ஏறத்தாழ 3000 பாடல்கள் அடங்கிய ‘திருச்செந்தூர்

திருவிளையாடற் புராணம்' இவ்விரு படைப்புக்களையும் அச்சூர்தி ஏற்றும் நோக்கம் கொண்டு, தம் நண்பரான சுந்தரம் பிள்ளையை அணுக நினைத்தார். அவரை நேரில் காண்பதற்கு மேற்கொண்ட முயற்சி ஈடேறவில்லை. ஆகவே, திருமுகம் ஒன்று எழுதினார் அத்திரு முகத்திற்கு எதிர் முகமாகப் பிள்ளை விடுத்த பாடல் இது -

**ஆசிரியம்**

*வந்தனம் வந்தனம் செந்தமிழ்ச் செல்வ!*
*சந்ததம் வாழ்க நும்நேயம்: தயையா*
*விடுத்தநும் பத்திரம் அடுத்தநாள் நெறியே*
*சேர்ந்தும் இதுகால் நேர்ந்தபல் தடையால்*
*தகும்விடை தாழ்த்தலில் தமியேனுள்ளம்*
*மிகுதுயர் அடையா நின்றது; மேனாள்*
*பிணியிலா உடலும் பீடையில் நெஞ்சும்*
*பெற்றிட நோற்றிலன்; குற்றமற்றஃதே;*
*நும்பெரும் புலமையும் நும்பெரும் உழைப்பும்*
*எங்கணும் பற்பலர் இயம்பக் கேட்டுளேன்;*
*கடல்சூழ் புவிக்குக் கருதுநான் கெல்லையில்*
*இடம்பெறுதன்றிசைக் கெல்லையா விருந்த*
*நுமது நாட்டுக் குமரிக் கோடிபோல்*
*நீவிரும் தமிழ்க்கோர் நிலைபெறும் எல்லையே*
*ஆவீர் என்ப; ஆயினும் குமரிக்*
*கோடிகோடியே; நீயாரோ; கோட்டமில் ஏகர்*
*முன்னோர் புகழும் மும்முடிச் சோழ*
*நல்லூர் என்னும் நும்மூர் மான*
*முத்தமிழ்க் குரிய மும்முடி நுமக்கே*
*ஒத்ததாம் என்ப; ஆயினும் நும்மூர்*
*குணபால் செல்லும் கோட்டாறு டைத்து;*
*நீரோ,*
*குணபால் செல்லும் கோடா ஆற்றர்*
*என்றிப்படியே பற்பலர் எங்கணும்*
*ஒன்றியநும் புகழ் ஓதல் கேட்டுவந்து*
*கண்டுபழகயான் காதலுற்றிருந்தும்*
*பண்டை வினையால் நீரிவண் அடைந்தகால்*
*கலந்துரையாடும் நலம்தரா தொழித்த*
*இடவேற்றுமை யால் படருழல் வேற்கு*
*சொற்சுவை பொருட்சுவை துளும்பி விம்மி*
*பற்பல புதிய கற்பனைய மைந்து*
*பத்தியின் நறுமணம் ஒத்துக் கமழ்கநீர்*
*இயம்பிய காப்பியம் இரண்டையும் கடைந்து*
*தெளித் தெடுத்தளித்துச் செவியொடு மனனும்*
*களிப்புறச் செய்தநும் கரையறு நேசம்*
*சந்ததம் தழைத்து வாழ்க; தனரும்*

*செந்தமிழ்க் கொடிக்குச் செழுங்கொழு கொம்பாம்*
*நும்தகைப் புலவோர் முந்துறா திருந்த*
*பெருங்குறை யெண்ணிப் பேதுறுவோர்க் கெலாம்*
*அருங்களிப் புதவும் அடைந்தநும் அழகார்*
*இரு காவியமும் பெருகா நிற்க*
*எழுதா எழுத்தில் இயைவித்திடினே*
*இவ்வழிக் கென்னால் இயன்ற சிற்றுதவி*
*செய்வதிற்றடையில்லை, சிறக்க நும் உழைப்பே.*

*தங்கள்*

*இஷ்டன்*

சுந்தரம்பிள்ளை

திருவனந்தபுரம்

இந்த நாற்பத்து நான்கு அடிகளில் இயன்ற கவிதைப் பதில் அவர்தம் நண்பருக்கு எவ்வளவு இனித்திருக்கும் என யூகித்து அறியலாமன்றோ! இறுதியில் நூல் வெளியிட உதவுவதாகவும் கூறிய பான்மை போற்றுதற்குரியதன்றோ!

இனி, மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் ஆய்வு வளம் பொதுளும் ஆய்வுக் கட்டுரைகள் சில ஆங்கிலத்தில் உள்ளது. அவற்றில் ஒன்று

The Ten Tamil Idylls

என்பது. இதற்குப் பொருள், பத்து எளிய வாழ்க்கைச் சித்திரங்கள் என்பதாகும். இவ்வாறு அவர் குறிப்பிடுவது,

பத்துப் பாடல்களான-

**திருமுருகாற்றுப்படை**
**பொருநராற்றுப்படை**
**சிறுபாணாற்றுப்படை**
**பெரும்பாணாற்றுப்படை**
**முல்லைப்பாட்டு**
**மதுரைக்காஞ்சி**
**நெடுநல்வாடை**
**குறிஞ்சிப்பாட்டு**
**பட்டினப்பாலை**
**மலைபடுகடாம் என்ற கூத்தராற்றுப்படை**

என்பவைகளைப் பற்றியதாகும். இவற்றின் மீது சுந்தரம்பிள்ளை சொரிந்த பாராட்டுத் திறனாய்வே, இவ்வாய்வுரை.

தமிழ், தத்துவம், வரலாறு ஆகிய முத்துறைகளிலும் முத்திரை பதித்துள்ள சுந்தரம்பிள்ளையின் ஆழ்ந்த ஆங்கிலப் புலமைக்காகவே

சிறு நூல்போன்ற இப்பெருங் கட்டுரையைப் பயில வேண்டுவது நம்மனையோரின் கடமையாகும்.

Among the ancient Tamil Classics if we exclude works that are more or less distinctly grammatical or ethical the "Ten Idylls' and the "Five Epics' deserve the most prominent mention. The Idylls are, as the name implies richly wrought descriptive poems in the most finished style. They are charming portraits of Nature in some after pleasant and striking moods, and for soberness of thought and accuracy of representation they will be a comparison with anything in the whole reason of literature. In them critics will seek in, vain for that idle accumulation of hyperbolical conceits which characterizes the Tamil poems of more modern times. It is to be hoped that as these immortal works of antiquity become better known and appreciated, that childish delight in riotous imagination which now passes for poetic taste will give way to a more sober-minded and judicious estimate of the true foundations at poesy.

*-Professor P.Sundaram Pillai Commemoration* Volume P.166

சங்க இலக்கியத்தில் ஒரு பகுதியான பத்துப்பாட்டை மேற் கூறியவாறு போற்றி நயம்பாராட்டும் சுந்தரம்பிள்ளை எந்த அளவுக்குத் தோய்ந்திருந்தால் இவ்வாறு எழுதியிருப்பார் என ஊகித்து அறிதல் நன்று. இது அவர் நமக்கு எழுதினார் என்பதைவிடப் பிறமொழி அறிஞர்களுக்குப் பத்துப்பாட்டுப் பெருமைகளைத் தெரிவிக்கவே எழுதினார் என்பது பொருந்தும்.

ஆசிரியர் சுந்தரம்பிள்ளையால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இக்கட்டுரை, கழகம் 1957, ஜூன் திங்களில் பெ. சுந்தரம்பிள்ளை நினைவு விழா மலரில் வெளியிடப் பெற்றது என்பது குறிப்பிடத் தக்கதாகும். முதன் முதலில் சென்னைக் கிறித்துவக் கல்லூரி இதழில் (1890-1892) இக்கட்டுரைகள் வெளி வந்தன.

இது, உ.வே.சா. அவர்களின் 'பத்துப்பாட்டு' பதிப்பிற்குப் பேராசிரியர் நிலையிலான திறனாய்வே இக்கட்டுரைகள்.

பத்துப்பாட்டுக்கள் பற்றிய பொதுவான செய்திகள், திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி என்னும் மூன்று பாக்கள் பற்றிய கருத்துக்கள், ஆற்றுப்படை இலக்கணம் கூறல், ஆற்றுப்படையின்மைய இலக்கணத்திலிருந்து மாறுபடும் திருமுருகாற்றுப்படை வழி ஆற்றுப்படைகளின் காலம் கூறுதல் இவ்வாராய்ச்சியில் இவர் மேற்கொண்ட பணிகளாகும்.

நக்கீரர், சம்பந்தர் எனுமிருவர் வாழ்ந்த காலங்களும் நீண்ட இடைவெளியுடையன அல்ல என்னும் சுந்தரம்பிள்ளையின் கருதுகோளே, நக்கீரர் காலமறியும் முயற்சியில் அடுத்து சம்பந்தர் காலத்தினை ஆய்வுக்குட்படுத்துகிறார். பத்துப்பாட்டு பற்றிய ஆய்வுணர்வே சுந்தரம்பிள்ளையின் கால ஆராய்ச்சிக்கு வித்தூன்றியது எனலாம்

நக்கீரர் சம்பந்தருக்கு இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகள் முந்தியவர் என்றும் ஏனைய ஆற்றுப்படை இலக்கியத்தினின்றும் மாறுபட்டு மானுடம்பாடும் நிலையிலிருந்து உள்நோக்கி இறைபாடல் பொருளாக உள்ளதால் ஏனைய ஆற்றுப்படைகளில் இருந்து வேறுபட்டு முருகாற்றுப்படை பிற்பட்ட காலத்தில் எழுந்தது. ஏனைய ஆற்றுப்படைகள் ஐந்து முதல் ஒன்பதாம் நூற்றாண்டளவில் தோன்றின என வரையறை செய்துள்ளார்.

இது குறித்து க கைலாசபதி குறிப்பிடும்போது, 'உண்மையில் அவரது ஆய்வுக் கட்டுரைகளே பின்வந்தோருக்குத் தூண்டுகோலாகவும், வழிகாட்டியாகவும் அமைந்தன. அக்காலத்துத் தமிழ்த்துறை அறிஞர்கள் ஆய்வுகளைத் தாங்கி வெளிவந்த சென்னைக் கிறித்துவக் கல்லூரித் திங்கள் இதழ்களிலே முதலிற் கட்டுரையாக வரையப்பட்டு பின்னர் நூல்வடிவம் பெற்ற மூன்று ஆய்வுக் கட்டுரைகள் குறிப்பிடத் தக்கன பத்துப்பாட்டு என்னும் பொருள் பற்றிப் பொதுவாகவும் நெடுநல்வாடை பற்றிச் சிறப்பாகவும் நயந்துரைக்கும் 'The Ten Tamil Idyls' - என்ற கட்டுரை இன்றும் ஆராய்ச்சி மாணவருக்கு விருந்தாக உள்ளது'' என்று குறிப்பிட்டுள்ளார்

தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பேணி வந்தமை போலவே, இவர் பண்டைய தமிழ் இலக்கியச் சுவையையும் பேணினார். பலரும் இச்சுவையை அனுபவித்து தமிழின் பெருமையை நன்குணர வேண்டும் எனக் கருதினார் தமிழ் மக்கள் மட்டுமேயன்றிப் பிற நாட்டு மக்களும் இந்நுகர்ச்சிப் பயனைப் பெற வேண்டும் என்றும் விரும்பினார். எனவே, பண்டைய இலக்கியங்களில் பெருஞ்சுவையுள்ளனவற்றைத் தெரிந்தெடுத்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டனர். இவையும் முதன்முதலில் சென்னை கிறித்துவக் கலாசாலைப் பத்திரிக்கையில் வந்தன. பிறகு, 'தமிழ்ப் புராதனக் கலைஞன்' (Tamilian Antiquary) - என்ற தொகுதியின் வாயிலாக வெளியிடப்பட்டன. முருகாற்றுப்படை, நெடுநல்வாடை, மதுரைக் காஞ்சி இம்மூன்றும் இங்ஙனம் சுவைபட மொழி பெயர்க்கப்பட்டவை. இவற்றால் சுந்தரம் பிள்ளையின் ஆழ்ந்த கல்வியும், கவிச்சுவையின் நயத்தை உணரும் பேராற்றலும், அதனைக் கற்போர் மனங்கொள்ளுமாறு ஆங்கிலத்தில்

அழகுற விளக்கும் எழுத்து வன்மையும் புலனாகும் என்பார் எஸ். வையாபுரிப் பிள்ளையும்

Hobbes, the Father of English Ethics

'ஹாப்ஸ் - ஆங்கில அறவியலின் தந்தை' என்பது தமிழ் மொழிபெயர்ப்பு. 1894-1895 ஆம் ஆண்டுகளில் சென்னைக் கிறித்தவக் கல்லூரி இதழ்களில் இது வெளியிடப்பெற்றது.

ஆங்கில அறவியலின் தந்தையாகக் கருதப்படும் ஹாப்ஸின் அறக்கருத்துக்களின் ஆழம், யாவற்றையும் தன்னுள் அடக்கும் பரப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, ஹாப்ஸே அறவியலின் தந்தை என்று, ஹாப்ஸின் அறக்கருத்துக்களின் தரம், அதன் வன்மை மென்மைகளைப்பற்றி ஆழமாக ஆராய்ந்த பின்பே, சுந்தரம்பிள்ளை, ஹாப்ஸே இதற்குத் தகுதியுடையவர் என்கிறார்.

Bentham, The Juristic Moralist

'பெந்தம் நீதிநெறியியல் நன்னடையாளர்' என்பது தமிழாக்கம் மேனாட்டுத் தத்துவத்தில் பயனிலைவாத கொள்கையினைப் பேசுபவர் ஜெர்மி பெந்தம். 1890இல் பெந்தமின் தத்துவங்கள் கொள்கைகள் அறிஞரின் ஆய்வுப் பொருளாக இருந்தன என்பதைக் கூறும் சுந்தரம்பிள்ளையின் இக்கட்டுரையும், சென்னை கிறித்துவக் கல்லூரி இதழில் வெளியான எஸ். சத்தியநாதனின் (Bentham as a Moralist) என்ற கட்டுரையும் தெளிவாக்குகின்றன.

The Date of Nambi Andar Nambi

நம்பியாண்டார் நம்பி கால ஆராய்ச்சி பன்னிரு திருமுறைகளுள், பதினோரு திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பியின் கால ஆராய்ச்சி சைவசமயக் குரவர்களின் காலக்கீழ் எல்லையை வரையறுப்பதில் இன்றியமையாப் பங்கு இருப்பதாலும் சைவத் திருமுறைகள் தொகுக்கப்பட்ட காலத்தை அறிய உதவுவதாலும் ஆராய்ச்சியாளர் கவனத்தை இது காலம் தோறும் கவர்ந்து வந்தது சுந்தரம்பிள்ளை முதல் மு. அருணாசலம் வரைப்பலரும் இலக்கிய, கல்வெட்டு தொல்பொருள் சான்றுகள் அடிப்படையில் ஆராய்ந்தனர். சோமசுந்தர தேசிகன், சதாசிவ பண்டாரத்தார் ஆகியோரும் 'செந்தமிழ்' இதழில் தனித்தனியே நம்பியாண்டார் நம்பி காலம் குறித்துக் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

'தத்தாநமரேகாண்' என்ற செப்புப் படிவ வாசகத்தை வைத்துக் கொண்டு பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, இராஜராஜ சோழன் காலமே நம்பியாண்டார் நம்பியின் காலம் என முடிவுக்கு வருகிறார்.

Miscellaneous Travancore Inscriptions

பலதரப்பட்ட திருவிதாங்கூர்க் கல்வெட்டுக்கள் என்பது இதன் பொருள்.

திருவிதாங்கூர் பற்றிய தம் ஆராய்ச்சிகளில் திரட்டிய பலதிறப்பட்ட கல்வெட்டுக்கள் இவ்வகையில் வருகின்றன. கோயில் மக்கள் பற்றிய செய்திகள் இதில் அடங்கும். மலபாரின் ஆண்டு ஆகிய கொல்லம் பற்றிய ஆய்வு இதில் குறிப்பிடத்தக்கதாகும் கொல்லம் என்னும் சொல்லாட்சி, இந்த ஆண்டின் தொடக்கம், இங்கு இன்றியமையாமை பெறுகிறது

இதுகாறும், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை தொட்ட எதையும் தொடர்மல் விடக்கூடாது என்ற உறுதியில் முழுமையாகச் சொல்ல இயலாது எனினும் அவற்றை வெளியே கொண்டு வர வேண்டும் என்ற வேட்கையில், அவரது பிற எழுத்தோவியங்கள் இங்குப் பேசப்பட்டன.

# முடிவுரை

**நா**ஞ்சில் நாடு தந்த நற்றமிழர், கொடுமலையாளக் குடியிருப்பிருந்த, தமிழின் மலர்ச்சி நாயகர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை 5.4.1855 முதல் 26 4.1897 வரை நாற்பத்திரண்டு குறை ஆயுளில் நிறைவாழ்வு வாழ்ந்த மகான்

ஞானசம்பந்தரைப் போல், சுவாமி விவேகானந்தரைப்போல், மகாகவி பாரதியைப் போல் தம் வாழ்நாட்களைத் தொண்டுகளால் மட்டும் நிறைத்தவர். தனது நவீனக்கவிதை நாடகத்திற்கு மனோன்மணீயம் என்று அற்புதப் பெயர் சூட்டியவர். மனோன்மணீ - இவள் ஆன்மாக்களின் மலங்களை நீக்கிச் சிவானந்தத்தைத் தரும் சிவசக்தி. இவள் பரமசிவத்தை நீங்காது இருப்பவள். அத்தகைய பெயரைத் தனது நாடகத்திற்குச் சூட்டியதால்தான் இந்த நாடகம் உலகப் புகழ்பெற்றது.

திராவிட எழுச்சியும் உணர்ச்சியும் பொதுளிய இவரின் தமிழ்த் தெய்வ வணக்கப்பாடல் எழுபதுகளில் தமிழக அரசு விழாப்பாடல் ஆனது. இவர் பெயரில் நெல்லையில் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் எண்பத்தொன்பதுகளில் தொடங்கியது. திருவனந்த புரத்தில் இவர் தொடங்கிய சைவப் பிரகாச சபையின் நூற்றாண்டு விழாவில் (செப்டம்பர் 20-24, 1985) இவர் பெயரில் அறக்கட்டளை தோற்றுவிக்கப்பட்டது. இனி என்ன செய்ய வேண்டும் - மாபெரும் இத்தத்துவ ஞானியின் உருவம்பொறித்த அஞ்சல் தலையை இந்திய அரசு வெளியிட்டால், அது மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் புகழ் மகுடத்தில் அது ஒரு மாணிக்கச் சுடராக ஒளிரும்!

*சித்திரம் வரைந்து காண்போம்*
*சிலைகண்டு தொழுது நிற்போம்;*
*சத்திரம் கட்டி வைப்போம்*
*தருமங்கள் பலவும் செய்வோம்;*
*வித்தகன் சுந்தரன் பேர்*
*மெய்மையாய் விளங்க வைத்தல்,*
*இத்தமிழ் நாட்டில் வாழும்*
*எம்மனோர் கடமை அன்றோ?*

ஆம். கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளையவர்களின் வழிகாட்டு தலின்படி மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் புகழ்ஒளி மேலும் பரவ ஆவன செய்வது நம் கடமை.

# வாழ்க்கைக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| 1855 | ஏப்ரல் 5 | கேரள மாநிலம் ஆலப்புழையில் பிறந்தார். |
| 1876 | (21ஆம் வயதில்) | திருவனந்தபுரம் பேரரசர் கல்லூரியில் பி.ஏ. முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். அங்கேயே ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பையும் பெற்றார். |
| 1877 | | சிவகாமியை மணந்தார் |
| 1878 | | அன்னையார் மறைந்தார். |
| 1879 | | திருவனந்தபுரம் பேரரசர் கல்லூரியில் தத்துவத்துறைப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். |
| 1880 | | எம். ஏ. தேர்வில் வெற்றி பெற்றார். |
| 1882 | | திருவனந்தபுரம் அரண்மனையில் 'பிறவகை சிராஸ்தார்' என்ற பதவியை ஏற்றார். |
| 1885 | | திருவனந்தபுரத்தில் சைவப்பிரகாச சபை தோன்றக் காரணமாக இருந்தார். |
| 1886 | | தந்தையார் மறைந்தார். |
| 1887 | | திருநெல்வேலியில், மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரித் தலைவராகப் பொறுப்பேற்றார். |
| 1888 | | 'சாத்திரசங்கிரகம் என்னும் நூற்றொகைவிளக்கம்' என்ற நூலை வெளியிட்டார். |
| 1891 | | மனோன்மணீயம் எனும் நவீன நாடகத்தை எழுதி வெளியிட்டார். இதே ஆண்டில் சென்னைப் |

| | | |
|---|---|---|
| | | பல்கலைக் கழகத்தாரால் உயர் கலைக் கழக உறுப்பினராக(Fellow of Madras University)நியமிக்கப்பட்டார். இதே ஆண்டு மார்ச்சு 10இல் அருமை மகன் பெ.சு.நடராசப் பிள்ளை பிறந்தார். |
| 1893 | | 'மனோன்மணீயம்' நாடக நூல் கல்லூரிகளில் முதன்முதலாகப் பாடநூலாக வைக்கப்பட்டது. |
| 1894 | | 'திருவிதாங்கூர் மன்னர்களின் சில பழைய வரலாறுகள்' எனும் ஆங்கில நூலை வெளியிட்டார். |
| 1895 | | தமிழ் இலக்கிய வரலாற்றில் சில மைல் கற்கள் அல்லது திருஞான சம்பந்தரின் காலம் என்ற நூலை வெளியிட்டார். |
| 1896 | | அப்போதைய சென்னை அரசு 'ராவ்பகதூர்'எனும் பட்டத்தை வழங்கியது. இதே ஆண்டில் பிரிட்டிஷ் அரசு தென்னிந்திய வரலாற்றாய்விற்காக 'ராய் பகதூர் (Rai Bahadur)என்ற பட்டத்தை வழங்கியது. |
| 1897 | ஏப்ரல் 26 | புகழுடம்பை நிறுவித் தன் பூதவுடம்பை நீத்தார். |

# பின்னிணைப்பு

1. மனோன்மணீயம் பெ.சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றிய 'நீராரும் கடலுடுத்த' என்னும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை அரசு நிகழ்ச்சிகளில் இசைக்க வேண்டும் எனத்தமிழக அரசு பொதுத் துறையின் மூலம் கீழ்கண்ட ஆணை வெளியிட்டது.

GOVERNMENT OF TAMIL NADU
1971.

PUBLIC (POLITICAL) DEPARTMENT

## Memo. No. 3584/70-4, 23rd November 1970

Prayer Song—Singing of Tamil piece from "Manonmaneeyam", written by Thiru P. Sundaram Pillai as prayer song at the commencement of all functions organised by Government Departments, Local bodies and educational institutions—Tune in which the song is to be sung—Orders issued.

READ—the following papers :—

G.O. Ms. No. 1393, Public (Political), dated 17th June 1970.

**Memo. No. 3584/70-4, Public (Political), dated 23rd November 1970.**

In the Government Order cited, orders were issued that the piece from "Manonmaneeyam", written by Thiru P. Sundaram Pillai mentioned therein, should be sung as a prayer song at the commencement (and not at the end) of all functions organised by Government Departments, Local Bodies and educational institutions.

2. The Government now direct that the above prayer song should be sung in the Raga "Mohanam" (ராகம்—மோகனம்) and in the Thisra Tala (தாளம்—திஸ்ரம்) as composed by Thiru M. S. Viswanathan. A copy of the song with the swaras as composed by Thiru M. S. Viswanathan is appended to this order for guidance.

T. V. VENKATARAMAN,
*Joint Secretary to Government.*

To all Heads of Departments (including Collectors), District Magistrates, District Judges and Superintendents of Police.
" " Departments of Secretariat (all Sections).
" the Registrar, High Court, Madras-1 (with covering letter).
" " Secretary, Tamil Nadu Public Service Commission, Madras-2 (with covering letter).
" " Secretary, Tamil Nadu State Housing Board, Madras (with covering letter).
" " Secretary, Tamil Nadu Khadi, Village Industries Board, Madras (with covering letter).
" " Commissioner, Corporation of Madras, Madras 3 (through Mayor).
" " Commissioners of Municipalities and Panchayat Unions (through Chairmen).
" " Executive Officers of Town Panchayats (through President).
" " Director of Information and Publicity-in-charge, Madras-9.
" " Public Relations Officer, Rural Development and Local Administration Department
(with enclosure to all).

## II மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் பரம்பரை வரலாற்று வரைபடம் ( Graphs)

பெருமாள் பிள்ளை — மாடத்தியம்மாள்

பெ. சுந்தரம் பிள்ளை — சிவகாமி
5.4.1855 – 26.4.1897

பெ.சு.நடராச பிள்ளை — லட்சுமி அம்மாள் — கோமளாம்பாள்
*10.3.1891- 10.1.1966*

ந. சுந்தரம் (லேட்)
ந. வெங்கிடேசன்

மனோன்மணீ (லேட்)
மனோகரம்
மகேஸ்வரி
மங்களேஸ்வரி

ந. திருஞானசம்பந்தம்

மாலதி
மாயாவதி
மாதங்கிரி
மாராகினி
மாதவி

## III மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் சாத்திர சங்கிரகம் என்னும் நூற்றொகை விளக்கம் நூலில் உள்ள நூல் வகுப்பு

- இயற்கைஅறிவினுயர்ந்த நூல்
  - பேரறிவு விஷயம் மதநூல்
- இயற்கை அறிவிற்றாழ்ந்த நூல்
  - இயற்கை அறிவாகிய சிற்றறிவு விஷயம் பொது நூல்
    - முதனூல்
      1. தத்துவநூல்
      2. கணிதநூல்
      3. சத்தி நூல்
      4. இரசாயன நூல்
      5. உயிர் நூல்
      6. உள நூல்
    - வழி நூல்
      - சோதிடநூல்
      - பௌமிய நூல்
      - வியாகரணம்
      - இவை போல்வன
    - சார்பு நூல்
      - தருக்கநூல்
      - தரும நூல்
      - சிற்ப நூல்
      - நாவீகம்
      - தனுர் வேதம்
      - ஆயுள் வேதம்
      - இவை போல்வன.
  - புலனறிவு விஷயம் கலை நூல்
    - பொதுக்கலை
      - சாதாரண கலை
      - நற்கலை
        - கீதம்
        - சித்திரம்
        - கவி
        - இவை போல்வன
    - யோகக்கலை
      - அஷ்டாங்க யோகம்
      - ஞான யோகம்

# IV மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் படைப்புகள்

## தமிழ்

| | | | |
|---|---|---|---|
| 1. | அன்பின் அகநிலை | விவேகசிந்தாமணி | 1895 |
| 2. | அன்பின் அகநிலை | செந்தமிழ்ச்செல்வி | 1959 |
| 3. | அன்பைப் பற்றிய பாடல்கள் | செந்தமிழ் | 1915 |
| 4. | ஒரு நற்றாயின் புலம்பல் | விவேக சிந்தாமணி | 1895 |
| | | செந்தமிழ்ச் செல்வி | 1951 |
| 5. | சிவகாமி சரிதம் | முதல் பதிப்பு - கழகம் | 1889 |
| | | இரண்டாம் பதிப்பு- கழகம் | 1933 |
| 6. | பொதுப் பள்ளியெழுச்சி | விவேக சிந்தாமணி | 1895 |
| | | செந்தமிழ்ச் செல்வி | 1933 |
| | | செந்தமிழ்ச்செல்வி | 1952 |
| 7. | மனோன்மணீயம் (நவீன நாடகம்) | முதல் பதிப்பு | 1891 |
| | | இரண்டாம் பதிப்பு பதிப்பாசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை | 1922 |
| 8. | கவிதைமடல் (கோட்டாறு கவிஞர் கணபதி ஆச்சாரிக்கு மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை எழுதியது) | | |
| 9. | புஷ்பங்களும் அவற்றின் தொழில்களும் | விவேக சிந்தாமணி | 1892 |
| | | செந்தமிழ்ச் செல்வி | 1929 |
| 10. | மரங்களின் வளர்ச்சி | விவேகசிந்தாமணி | 1892 |
| | | செந்தமிழ்ச் செல்வி | 1933 |
| 11. | ஜீவராசிகளின் இலக்கணம் | விவேக சிந்தாமணி | 1892 |
| | | செந்தமிழ்ச் செல்வி | 1928 |

| | | | |
|---|---|---|---|
| 12. | சாத்திர சங்கிரகம் என்னும் நூற்றொகை விளக்கம் (பொதுவியல்) | முதல் பதிப்பு<br>இரண்டாம் பதிப்பு | 1888<br>1936 |
| 13. | உரைநடை மடல் (டாக்டர் உ.வே. சாமிநாத ஐயருக்கு மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை எழுதியது) | | 29.11 1896 |

## English

**Critical Essays**

| | | | |
|---|---|---|---|
| 1. | The Ten Tamil Idylls | Madras Christian College Magazine | 1890-91 |
| 2. | The Ten Tamil Idylls | Madras Christian College Magazine | 1891-92 |
| 3. | Hobbes - The Father of English Ethics | Madras Christian College Magazine | 1894-95 |
| 4. | Bentham, The Juristic Moralist | Madras Christian College Magazine | 1895-96 |

**Research Works**

| | | | |
|---|---|---|---|
| 1. | The Date of Nambi Andar Nambi | V. Venkaya and P. Sundaram Pillai Madras Christian College Magazine | 1896-97 |
| 2. | Some Early Sovereigns of Travancore | | 1894 |
| 3. | History of Tamil Literature<br>(or)<br>The age of Tirunjnana Sambandhan | | 1895 |

V. திருவனந்தபுரம் - சைவப்பிரகாச சபைக் கட்டட நிர்மானக் கல்வெட்டு



VI. புதுச்சேரியைச் சேர்ந்த 'நாடக நன்மணி' வித்துவான் கோ இராதா தன் 'புதுவை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் இயல்இசை நாடக சபா'வின் மூலம் மனோன்மணீயம் நாடகத்தை உரைநடைப்படுத்தி மேடை நாடகமாக இயக்கி 1984இல் முதன் முதலாக அரங்கேற்றினார். இதுவரை (29.07 2001) 124 முறை பல்வேறு இடங்களில் அரங்கேற்றிச் சாதனை புரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

VII. துணை நூற்பட்டியல்
(Bibliography)


## தமிழ்

| | | | |
|---|---|---|---|
| 1. | அபிதான சிந்தாமணி | ஆ.சிங்காரவேலு முதலியார்- முதற்பதிப்பு | 1910 |
| 2. | 'இரசிகமணி' டி.கே.சியின் திறனாய்வுப் போக்கு | பேராசிரியர் ந. பால முருகன் | 1983 |
| 3. | இலக்கிய வரலாறு இரண்டாம் பகுதி | கா.சு பிள்ளை | |
| 4. | ஒப்பியல் இலக்கியம் | க.கைலாசபதி | |
| | | முதற்பதிப்பு | 1969 |
| | | இரண்டாம் பதிப்பு | 1928 |
| | | மூன்றாம் பதிப்பு | 1982 |
| 5. | கண்ட காட்சியும் கொண்ட கருத்தும் | கவிமாமணி பி.குமரேசன் | 2000 |
| 6. | சிறப்புப் பெயரகராதி | கருப்பக்கிளர் சு.அ.இராமசாமிப் புலவர் | 1970 |
| 7. | தமிழ் சினிமாவின் கதை | அறந்தை நாராயணன் | |
| 8. | தமிழ்ச் சுடர்மணிகள் | எஸ். வையாபுரிப் பிள்ளை,பி.ஏ., பி.எல்., | |
| | | முதற்பதிப்பு | 1949 |
| | | இரண்டாம் பதிப்பு | 1952 |
| | | மூன்றாம் பதிப்பு | 1959 |
| | | நான்காம் பதிப்பு | 1968 |
| 9. | திராவிட இயக்கத்தின் தோற்றம் | இராசேந்திரன் | |
| 10. | நெஞ்சுக்கு நீதி (இரண்டாம் பாகம்) | கலைஞர் மு. கருணாநிதி | |
| | | முதல் பதிப்பு | 1987 |
| | | இரண்டாம் பதிப்பு | 1994 |

| | | | |
|---|---|---|---|
| 11. | பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் (தொகுதி - 2) | பம்மல் சம்பந்த முதலியார் | 1998 |
| 12. | பல்கலைச் செல்வர் சுந்தரனார் | கவிமாமணி பி.குமரேசன் | |
| | | முதற் பதிப்பு | 1992 |
| | | இரண்டாம் பதிப்பு | 1994 |
| | | மூன்றாம் பதிப்பு | 1995 |
| 13. | மலரும் மாலையும் | கவிமணி சி.தேசிக விநாயகம் பிள்ளை | |
| | | முதற் பதிப்பு | 1938 |
| | | பன்னிரெண்டாம் பதிப்பு | 1967 |
| 14. | 'மனோன்மணீயம் சுந்தரனாரின் புரட்சி திறன்' | டாக்டர் கா.மீனாட்சி சுந்தரம் | 1997 |

**மலர்**

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு விழா மலர், தஞ்சாவூர் 1995

சைவப் பிரகாச சபை, திருவனந்தபுரம் - நூற்றாண்டு விழா மலர் 1985

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை நூற்றாண்டு விழா கருத்தரங்கு மலர் 1991

சைவப்பிரகாச சபை, திருவனந்தபுரம் - கருத்தரங்கு மலர் 1983

சைவப்பிரகாச சபை, திருவனந்தபுரம் கருத்தரங்கு மலர் 1994

சைவப் பிரகாச சபை, திருவனந்தபுரம் கருத்தரங்கு மலர் 1995

சைவப் பிரகாச சபை, திருவனந்தபுரம் கருத்தரங்கு மலர் 2001

*Professor P.Sundaram Pillai Commemoration Volume* - 1957

**இதழ்**

தமிழரசு - 1.7.1970 - தமிழ்நாடு அரசின் மாதம் இருமுறைத் தமிழ் ஏடு

பி.யூ. சின்னப்பா - எஸ்.வி. ஜெயபாபு, 2001

**கலைக்களஞ்சியம்**

கலைக்களஞ்சியம் 10வது தொகுதி - தமிழ்வளர்ச்சிக் கழக வெளியீடு 1968

## ஆய்வுக்கோவை

1. தமிழ் இலக்கிய ஆய்வுக் கோவை தொகுதி II 1987
2. தமிழ் இலக்கிய ஆய்வுக் கோவை தொகுதி II 1988
3. இந்தியப் பல்கலைக்கழகத் தமிழ் ஆசிரியர் மன்ற இருபதாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை தொகுதி I 1988
4. இந்தியப் பல்கலைக்கழகத் தமிழ் ஆசிரியர் மன்ற இருபத்து மூன்றாம் கருத்தரங்கு ஆய்வுக்கோவை தொகுதி II 1992
5. இந்தியப் பல்கலைக் கழகத் தமிழ் ஆசிரியர் மன்ற இருபத்தேழாம் கருத்தரங்கு ஆய்வுக்கோவை தொகுதி II 1996
6. இந்தியப் பல்கலைக் கழகத் தமிழ் ஆசிரியர் மன்ற முப்பத்தோராம் கருத்தரங்கு ஆய்வுக்கோவை தொகுதி I 2000

## ஆய்வேடு

மனோன்மணியம் சுந்தரனார் படைப்புகள் - ஒரு திறனாய்வு
(பி.எச்.டி. பட்ட ஆய்வேடு)
எம். ஷீலா
ஆய்வாளர்
கேரளப் பல்கலைக் கழகம், செப்டம்பர் 1997

**மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை:** (1855-1895) சிறந்த தமிழுணர்வும் வரலாற்று ஆய்வில் காதலும் மிக்கவராகத் திகழ்ந்தார். நாடகம், கவிதை, ஆராய்ச்சி, உரைநடை, ஆங்கில நூலாக்கம் ஆகிய களங்களில் நூல்களை யாத்துள்ளார். மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை தன் படைப்புக்களில் மெய்ப்பொருளியலையும், ஆன்மீகத்தையும் நீரோட்டமாகக் கொள்ளத் தவறவில்லை. மனோன்மணீயம் என்ற அழகியல் தவழும் நாடகத்தோடு வேறுபல இலக்கிய உத்திகளைக் கையாண்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு பிறகு, என்றென்றும் நிலைத்து நிற்கும் வண்ணம் நிறுவியவர் என்பது வெள்ளிடை மலை.

**பேராசிரியர் ந. வேலுசாமி:** இந்நூலாசிரியர் இதுவரை பதினான்கு நூல்களை எழுதியுள்ளார். தேசிய விருதும், தமிழக அரசின் பரிசும் பெற்றுள்ளார். அரிசோனா உலகப் பல்கலைக்கழகத்தில் இலக்கியத் திற்காக **டி.லிட்.,** பட்டம் (1982), இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் வழங்கிய **ஆய்வியல் களஞ்சியம்** என்ற பட்டத்தையும் (2001) பெற்றுள்ளார். கல்லாமையை இல்லாமையாக்கும் அறிவொளி இயக்கத்தில் பணியாற்றி 'இந்தியாவில் அறிவொளி இயக்கம்' என்ற ஆராய்ச்சியைச் செய்துள்ளார். மொரீஷியஸ், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குக் கல்வி மற்றும் தமிழ் வளர்ச்சி தொடர்பாகச் சென்று வந்துள்ள இவர் தற்போது ஈரோடு கலைக்கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றுகிறார்..

*Manonmaneeyam Sundarampillai* (Tamil) Rs. 25

ISBN - 81 - 260 - 1129 - 7

**இருபத்திரண்டு இந்திய மொழிகளில் நூல்கள் வெளியிடும் சாகித்திய அக்காதெமி, உலகிலேயே மிகப் பெரியவெளியீட்டகம்.**